www.padippkam.com

# புதிய கோடாங்கி



மே 2001 1-1 ரூ. 15/-

படிப்பகம்

www.padippkam.com

புதிய

# கோடாங்கி

(மாத இதழ்)

## சந்தா விவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | 15.00 |
| ஆண்டுக் கட்டணம் | 150.00 |
| வாழ்நாள் கட்டணம் | 1,000.00 |

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| அரைப் பக்கம் | 5,000.00 |
| முழுப் பக்கம் | 10,000.00 |
| பின் அட்டை | 20,000.00 |

தொடர்பு முகவரி :
புதிய கோடாங்கி
எம்.ஜ.ஜி. 518, என்.எச்.1,
7 (ப.எண்.15), இளந்திரையன் தெரு,
மறைமலை நகர் - 603 209. காஞ்சிபுரம் மாவட்டம்.
மின் அஞ்சல் : kodangi_ajj@yahoo.com

படிப்பகம்

www.padippkam.com

# புதிய
# கோடாங்கி

மே 2001

அம்பேத்கர் பிறந்தநாள் எழுச்சியுற்ற தலித்களாலும் தலித் அமைப்புகளாலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தொலைக்காட்சி அம்பேத்கர் கருத்துக்களை வாய்ப்புப் பெற்ற தலித்துகளின் வாயால் சொல்லக் கேட்டதோடு நிறுத்திக்கொண்டது. இப்போதுள்ள நிலைமையின் விமரிசனங்கள் மீது கரிசனம் ஏதுமின்றி சடங்குத்தனமாகக் கொண்டாடுவதை பல்வேறு பத்திரிக்கைகளும், அரசியல் கட்சிகளும் மேற்கொண்டன.

கொல்லைப் புறமாக வந்து தி.மு.க.வுடன் கைகோர்த்துக் கொண்ட தலித் கட்சிகள் சில சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு எதிர்கட்சியாகவோ, ஆளும் கட்சியாகவோ சாகஸம் நிகழ்த்தப் போகிறார்கள். சென்றவாரம் கோடாங்கியில் வெளியான உஞ்சைராசன் கட்டுரை தலித் கட்சிகள் தேர்தலில் குதிப்பதை நியாயப்படுத்தி விளக்கமளித்தது. அது சரிதான். குதித்துவிட்டதால் சில, பல, சமரசங்களை ஏற்படுத்திக் கொண்டது, கொள்வது, தவிர்க்கமுடியாதது எனும் பட்சத்தில் அம்பேத்கரின் சிந்தனைகள் உறுதியுடன் முன்வைக்கப்படும் என்பதின் ஐயப்பாடு எழுந்துள்ளது.

வரும் தேர்தலில், தலித்தை மையப்படுத்தி சாதி ஒழிப்பை முன்வைக்கும், தலித்துகளின் மீது நிகழ்த்தப்படும் ஒடுக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும், விளிம்புநிலை மனிதரின் பொருளாதார மேம்பாட்டை முன்மொழியும் தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் அமையும் கூட்டணிதான் நாம் வேண்டுவது. சீட்டுக்களைப் பெற்று சட்டமன்றத்தில் கூச்சல் போடுவதற்கான கூட்டணி அல்ல. தலித் அமைப்புக்கள் இரண்டும், மூப்பனாரையோ கருணாநிதியையோ சாட்சியாக வைத்துக்கொண்டு சேரும் கூட்டணியை அல்ல. தலித்துக்கள் அனைவரும் கைகோர்த்துக்கொண்டு, பிற்பட்டவர்களை பலம் சேர்த்துக்கொண்டு அமையும் கூட்டணியைத்தான்.

சேர்ந்துவிட்டார்களல்லவா, எப்படிச் சேர்ந்தால் என்ன என்று கேட்பவர்களைப் பார்க்க முடிகிறது. படுகொலைகளுக்குப் பிறகு கமிஷன் அமைப்பதுதான் இக்கூட்டணியால் சாத்தியம். படுகொலைகள் வராமல் தவிர்ப்பதற்கல்ல.

தலித்துக்கள் நாடெங்கும் பொங்கும் எழுச்சியை சாசுவதமாக்க, தொடர்ந்து விழிப்புடனும், விமரிசனக் கண்ணோட்டத்துடனும் செயல்பட வேண்டும். இயக்கங்கள் சனநாயக முறையில் செயல்பட வேண்டும்.



படிப்பகம்

## உள்ளே

பக்க எண்

1. அடையாளம் : அதிகாரம் 3

2. உன் தீயும் நானும் 5

3. யாருக்காவது 6

4. தமிழ் மின்னிதழ்கள்-தொலை நோக்குடன் ஒரு மீள்பார்வை 7

5. சாம்பல் நிறப்பறவை 14

6. சென்றுவா இருபதாம் நூற்றாண்டே 15

7. குத்துச்செடிகள் 35

8. கருத்தம்மாவின் பேட்டி 36

9. இந்தியா-சாணக்குவியல் மேல் அரண்மனை 41

10. பி.ஜே.பி. அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை 48

11. அடைப்புக்குறிகளுடன் அலையும் அரசியல் நாய்கள் 50

12. வழக்கொழிந்த புன்செய்ப் பயிர்கள் 52

13. வரலாற்றுச் சிந்தனைகள் 55

14. புத்தர் சிலைகளும் இந்துத்துவக் கரிசனமும்
இதுதாண்டா முதலைக் கண்ணீர் 58

15. தி.க.சி.க்கு விருது: சர்ச்சையை
உருவாக்கும் இலக்கிய 'அத்தாரிட்டி'கள் 61

16. மார்ச் மாத மாமிகள் 63

www.padippkam.com

# அடையாளம் : அதிகாரம்

ப்ரதிபா ஜெயச்சந்திரன்

விரசாலர்களால் (முஸ்லீம்களால்) ஒடுக்கப்பட்ட பிராமணர்கள் பயத்தால் நடுங்கி, தங்களைக் காப்பாற்ற யாருமே இல்லை என்பதை உணர்ந்து துக்கத்தோடும், துயரத்தோடும் மனவேதனையோடும் உலகம் முழுதும் சுற்றித் திரிந்து அலைந் தார்கள். (மகாபாரதம் அத்-190; பாடல்-59)

இந்தியாவில் இஸ்லாமியப் படையெடுப்பிற்குப் பின்னர் சிதறிச் சின்னாபின்னமாகிப் போன பிராமணர்கள் இன்று இந்திய அரசியல் அதிகார பீடத்தில் அமருமளவிற்கு உயர்ந்திருப்பதற்கான காரணத்தை ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டு வரலாற்றுப் பின்னணியில் பார்க்க வேண்டும்.

''இனியும் மக்கள் தனிவகை அடையாளங்களுடன் இருப்பது சாத்தியமில்லை... பிறரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். அங்கீகரிக்கப்படவில்லை என்ற உணர்வு இறுக்கத்தையும் பதட்டத்தையும் உருவாக்குகிறது'' என்று ஐரோப்பியர்களைப் பற்றி சார்லஸ் டெய்லர் கூறுகிறார்.

மேற்கத்திய கலாச்சாரத்தில் சிறுசிறு துண்டுகளாகப் பிரிந்து நிற்கும் நாடுகளுக்கிடையே, ஒரு நாட்டைச் சார்ந்தவன் என்ற பெயருடைய நேர்கோட்டு அடையாளத்தை முன்னிறுத்தலில் தங்களுக்குள்ளே அடையாளச் சிக்கல்களும், ஆதிக்க மனோபாவங்களும் வளர்ந்து, அந்த இனங்களுக்குள் மன அதிர்வுகள் உண்டாகின்றன. நம் இந்தியக் கலாச்சாரம் வேறு ஒரு வகையில் மிகவும் சிக்கலான - மொழிக்குள் மொழி (உதாரணம் - பிராமணத் தமிழ்) அனுசரிப்புகளில் உயர்வகை; நாடு X நாடு என்று எதிர் அணியை எதிர்கொள்வதற்கு மாறாக, நாட்டிற்குள் பன்முக நாடுகளாக, ஜாதிகளாகப் பிரிந்து; இவை தங்களுக்குள், தங்களின் அடையாள நிலைப்படுத்தலின் (establishment) வேட்கையில் இருக்கின்றன. நம் அரசியலும் ஜாதி அரசியலாகப் புதிய உருவாக்கம் பெற்றிருக்கிறது.

**அடையாளம் என்பது வேறு தளத்தில், ஆக்கிரமிப்பின் முகப்பாக இருக்கிறது - முத்திரை மோதிரம் போல.**

அடையாளம் என்பது வேறு தளத்தில், ஆக்கிரமிப்பின் முகப்பாக இருக்கிறது - முத்திரை மோதிரம் போல. அடையாளம் என்பதைத் தனித்தன்மைகள் என்கிற குறுகிய அர்த்தப்படுத்தலுக் குள்ளாக்கி விடுவதில்லை. அடையாளம் என்பது, இனம், மொழி, கலாச்சாரம் என்ற பல்வகைக் கூறுகளின் முனைப்பான வடிவம். முகம் அழிக்கப்பட்ட ஒன்றாக அடையாளங் கள் போய் விடுதலில் நிறைய சிக்கல்கள் உள்ளன. ஆனால் ஒரு பொதுவான, மனிதம் காத்தல் என்ற தளத்தில் நம் அடையாளங்களைக்களைய ஒவ்வொரு இனமும் முன்வர வேண்டும். அடையாளங்களைக் களைதலின் முனைப்பில் சுய பச்சாதாபம் ஒன்றும் தேவையில்லை. எவற்றைக் காவு கொடுப்பது என்ற கேள்விக்கு இடமில்லை. அதே வேளையில் காவு கொடுத்தலில் ஏற்படும் வெற்றிடத்தை எந்த உள்ளீடு கொண்டு நிரப்புவது? வெற்றிடமும், உள்ளீடும் மனப் பழக்கத்தால் ஏற்பட்ட ஒன்று. அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் இருத்தல் அவசியம். மதங்களின் சாராம்சங்கள் ஏறிப் போன மனம் காரணத்துடனோ, அன்றியோ, பற்றியிருத்தல் என்னும் பழக்கத்தில்; சடங்குகள், சம்பிரதாயங்கள் என்னும் குறியீட்டு நடைமுறைகளின் இழப்புகளை, பதிலிகளால் இட்டு நிரப்ப முயலும்.

கலாச்சாரம் சார்ந்த, இன, குழு அடையாளங்களை அங்கீகரிப்பதில் மேலும் சிக்கல்கள் உருவாகும்.

மாறாக, தனிமனிதத் தேடல், தனிநபர்களின் திறமை, கூட்டு முயற்சிகளுக்குக் கிடைக்கும் வெற்றி, இன்னும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்று பல்வேறு அறிவியல் துறை சார்ந்த அங்கீகாரங்கள் ஊக்குவிக்கப்படும்போது கலாச்சாரம் சார்ந்த ஜாதிகள் சார்ந்த அடையாளங்களின் அங்கீகாரத் தேடல்கள் பின்வரிசைக்குத் தள்ளப்பட்டு முற்றிலும் அழிந்துவிடக்கூடிய சாத்தியப்பாடுகள் ஏற்படலாம். ஆனால் இவை நடைமுறை சாத்தியமானது அல்ல.

இந்தியாவில், இஸ்லாமியப் படையெடுப்புக்கு முன்னர் பௌத்தம் தழைத்



படிப்பகம்

www.padippkam.com

தோங்கியிருந்தது. இஸ்லாமியப் படையெடுப்பு 'புத்'துக்கு எதிராக இருந்தது. 'புத்' என்னும் அரபுச் சொல்லின் பொருள் உருவச் சிலை என்பதாகும். இன்றைக்கும் காலிஸ்தான் தீவிரவாதிகள் புத்தர் சிலையை வெடிகுண்டு வைத்து தகர்த்தனர் என்ற செய்திகளை தினமும் படிக்க நேர்கிறது.

மனிதப் பிறப்பில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. அனைவரும் சமம் என்ற ஆன்மீகத்தையும், அன்பையும் வளர்த்த பௌத்த மதம் ஏறக்குறைய இந்தியா முழுவதும் பரவியிருந்த அதே வேளையில் பார்ப்பனீயம் இந்திய மத வரலாற்றில் முற்றிலும் தன் ஓட்டத்தை நிறுத்தி ஸ்தம்பித்து நின்று விட்டது. பிராமணர்கள் தங்கள் புரோகிதத் தொழிலை இழந்தனர். அப்போது நிகழ்ந்த இஸ்லாமியப் படையெடுப்பு பௌத்தத்திற்கும் பிராமணீயத்திற்கும் மாபெரும் சவாலாக இருந்தது. அப்போது பௌத்தம் அழிந்தது. பிராமணீயம் குற்றுயிராகக் கிடந்தது.



குழு, அடையாளங்கள், காலப் போக்கில் அதிகார மீட்டலுக்கான முக்கியப் போர்க் கருவிகளாக அமைந்து அவர்களை இன்று அதிகாரத்தில் அமரச் செய்துள்ளது.

பௌத்தத்தில் அதை வளர்த்தெடுக்க வேண்டிய ஆன்மீக படி நிலைகளை எட்டிய புத்தபிக்குகள் கொல்லப்பட்டபோது, அதை மீட்டெடுத்து வளர்த்து விட ஆட்கள் இல்லாது போயினர். ஆனால் பிராமணீயத்தில் பூநூல் அணிந்த அனைவரும் பூசாரிகள் அந்தஸ்தில் இருந்து தங்கள் அடையாளங்களை நீறுபூத்த நெருப்பாக்கி காத்திருந்தனர்.

பௌத்தம் ஏன் வாழவில்லை என்று ஆராய்ந்த டாக்டர் அம்பேத்கர் 'இன்டியன் ஆண்டிகொயரி' என்ற ஹிப்பர்ட் சொற்பொழிவுகளில் மாக்ஸ்முல்லர் காட்டியுள்ள மேற்கோளைக் கையாள்கிறார்;

**ஒவ்வொரு பிராமணக் குடும்பமும் ஒரு குறிப்பிட்ட வேதத்தைப் படிப்பதில் குறிப்பாக ஒரு வேதத்தின் சாகையை (மூலப் பாடம்) படிப்பதில் கவனம் செலுத்துகிறது. அந்த வேகத்துடன் சம்பந்தப்பட்ட சில சூத்திரங்களில் விளக்கப்பட்டுள்ள புனித சடங்குகளைச் செய்வதை தனது குடும்பத்தின் உரிமையாகக் கொள்கிறது. குறிப்பிட்ட அந்த வேதத்திலுள்ள எல்லா நூல்களையுமே மனப்பாடம் செய்வதென்பது அந்தப் படிப்பில் அடங்கும். பிராமணக் குடும்பங்கள் வந்து குடியேறியுள்ள காசியிலும், குஜராத்திலும், மராட்டியத்திலும், தெலுங்கானாவிலும் பெரும் எண்ணிக்கையினராக பிராமணர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் இத்தகைய வேதபாராயணத்தில் கழித்து வருகிறார்கள். இவர்களில் ப[...] பேர் நாட்டின் பல பாகங்களுக்கு சென்று தட்சிணை (கா[...] பொருள்) பெற்று வருகிறார்கள். அந்தந்த பகுதியிலுள்ள செல்வந்தர்கள் இவர்களுக்கு காப்பாளர்களாக அமைந்து அவ[...]களாலான உதவிகளைச் செய்து காத்து வந்தனர் என்று வரலாறு நமக்கும் சொல்கிறது. குற்றுயிராய்க் கிடந்த பிராமணீயம் பிழைக்க மருந்து கிடைத்து விட்டது.

பிராமணீயம் த[...] வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருந்தது. தன் பலம் எது பலவீனம் எது என்பதையும் அறிந்து வைத்திருந்தது. அனைத்திற்கும் மேலாக கல்வியும் அதனால் கிடைத்த அடையாளமும் அதற்கு கிடைத்திருந்தது. இன்று அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் கூட பிராமணர்கள், ஒரு மொழிக்குள் இன்னொரு பிராமண மொழியை வளர்த்து தங்களின் அடை யாளங்களை ஸ்தாபித்துக் கொள்கிறார்கள்.

குழு, அடையாளங்கள், காலப் போக்கில் அதிகார மீட்டலுக்கான முக்கியப் போர்க் கருவிகளாக அமைந்து அவர்களை இன்று அதிகாரத்தில் அமரச் செய்துள்ளது.

அடையாளச் சிதைவுகள் மட்டுமே ஒரு குறிப்பிட்ட இனத்திற்கான அதிகாரச் சிதைவை ஏற்படுத்த முடியும். அடையாளங்கள் சிதையுமா?

* மனத்தின் இருப்பு - மொழி[...] பெயர்ப்புக் கட்டுரைகள் பக்.30-32

** அம்பேத்கர் நூல் தொகுப்பு- 7 பக். 137



படிப்பகம்

www.padippkam.com

# உன் தீயும் ஞானும்

உன்
தீ அணையக்கூடாது
எனில்
என்னை அது சுட்டுவிடக்கூடாது
உன் தீ
என்ன தீ
எங்கள் அம்மாவின் தீயே
எனக்குத் தெரியும்
என் மனைவியின் தீயே
இன்னும் என்னைச் சுட்டுக்கொண்டிருக்கிறது
என் மக்களின் தீ
என்னை விரட்டிக்கொண்டிருக்கிறது
சரியோ தவறோ கவிதையெனும் தீ
கையைப் பொசுக்கிக்கொண்டிருக்கிறது
தமிழ்த் தீ தரித்திரத்தில் வைத்து
எரித்துக்கொண்டிருக்கிறது தினமும்
இதுபோல
எத்தனையோ தீ
உன் தீயை
என் மடியில் கொட்டாதே இளங்கவிஞா
மேனியெங்கும்
தீ
மனசெல்லாம்
தீ
தீயிலே பிறந்து
தீயிலே வளர்ந்து
தீயிலே வாழ்ந்துகொண்டிருக்கும்
திராவிடனைச் சூழ்ந்து
சுடுகிற தீ
என்ன தீ
(கைலாஷ் சிவன்க்கு)



**விக்ரமாதித்யன்**



படிப்பகம்

www.padippkam.com

# யாருக்காவது

உண்மையாய் இரு என்றால்
எனக்கு உண்மையாய் இருவென்று பொருள்
யாரிடமாவது அன்பாய் இரேனெனில்
என்னிடம் அன்பாயிருவென அர்த்தம்
யாரோடாவது ஒத்துப்போ என்று சொன்னால்
என்னோடு ஒத்துவா என்று சொல்வதுதான்
யாரோடும் பகை
எல்லோரிடமும் பொய்யாயிரு
எவரோடும் ஒத்துப்போகாதேயென்று
எப்படிச் சொல்ல முடியும்
யாரால்
வாழ முடியும் இப்படி
எவரால்
இதுபோல இருக்க முடியும்
இருந்தால்தான்
என்னவாகும்
உன் வழியே
உனக்கு
என் வழிதான்
எனக்கு
உண்மையாயிருந்து
கண்டதென்ன நீ என்று கேட்கலாம்
அன்பாயிருந்து
கொண்டதென்ன எனக் கோரசெய்யலாம்
ஒத்துப்போய்த்தான்
உண்டாக்கியதென்ன என்ற இளக்காரம் பண்ணலாம்
பகைத்தவன்
பொய்யாயிருந்தவன்
முரண்டுபிடித்தவனெல்லாம்
சாதித்ததுதான் என்ன
அந்தப் பக்கம் பெய்யும் மழை
இந்தப் பக்கமாகவா
இந்தப் பக்கம் பொழிகையில்
அந்தப் பக்கம் உண்டா
எந்தப் பக்கத்திலாவது
இருந்தால் சரி நல்ல மழை



விக்ரமாதித்ய



படிப்பகம்

www.padippkam.com

# தமிழ் மின்னிதழ்கள்-தொலைநோக்குடன் ஓர் மீள்பார்வை

செ. ச. செந்தில்நாதன்

மின்னிதழியல் (Online Journalism) என்பது உலகம் முழுவதிலுமே ஒரு புதிய கருத்தாக்கமாகவே இருக்கும் வளர்ந்துவரும் ஒரு புதிய துறை. அதற்கு இன்னமும் இலக்கணங்கள் வகுக்கப்பட்டுவிடவில்லை. அது குறித்து அதிகாரபூர்வமாக பேசக் கூடியவர்களும் இல்லை. ஆனால், இந்த இளம் இதழியல் துறை, அச்சிதழியல், தொலைக்காட்சி இதழியல் ஆகியவற்றிலிருந்து மிகமிக மாறுபட்ட ஒன்று என்பதை மட்டும் எல்லோரும் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம், அது இணையத்தின் குழந்தை. இணையம் நமது வாழ்வின் அனைத்தும் தகவல் மற்றும் தகவல் தொடர்பு அம்சங்களையும் மாற்றிவருகிறது. எப்படி சாதாரண கடிதத்துக்கும் மின்னஞ்சலுக்கும் இடையே, சாதாரண வணிகத்துக்கும் மின் வணிகத்துக்கும் இடையே மிக ஆழமான வேறு பாடுகள் இருக்கின்றனவோ அதே வேறுபாடு சாதாரண இதழியலுக்கும் மின்னிதழியலுக்கும் உள்ளது.




மின்னிதழியலை வரையறுத்துவிட முடியாது என்றாலும் அதன் இன்றியமையாத அம்சங்களை பட்டியலிட முடியும். இன்றியமையாத என்கிற வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இணையம் ஓரே சமயத்தில் ஒருவர் ஒருவருடன், ஒருவர் பலருடன், பலர் ஒருவருடன், பலர் பலருடன் என்று நான்கு திசைகளிலும் இயங்கும் வகையில் interpersonal communication, group communication, mass communication ஆகிய மூன்று தொடர்புப்பாட்டியல் முறைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. நீங்கள் படிக்கும் பத்திரிக்கையோ பார்க்கும் திரைப் படமோ கேட்கும் எஃப்எம் சானலோ அப்படி அல்ல. அவை தகவல் அனுப்புநரிடமிருந்து தகவல் பெறுநருக்கு ஒருவழிப் பாதையை மட்டும் அமைத்திருக்கின்றன. அங்கேயெல்லாம் நீங்கள் பார்வையாளர்கள் மட்டுமே.

ஆனால் இணையத்தில் பார்வையாளருக்கும் பங்கேற்பாளருக்கும் இடையில் ஒரு சுவர் இருந்தாக வேண்டும் என்று கட்டாயமே இல்லை. அதாவது இணையத்தில் feedback என்பது உடனடியாக நிகர்த்த முடிவது. மின்னஞ்சல், அரட்டை, உடனிகழ் சேதி (instant message) போன்ற வசதிகளினூடேதான் இணையம் பிரபலமாகி வருகிறது.

அச்சு ஊடகம், தொலைக்காட்சி ஊடகம் போன்றவற்றுக்கான இதழியலும் இணைய ஊடகத்துக்கான இதழியலும் வேறுபடுவது இங்குதான். இணையத்தின் தகவல் தொடர்பு நுட்பங்களுக்கு ஏற்ப இணைய இதழியல் உருவெடுக்க வேண்டும். செய்தித்தாள் தராத வசதியை தொலைக் காட்சி தந்தது. உதாரணமாக, நேரடி ஒளிபரப்பு. அவை இரண்டும் தராத வசதியை இணையம் தருகிறது. உதாரணத் துக்கு personalized news delivery.

இணையத்தின் இன்னொரு அடிப் படை குணாம்சம் மீஇணைப்பு என்கிற ஹைப்பர்லிங்க் வசதி. இணையத்தின் மாஜிக் இங்கேதான் நிகழ்கிறது. உலகின் ஏதோ ஒரு மூலையில் ஏதோ ஒரு கணிப்பொறியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஒரு தகவலை என்னுடைய கணிப்பொறியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இன்னொரு தகவலோடு இணைக்க முடியும். மீஇணைப்பு பற்றி



படிப்பகம்

www.padippkam.com

விவரமாக பேச இந்த இடம் பொருத்தமான தில்லை என்பதால் இது குறித்து அதிகம் பேச முடியாமைக்கு வருந்துகிறேன். எனினும் பல இடங்களில் - பல நாடுகளில் பல நகரங்களில் உள்ள கணிப்பொறி வலைப் பின்னல்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை எங்கிருந்து வேண்டுமானாலும் எடுத்தாளுவதற்கு வசதி செய்து கொடுத் திருக்கும் ஒரு நுட்பம் அது.

நாம் செய்திகளை படிக்கிறோம். எல்லா சமயங்களிலும் ஒவ்வொரு செய்தியும் முழுமையாக அளிக்கப்படுவதில்லை, முடியாது. செய்தித்தாள் என்றால் பக்கம் பிரச்னை. தொலைக்காட்சியில் நேரம் பிரச்னை. ஆனால் ஒரு மின்பதிப்பில் நான்கு வரி செய்தியைத் தந்துவிட்டு அது தொடர்பான நானூறு பின்னணித் தகவல் களை மீஇணைப்புகளாக தர முடியும். இந்த வசதி வேறு எந்த ஊடகத்திலும் சாத்திய மில்லாதது.

இந்த மீஇணைப்பு வசதியை ஒரு மின்னிதழ் எந்த அளவுக்கு பயன்படுத் தியிருக்கிறது என்பதை அவசியம் ஆராய வேண்டியிருக்கிறது. எந்த மின்னிதழ் பயனாளிகளை வலை உலா செய்ய வைக்கிறதோ அவைதான் நிஜமான மின்னிதழ்கள். பிற எல்லாம் அச்சிதழின் மின்பதிப்புகள் மட்டுமே.

இத்தகைய நுட்பங்களால் இணையத்தில் உறவாடல் interactivity என்கிற ஒரு செயல்பாடு தீவிரமடைந்து வருகிறது. எந்த தகவலுக்கும் பயனாளிகள் பதில் சொல்வதை ஏற்கையில் தகவல் என்பதே தகவல் சங்கிலியாக மாறுகிறது. அதாவது பயனாளிகளை பாதிக்கும் ஒரு தகவல் பக்கம் அல்லது ஒரு மின்னஞ்சல் விவாதங்களை உருவாக்க முடியும். இந்த உறவாடல் என்கிற அம்சம் தகவல் பலகைகளாக (message boards), செய்திக் குழுக்களாக (news groups), மின்னஞ்சல் தொடர்களாக (mailing lists) உருவெடுக்கின்றன. இதனால், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தகவலால் ஈர்க்கப் பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் சமூகங் களாக இணைகிறார்கள், உறவாடும் சமூகங்களாக. இந்த மாய சமூக உருவாக்கம் தான் இணையத்தின் மகத்தான விளைவு என்று படுகிறது.

இப்போது இணையத்தில் பங்கெடுத் துப் பாருங்கள். tamil.net, tamil forum soc.culture, tamil, போல பல தமிழ் இணைய சமூகக் களங்களில் தமிழர்கள் எவ்வளவோ விவாதங்களை நடத்திக்கொண்டிருப்பதை பார்க்கலாம்.

இணையத்தால் சாத்தியமாயிருக்கும் இத்தனை தகவல் தொடர்புப்பாட்டு வசதி களையும் புரிந்துகொண்டு அதன் பிறகே தற்போதைய இணைய இதழ்களை விமர்சிக்க முடியும் என்பதால் இந்த முன்னுரை தேவைப்பட்டது.

முதலில் சொன்னபடி பல திசை களிலும் சாத்தியமான தகவல் தொடர்பு பாடு, மீஇணைப்பு ஆகிய நுட்பங்கள் இவற்றின் மூலம் சாத்தியமாகிற உறவாடல் வாய்ப்புக்கள், இந்த உறவாடலால் விளைந்த வல்ல சமூகங்கள். அவற்றினூடே உருவாகி வரும் வலைப் பண்பாடு, வலை மொழி வலை உலகம்... இவை எல்லாம் தமிழ் வலையகங்களில் உருவாகியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்

தமிழ் திரையுலகின் மிகப் பெரிய சாபக் கேடாக இன்றும் இருப்பது அதன் மீது குதிரைசவாரி செய்துகொண்டிருக்கும் நாடகம்தான். சினிமா ஒரு வெகுஜன ஊடகமாக வளர்ந்து கொண்டிருந்த, சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகக் காரர்கள் சினிமாவுக்கு வந்தபிறகு சினிமாவையே ஒரு செல்லுலாயிட் நாடகமாக மாற்றினார்கள். ஒரு சினிமா மொழி வரவேண்டிய இடத்தில் ஒரு பாப்புலர் நாடக மொழி வந்து அமைந்தது நல்ல வேளையாக, அதனால் தமிழ் நாடகம் தலை தப்பியது என்றாலும் தமிழ் சினிமா இன்றுவரை அந்த பாதிப்பிலிருந்து விடுபட முடியாமல் இருந்து வருகிறது.



படிப்பகம்

www.padippkam.com

கிட்டத்தட்ட அதேமாதிரியான ஒரு கதி தமிழ் மின்னிதழ்களுக்கும் நேர்ந்து விடுமோ என்கிற அச்சத்தோடு இந்த விமர்சனத்தை தொடங்க விரும்புகிறேன். தமிழ் சினிமாவுக்கு நாடகம் போல தமிழ் மின்னிதழ்களுக்கு அச்சிதழ்கள் இருக்கின்றன. தமிழ் அச்சிதழியல் (Print Jounalism) வளமானதுதான். சினிமாவின் பின்னால் ஓடும் தமிழ் தொலைக்காட்சி இதழியலை ஒப்பிடுகையில், தமிழ் அச்சிதழ் மரபு மிகவும் தனித்துவம் வாய்ந்த -ஒரிஜினல்-இதழியல் மரபு. ஆனால், அந்த மரபின் நிழல் தமிழ் இணையம் வரை நீளுமானால் அது தமிழ் இணைய இதழியலை முளையிலேயே கிள்ளி எறிந்து விடும் என்கிற அச்சம் தோன்றுவதை தவிர்க்க முடியவில்லை.

. அச்சில் முதலில் ஏறிய இந்திய மொழி தமிழ். அதுபோலவே வலையில் சிக்கிய முதல் இந்திய மொழியும் தமிழ்தான். நாம் அறிந்தவரை, 1995-ல், சிங்கப்பூரில், மறைந்த தமிழ் இணையத் தந்தை என்று போற்றப் படுகிற நா. கோவிந்தசாமி அவர்களின் பங்கேற்பால் வெளிவந்த PoemWeb எனப்படும் பன்மொழி இதழில் வெளியான தமிழ்க் கவிதைகள்தான் முதலில் தமிழ் மின்பதிப்பை தொடங்கி வைத்துள்ளன. அன்று தொடங்கி, இன்று வரை இணையத்தில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பக்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் பல மின்னிதழ்கள். 1996-ல் தொடங்கப்பட்டு இப்போதும் முன்னிலையில் இருந்துவரும் தமிழ்சினிமா, 1997ல் தொடங்கப்பட்டு இப்போது நின்று விட்ட கணியன் தமிழ்சேதி, 1997-98 ஆண்டுகளில் இணையத்தில் பிரபலமான அம்பலம், விண்ணோசை, பிறகு ஆறாம் திணை என்று பல இதழ்களினூடே தமிழ் மின்னிதழியல் வளர்ந்து வந்திருக்கிறது.

அதே சமயம் இந்த ஆய்வுக்கு ஆன்லைனில் வெளிவந்த அச்சிதழ்களுக்கு நான் அதிகம் முக்கியத்துவம் தரவில்லை. மாறாக, ஆன்லைனிலேயே தொடங்கப் பட்டு வெளியிடப்படும் இதழ்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

புகழ் பெற்ற சில மின்னிதழ்களை எடுத்துக்கொள்வோம்.

சென்னை இன்ட்டராக்டிவ் பிஸினஸ் சொல்யூஷன்ஸ் நடத்தும் ஆறாம் திணை தமிழ் மின்னிதழ் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம். ஒரு தொழில்முறை சார்ந்த உள்ளடக்க, வடிவ நேர்த்தியுடன் தொடர்ந்து பதிப்பிக்கப்பட்டுவரும் ஆறாம் திணை (www.aaraamthinai.com) தமிழ் வலைவாசிகள் மத்தியில் ஒரு பரவலான வரவேற்பை பெற்றிருக்கிறது.

ஆறாம் திணையின் முக்கிய எடிட் டோரியல் மற்றும் இணைய ஊடக அம்சங்கள் என்ன? முதலாவதாக அவர்கள் சமீபத்தில் சேர்த்திருக்கும் தேடுதல் அம்சத்தைத்தான் குறிப்பிட வேண்டும். இதில் தமிழிலேயே கீவேர்டுகளை கொடுத்து ஆறாம் திணை வலையகத்திற்குள் உள்ள பக்கங்களைத் தேடலாம்.

ஏப்ரல் 1 ஆம் தேதி ஆறாம் திணையில் உலாவியபோது, நாங்குநேரியில் தாராள வர்த்தக மண்டலம், மின்னணு புத்தகம், விஞ்ஞானியான தமிழ் கிறிஸ்துவ பெண் துறவி போன்ற தலைப்புகளுக்கு முக்கியத் துவம் கொடுக்கப் பட்டிருந்தது. இது ஆறாம் திணையின் எடிட்டோரியல் கொள்கையை எடுத்துக் காட்டுகிறது. சினிமா, பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே உள்ள, தமிழ் வெகுஜன ஊடகத்தால் தொடர்ந்து புறக் கணிக்கப் பட்டு வந்த தலைப்புகளை தைரியமாக ஆறாம்திணை முன்னிலைப் படுத்துகிறது. வெண்பா பற்றிய ஒரு கட்டுரை சுவாரஸ்ய மாக இருந்தது. அதிலிருந்து தமிழ் வெண்பா பற்றிய நான்கு வலைப் பக்கங்களுக்கு மீஇணைப்புத் தரப்பட்டிருந்தது. (உதார ணத்துக்கு யாப்புவலை என்கிற வலையகத் தோடு தொடர்பு). கிட்டத்தட்ட ஆன்லைன் சிற்றிதழாகவே வரும் ஆறாம் திணையில் சிற்றிதழ் பக்கம் என்னும் பகுதி தமிழ் சிற்றிதழ்களைப் பற்றிய ஒரு விமர்சன பலகணியாக இருக்கிறது.



படிப்பகம்

மற்றபடி செய்திகள், சிறப்புக் கட்டுரைகள், விமர்சனங்கள் ஆகிய வழக்கமான பகுதிகள், திட்டிவாசல், தமிழ் அறிவோம், விடுகதை, பழமொழி, கைபக்குவம் போன்ற சிறப்புப்பகுதிகளைப் பார்க்கும் போது தமிழ் பண்பாட்டின் அனைத்து கூறுகளையும் விடாமல் உருவாக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. வேர்ப்பற்று மிக்க ஆசிரியக் குழுவின் அக்கறையை புரிந்து கொள்ள முடிகிறது.

குறுக்கெழுத்துப்புதிர் பகுதி இன்ட்டராக்டிவாக இல்லை. அதை பிரிண்ட் எடுத்தே பயன்படுத்த சொல்கிறார்கள். ஆன்லைனிலேயே பதில்களை, குறுக் கெழுத்துக் கட்டங்களிலேயே உள்ளிட வழிவகை செய்ய வேண்டும். ஆனால், அது குறித்த ஒரு மின்விவாதமேடை அமைத்திருப்பது நல்ல முயற்சி. விடுகதை பக்கத்தை எடுத்துக் கொள்வோம். முதலில் விடுகதை களையும் அதற்கு கீழே அவற்றுக்கான விடைகளையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த பக்கம், ஒரு அச்சடித்த ஏட்டின் வலை வடிவமாகவே இருக்கிறது. மாறாக. குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு வாசக இடையீட்டுக்குப் பிறகு விடைகள் திரையில் தோன்றும் விதத்தில் அமைத்திருக்கலாம்.

ஆறாம் திணையின் ஆசிரியக் கொள்கை ஒரு மிடில் மேகஸினை இன்டர்நெட்டில் நடத்துவது என்பதாக இருக்கும் பட்சத்தில் அதை மிகச் சிறப்பாகவே செய்திருக்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். ஆனால், அது முழுமையான மின்னிதழ் என்பதாக அல்லாமல், இணையத்தில் வரும் அச்சிதழ் வடிவமாகவே இருப்பதுதான் குறை.

இன்தாம் (www.intammi.com) ஒரே வரியில் சொல்லப்போனால் இன்தாம் ஒரு தமிழ் தகவல் களஞ்சியம். இவர்களின் முக்கிய மின்னிதழ் விண்ணோசை. இது இந்தியா, ஈழம், மலேசியா, சிங்கப்பூர், கனடா என பல நாட்டு தகவல்களை தொகுத்து தருகிறது. விண்ணோசை தன்னை 24 மணி நேர இணைய செய்திச் சேவை என்று சொல்லிக் கொள்கிறது. ஆனால் அப்படி தொடர்ந்து நிமிடம் விடாமல் செய்திகளை வலைபரப்புவதாக தெரியவில்லை.

துளிர், இலக்கிய சாளரம், சுவடி, புதிய கல்வி, ஏற்றுமதி உலகம், மருத்துவ அறிவியல் மலர், பூவுலகு, வளர் தொழில், ம்யூசிக் வேர்ல்ட், சரிகமபதநி, நவீன வேளாண்மை, மனித நேயம் போன்ற பல அச்சிதழ்கள் இந்த வலையகத்தில் தங்கள் மின்பதிப்புகளை வெளியிடுகின்றன. பொது நியதிக்கேற்ப இவை அனைத்துமே அச்சிதழ்களின் மின் பதிப்புகளாக மட்டுமே இருக்கின்றனவே தவிர மின்னிதழ்களுக்கான இலக்கணத்தைக் கொண்டவையாக இல்லை. நிறைய தகவலை தருவதில் காட்டும் ஆர்வத்தை இன்தாம் தரும் முறையிலும் தரவேண்டும்.

தகவல் என்பது கச்சா பொருளாக இருந்தால் போதாது. அது சிறப்பான finished goods ஆக இருக்க வேண்டும். இன்தாம் இணைய பதிப்புலகின் வித்தியாசங்களை புரிந்துகொள்வது நல்லது.

தமிழ் சினிமா (www.tamilcinema.com) தமிழின் தொடக்க கால மின்னிதழ்களில் இதுவும் ஒன்று. 1.5.1996-ல் தொடங்கப்பட்டது. முழுக்க முழுக்க தமிழ் சினிமா தொடர்பான செய்திகள், விமர்சனங்கள், கிசுகிசுக்கள், படங்கள், தகவல் களஞ்சியங்கள் என வலையகம் முழுவதும் டன் கணக்கான தகவல்கள் வியாபித்திருக்கின்றன. இதிலும் தினசரி பொது செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், அதற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் சினிமா.காம் வழக்கமான பாப்புலர் இதழ்களின் வலை வடிவம்தான். இப்போது புஷ்பா தங்கதுரையின் தொடர் கதையும் அதில் வெளிவருகிறது. ஆன்லைன் கருத்துக்கணிப்புகள் மூலம் பல தமிழ் வலைவாசிகளை கவர்ந்த வலையகம் இது.



படிப்பகம்

www.padippkam.com

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தமிழ் ரசிகர்கள் மத்தியில் நெ1 ஹீரோ யார் என்கிற கருத்துக்கணிப்பில் ரஜினியை பின்னுக்குத் தள்ளிவிட்டு விஜய் முந்திக் கொண்டிருக்கும் தகவலை தமிழ் சினிமா. காம் அறிவித்தபோது, அது வெறும் சினிமா தகவலாக மட்டுமே நமக்குத் தோன்ற வில்லை. மாறாக, தமிழ் வலைவாசிகளின் பின்னணியை அது தெரிவித்தது. தமிழ் சினிமாவின் பயனாளிகளில் இருபது வயதுக்குட்பட்டவர்கள் அதிகம் இருந்தா லொழிய விஜய் ஜெயித்திருக்க முடியாது.

ஆனால், தமிழ் சினிமாவின் முக்கிய வெற்றி தமிழ் மின்னிதழை பரவலாக கொண்டு சென்றது.

அடுத்ததாக, மின்னம்பலமாக இருந்து அம்பலமாக மாறிய மின்னிதழ். www.ambalam.com ஈடிஎச் நிறுவனத்தின் இந்த வலையகம் தன்னை தமிழ் வலைவாசல் என்று சொல்லிக்கொள்கிறது. திரு. சுஜாதா அவர்களின் வழிகாட்டலில் நடத்தப்படும் அம்பலத்தில் தினசரி செய்திகள், வார இதழ் ஆகியவை முக்கியமானவை. இந்த வலையகத்தின் சிறப்பு, தமிழ் மின்னஞ்சலை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் மின்னிதழ் தகவல் மையங்களாக மட்டுமல்ல தகவல் தொடர்பு மையங்களாகவும் இருக்க முடியும் என்றாகிறது.

தமிழ் மின்னிதழ் வரலாற்றில் இன்னொரு நிகழ்வு இந்தியாவின் பிரதான வலையகங்களான ரீடிஃப், இந்தியா இன்ஃபோ ஆகியவற்றில் தமிழ் பதிப்பு தொடங்கப்பட்டிருப்பது. இந்த இரு முக்கிய செய்திவாசல்களும் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் தங்கள் பக்கங்களை வெளியிடுகிறார்கள். அவை அடிப்படையில் செய்திகளும் செய்தி விமர்சனக் கட்டுரைகளும் ஆகும்.

ரீடிஃப்பும், இந்தியாஇன்ஃபோவும் தமிழில் செய்தி தரப் புகுந்தபோது ஒரு புதிய தொழில் நுட்பத்தையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார்கள். இயங்கெழுத் துருக்கள்- அதாவது Dynamic Fonts- என்கிற அந்த தொழில்நுட்பத்தின் சிறப்பு- பயனாளிகள் தமிழ்ப் பக்கத்தைப் படிப்பதற்காக எந்த எழுத்துருவையும் இறக்கிக்கொள்ளத் தேவையில்லை. மாறாக. தமிழ்ப் பக்கங்களோடு தமிழ் எழுத்துருக் களும் தானாகவே இறங்கும். இதன் மூலம், உளவியல் ரீதியாகவே தமிழ்ப்பக்கங்களை பார்ப்பதில் தமிழ் பயனாளிகளுக்கு ஏற்பட்ட பிரச்னை தீர்த்துவைக்கப்பட்டது.

தற்போது வெளிவராத ஆனால் இணையத் தமிழுக்கு பரவலான வட்டத்தை உருவாக்கிக்கொடுத்த ஒரு வலையகத்தைப் பற்றி சொல்லியாக வேண்டும். 1997 ஏப்ரல் 14 ஆம் தேதி தொடங்கப்பட்ட கணியன் தமிழ்ச்சேதி என்கிற வார இதழ் இணையத் தில் ஓராண்டுக்கு வெளிவந்தது. பேரா நா. கோவிந்தசாமியின் முயற்சியில் வெளியிடப் பட்ட இந்த மின்னிதழை சென்னை யிலிருந்து நடத்திய வாய்ப்பு எனக்கு கிடைத்ததை இன்றும் நான் பெருமையாக கருதுகிறேன். இணையம் தமிழ் மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக குமுதம், நக்கீரன், கல்கி உட்பட கிட்டத் தட்ட 20 பிரபல தமிழ் இதழ்களிலிருந்து சிறந்த கட்டுரை, பேட்டி போன்றவற்றை அனுமதியுடன் எடுத்து வெளியிட்டோம். இந்த முயற்சிக்கு பெரிய அளவில் வரவேற்பு இருந்தது. 25 நாடுகளிலிருந்து ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 8,000 தனிப்பட்ட பயனாளிகள் (unique visitors) வந்தார்கள். தமிழ்ச்சேதி மட்டுமல்லாமல், திரு. அண்ணாமலையின் பொறுப்பில் நாடகன் என்கிற நாடக இதழும் வெளிவந்தது. இந்திய சுதந்தரப் பொன் விழாவை முன்னிட்டு இந்தியா 50:50 என்கிற மின்னிதழும் வந்தது.

அதன்பிறகு மாணவன் என்கிற மின்னிதழ் மூலம் சிங்கப்பூரில் உள்ள அனைத்து பள்ளி மாணவர்களையும் சென்றடைந்தது kanian.com. தமிழில் இதுவரை வந்த மின்னிதழ்களிலேயே வெற்றி பெற்ற ஒரே இதழ் என்றால் இந்த மாணவனைத்தான் குறிப்பிட முடியும்.



படிப்பகம்

www.padippkam.com

ஏனென்றால் பயனாளிகளாக இருந்த சிங்கை தமிழ் மாணவர்களை எழுதத்தூண்டி அவர்களின் படைப்புகளையும் வெளியிட்டு ஒரு உறவாடும் இதழாக அதை மாற்றினார் திரு. நா.கோ.

கணியனில் தமிழ் என்கிற நாளிதழும் வெளிவந்தது. தமிழின் ஒரு பகுதியாக அருள் என்கிற ஆன்மீக இதழும் சினிமா சினிமா என்கிற மின்னிதழ்களும் வெளியிடப் பட்டன. கணியன் பல மின்னிதழ்களின் நாற்றங்காலாக இருந்தது. துரதிருஷ்ட வசமாக திரு நா.கோ. இன்று நம்மிடமில்லை. அவர் இருந்திருந்தால் பல மின்னிதழாளர் களை உருவாக்கிக் கொண்டேயிருப்பார்.

கணியன் முதல் ஆறாம் திணை வரை அனைத்து மின்னிதழ் களையும் வரிசையாக வைத்துப் பார்க்கும் போது, கால ஓட்டத்தில் தமிழ் மின்னிதழியல் வளர்ந்திருப்பதும் தெரியும். வளராமல் இருப்பதும் தெரியும். மிகவும் சீரியஸாக கருத வேண்டிய சில விஷயங்கள் —




ஊடகத்தின் தன்மையைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். தொடக் கத்தில் கணியன் தமிழ்ச்சேதியில் நாங்கள் அந்த தவறைச் செய்திருக்கிறோம். சில கட்டுரைகள் மிகவும் நீளமானவை. அவற்றை உடைத்து பல பகுதிகளாக பிரிக்காமல் ஒரே கட்டுரையாக வெளியிடுவோம். இந்த கட்டுரைகளை பயனாளிகள் பிரிண்ட் எடுத்து படிக்க வசதியாக இருக்கும் என்று எதிர் பார்த்தோம். ஆனால், இது பயனாளிகளை மிகவும் சோதித்தது. குறைவான வலையிறக்க வேகத்தில், வாசகர்கள் உடனே அடுத்தப் பக்கத்துக்கு தாவிவிடுவார்கள் என்பதை நாங்கள் முன்னறிய முடியவில்லை. Wired இதழின் ஆன்லைன் வடிவத்தைப் பார்த்தபோது இந்த பிரச்னையை அழகாக தீர்த்திருக்கிறார்கள். முதலாவதாக, ஆன்லைனிலேயே படிப்பதற் கான பதிப்பு ஒன்று, அச்சிடுவதற்கு ஏற்ற பதிப்பு ஒன்று என்று ஒவ்வொரு முக்கிய கட்டுரையையும் இரண்டிரண்டாக வெளியிட்டது wired.com. அப்படி செய்வதில் ஒரு நடைமுறை சிக்கலும் இல்லை. தீர்ந்து போய்விடுவதற்கு இணையப் பக்கங்கள் நியூஸ் பிரிண்ட் காகிதங்கள் அல்ல. அங்கே டிஜிட்டல் வடிவத்தில் எவ்வளவு தகவலையும் எந்த விதத்திலும் போடலாம். ஆக, ஒரே கட்டுரையை இருவகை பயன் பாட்டுக்கு இரு வகையாக அளிப்பதை வலை நுட்பம் சாத்தியமாக்குகிறது. அதை பயன் படுத்திக் கொள்ள நமக்குத்தான் கற்பனை அதிகம் வேண்டும். இதுபோல பல எடிட்டோரியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கவனம் செலுத்தினால் நம் மின்னிதழ்கள் மேலும் சிறப்படையும்.

வலியுறுத்திச் சொல்லியாக வேண்டிய இன்னொரு முக்கிய விஷயம் தமிழ் எழுத்துருக்கள் சம்பந்தப்பட்டது. தமிழ் மின்னிதழ்கள் பலவும் பல குறியீட்டு முறை களில் உள்ள எழுத்துருக்களில் பதிப்பிக்கப் பட்டு வருகின்றன. தமிழ் எழுத்துக்குறியீட்டு முறையை தமிழக அரசு தரப்படுத்தி பத்து மாதங்கள் ஆனபிறகும் இந்த இதழ்கள்



படிப்பகம்

www.padippkam.com

எதுவுமே தமிழ் இணையம் 99 தரத்தில் இல்லை என்பது வருத்தமாக இருக்கிறது. எவ்வளவு கடுமையான சூழலில் எவ்வளவு எதிர்ப்புகள், அலட்சியங்கள், புறக் கணிப்புகளுக்கு நடுவில் தமிழ் இணையம் 99 மாநாட்டுக்குப்பின் தமிழ் குறியீட்டு முறை தரப்படுத்தப்பட்டது என்பதை மின்னிதழ் நடத்துவோர் அனைவரும் அறிவார்கள். அவர்களில் பலர் தமிழ் மென் பொருள் தயாரிப்பாளர்களாகவும் கூட இருக்கிறார்கள். இருந்தும் எந்த மின்னிதழும் இதுவரை தரப்படுத்தப்பட்ட தனிமொழி தமிழ் (Tamil Monolingual) இருமொழி தமிழ் (Tamil Bilingual) எழுத்துருக்களை பயன்படுத்தவில்லை. ஏன் இல்லை என்பதற்கு அவர்கள் சில காரணங் களையும் வைத்திருக்கக் கூடும். ஆனால் அந்த காரணங்களால் தமிழுக்குத்தான் தீங்கு என்பதை அவர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன்.

**இறுதியாக சில வார்த்தைகள்...**

வெப் டிவி வந்தவுடன் மீண்டும் மக்கள் ராமாயணம், மகாபாரதம், கங்கா யமுனா சரஸ்வதி மற்றும் ஷார்ஜா மாட்ச் ஆகியவற்றை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பார்களோ என்ற ஆதங்கம் எழுந்தாலும் புதிய தலைமுறையில், பொருளாதாரம், தொழில்நுட்பம் போன்றவை குறித்து கவனம் கொள்ளு பவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாம். அரசியல், கலை, இலக்கியம் குறித்து விவாத மேடைகளில் பொறி பறக்கலாம். நல்ல வேளையாக தமிழ் மின்னிதழ்களில் அசட்டுத்தனங்கள் அதிகமில்லை. பொழுது போக்கு அம்சங்களுக்குத்தான் எப்போதும் மவுசு என்றாலும் விஷயங்களை பேச மெயின்ஸ்டீரிம் அச்சிதழ்களை விட மின்னிதழ்கள் பல மடங்கு பரவாயில்லை என்றே தெரிகிறது. ரீடிஃப் இந்தியா இன்ஃபோக்களின் வரவு தொழில்முறை சார்ந்த மின்னிதழியல் வளர உதவும். மின்னிதழ்களை நடத்தும் நிறுவனங்கள் தங்களை வெறும் டாட் காம் கம்பெனியாக அல்லாமல் மீடியா கம்பெனிகளாக நினைத்துக் கொண்டால் - அதற்கேற்ப நடந்துகொண்டால் தமிழ் மின்னிதழ் களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கும்.

தொலைக்காட்சியால் பறிபோய்க் கொண்டிருந்த வாசிப்பு என்கிற அனுபவத்தை மீண்டும் மக்களுக்கு கொண்டு வந்தது இணையம்தான். வேகமான, மலிவான இணையத் தொடர்பு கிடைக்கும் பட்சத்தில், தமிழ் நாட்டு தொலைக்காட்சி நேயர்களும் மீண்டும் வாசகர்களாவார்கள். அதேவேளை வாசகர் என்பவர் வெறும் வாசகராக மட்டுமே இருக்கமாட்டார். இணையத்தில் வாசகர் என்கிற சொல் இல்லை. அவர் பயனாளி என்றே அழைக்கப்படுகிறார். இணையம் என்கிற ஊடகத்தின் அடிப்படைப் பண்பு காரண மாகவே, வாசகர் என்பவரும் மெல்ல மெல்ல வாசிப்பவராக இருந்தது மாறி எழுதவும் ஆரம்பிப்பார். அதை இணையத்தின் உறவாடல் தன்மை உறுதிப்படுத்தும்.

தொலைக்காட்சிக்கு பார்வை யாளர்கள், பத்திரிக்கைக்கு வாசகர்கள் போல இல்லை இணையத்தின் பயனாளிகள். நீங்கள் தொடங்கும் ஒரு குறிப்பிட்ட தொடர்ப்புப்பாட்டு செயலை அவர்கள் முழுமைப்படுத்தி, அதை தங்கள் நோக்கில், போக்கில் வளர்த்தெடுப்பார்கள் அல்லது முற்றுபுள்ளி வைப்பார்கள். உறவாடும் ஊடகம் அது. அதை புரிந்து கொள்வது சுலபம். நடைமுறைப் படுத்துவது கஷ்டம். காரணம், நேற்றைய வாசகர்தான், இன்றைய இணையப் பயனாளி.

நம் வலையகங்களுக்கு வரும் பயனாளிகளை பங்காளிகளாக மாற்றுவதில்தான் வெற்றி இருக்கிறது. ●



படிப்பகம்

www.padippkam.com

# சாம்பல் நிறப் பறவை

எனது தரப்பு
அதில் விசேஷமாக ஒன்றுமில்லை
முற்றிலுமாக அழித்துக் கொள்கிறேன்
எந்த தரப்பிலும் நின்று
தர்க்க பூர்வமாக தொண்டாற்ற இயலும்
ஏராளமான பாவனைகளை
கற்றுக் கொண்டு விட்டேன்
உங்களுக்குச் சமமானதுபோல குடிக்கும்
நவீனகால அடிமையாக
என்னால் தீவிரமாக ஜோடிக்க முடியும்.
ஒருபோதும் உங்களுக்கு மனச் சோர்வு
ஏற்படாமல் என்னை பாதுகாத்துக் கொள்கிறேன்.
உங்களை மிஞ்சும் ஒரு செயலிலும் ஈடுபட மாட்டேன்
எனது மனதின் சமநிலைபற்றி நீங்கள் துளிகூட
சந்தேகிக்காதீர்கள்
வாழ்வின் பெரும் சிரமத்திற்குப் பிறகு
நீங்கள் வந்து சேர்ந்த பதவிகளுக்கு
ஆபத்து நேராமல்
என்னை கண்காணித்துக் கொள்கிறேன்....
நீங்கள் நினைத்ததைச் செய்கிறேன்.
நினைத்ததைத்தான் செய்கிறேன்
என்பதை வெளிக்காட்டாமல்
நடந்து கொள்கிறேன்.
குடிப்பதை நிறுத்தி விடுகிறேன்.
நீங்கள் குடிக்கும் சாராயமாக
என்னை மாற்றிக் கொள்கிறேன்.
உங்கள் தோழிகள், தோழர்கள்
எவரிடமும் குறுக்கிட மாட்டேன்
நீங்கள் வரைந்து தருகிற சித்திரத்தை
சட்டையாக மாட்டிக்கொள்ளும் சாமானமாக
மாறி விடுகிறேன்.
ஒரு வேலை தாருங்கள்
எனக்காக அல்ல
மல்லிகாவுக்காகவும்
ரிஷிக்காகவும்
அவர்களை நம்பியுள்ள
சில தாவரங்களுக்காகவும்.



லஷ்மி மணிவண்ணன்



படிப்பகம்

www.padippkam.com

# சென்றவை இருபதாம் நூற்றாண்டு

அ. மார்க்ஸ்

ஒரு நூற்றாண்டைத் திரும்பிப் பார்த்துச் சிலவற்றை அடையாளப்படுத்துதல், தொகுத்துப் பார்த்தல் என்பது ஒரு எளிய முயற்சியல்ல. நீண்ட காலம் மேற்கொள்ள வேண்டிய கடின உழைப்பு அது. அத்தகைய எந்த முயற்சியுமின்றி ஏதோ மனதில் பட்ட, நினைவுக்கு வந்த சில நிகழ்வுகளை, அவற்றினடியாக அடையாளம் காண முடிந்த சில போக்குகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளும் ஒரு வாய்ப்பாகவே இந்தத் தொடக்க உரையை நான் அமைத்துக் கொள்கிறேன்.

சென்ற நூற்றாண்டை மதிப்பீடு செய்கிறபோது நமக்கு ஏற்படுகிற ஒரு பிரச்சினை நாமும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாய் இருப்பது. நமது செயற்பாடுகளுடன் நாமும் இந்த நூற்றாண்டின் அங்கமாய் இருந்திருக்கிறோம். என்னை எடுத்துக்கொண்டால் ஒரு அரை நூற்றாண்டு காலம் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்துள்ளேன். ஒரு கால் நூற்றாண்டு காலம் ஓரளவு இலக்கிய, அரசியல் களங்களில் பங்குபெற்றிருக்கின்றேன். இங்கு இருக்கக் கூடிய நம் எல்லோருக்கும் இது பொருந்தும். கால அளவுகள் வேண்டு மானால் சற்று வேறுபடலாம். எனவே சென்ற நூற்றாண்டை நாம் மதிப்பீடு செய்ய முற்படும்போது முற்றிலும் புற வயமான ஒரு மதிப்பீடு சாத்தியமில்லை. முற்றிலும் புறவயமான மதிப்பீடு எதிலுமே சாத்திய மில்லை என்பதொரு பக்கம் இருக்கட்டும். சென்ற நூற்றாண்டை நாம் மதிப்பீடு செய்வது என்பதைப் பொருத்த மட்டில் நாம் ஒரு பங்கேற்பு ஆய்வாளராக (Participant Observer) மட்டுமே இருக்க முடியும். நமது விருப்பு வெறுப்புகள், பார்வைகள், கருத்தியல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நம்மில் சிலருக்கு முக்கியமாகப் படக் கூடிய நிகழ்வுகள் வேறு சிலருக்கு முக்கியமற்றதாகத் தோன்றலாம் என்பது போன்ற சிக்கல்களை நாம் மறந்துவிடலாகாது.

**சாதாரண மனிதன் கதாநாயகனாக உலா வந்த ஒரு நூற்றாண்டு இது.**

உலகளாவிய அனுபவங்களின் அடிப்படையில் சென்ற நூற்றாண்டை மதிப்பிட்டு ஆங்கில இதழ்களில் பல கட்டுரைகள் வந்திருப்பதைக் கவனித்திருப்பீர்கள். சில நல்ல புத்தகங்களும்கூட வந்துள்ளன. புகழ்பெற்ற மார்க்சீய வரலாற்றாசிரியரான எரிக் ஆப்ஸ்வாம் எழுதியுள்ள 'The Age of Extremes' இவற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நூல். இந்தக் கட்டுரைகள், நூற்கள் ஆகியவற்றில் சொல்லப் படுகிற இரண்டு கருத்துக்கள் இங்கே குறிப்பிடத்தக்கன.

*முதலாவது:* சாதாரண மனிதன் கதாநாயகனாக உலா வந்த ஒரு நூற்றாண்டு இது. செய்தியாக்கம் (Reportage), காமிரா ஆகியவற்றின் யுகம் என்றும் இதைச் சொல்வார்கள். தொடர் பூடகத்தில் ஏற்பட்ட பெரு மாற்றங்கள், அச்சு, சினிமா, எளிதில் எங்கும் கிடைக்கக் கூடிய நாளிதழ்கள், தொலைக் காட்சி, வானொலி, 'நான்காவது எஸ்டேட்' எனப்படும் பத்திரிகைத் துறையின் இன்றியமையாமை ஆகியன சாதாரண மனிதன் நடுநாயகமாக ஆன நிகழ்வோடு பொருத்திப் பார்க்கத்



படிப்பகம்

www.padippkam.com

தக்கன. பெண்கள், தலித்துகள், கறுப்பினத்தவர், ஒடுக்கப்பட்ட இனங்கள் மேலெழுந்த ஒரு காலகட்டமாகவும் சென்ற நூற்றாண்டு விளங்குகிறது.

*இரண்டாவது:* மேலைச் சூழலைப் பொருத்த மட்டில் ரொம்பவும் பயங்கரமான நூற்றாண்டாக இது கணிக்கப்படுகிறது. இரு பெரும் உலகப் போர்கள், மில்லியன் கணக்கில் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட நிகழ்வுகள் நிறைந்த ஒரு யுகம் இது. இவற்றிற்கு ஈடான நிகழ்வுகளை முந்திய நூற்றாண்டுகளில் நீங்கள் தேட இயலாது. இந்தப் பேரழிவுகள் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படுத்திய நேரடித் தாக்கங்கள் குறைவுதான். நமது ஈழத்துத் தமிழர்கள் சந்தித்த கொடூரங்களைக் கூட நாம் சந்தித்ததில்லை. உலகப் போர்கள் நமது தமிழ்ச் சூழலில் ஏற்படுத்திய தாக்கங்களைக் காட்டிலும் ஈழப் பிரச்சினை ஏற்படுத்திய தாக்கங்கள் அதிகம்.

மற்றபடி சென்ற நூற்றாண்டை யோசிக்கும்போது நம் நினைவிற்கு வரக்கூடியன. (1) பொதுவுடைமைக் கட்சிகள் முன்னின்று நடத்திய புரட்சிகள்: சோசலிசக் கட்டுமானங்களின் தோற்றமும் தேய்வும். (2) பாசிசத்தின் தோற்றம் - வீழ்ச்சி - புத்துயிர்ப்பு. சுருக்கமாகச் சொல்வதானால் சோவியத் யூனியன், மூன்றாவது ரீச் ஆகியவற்றின் எழுச்சியும் வீழ்ச்சியும் சென்ற நூற்றாண்டின் மிக முக்கியமான இரு நிகழ்வுகள்.

அறிவுத் தோற்றவியல், சிந்தனைமுறை, தத்துவம் ஆகியவற்றைப் பொருத்த மட்டில் தர்க்க பூர்வமான, விஞ்ஞானப் பார்வை என்பது ஆட்டங்கண்டு சற்றே 'விஞ்ஞானத் தன்மை' குறைந்த அதர்க்க அடிப்படையிலான சிந்தனைகளும் பார்வைகளும் எழுச்சி பெற்ற ஒரு சகாப்தமாகவும் சென்ற நூற்றாண்டைப் பார்க்க இயலும். சசூர், ஃபூக்கோ, விட்கென்ஸ்டெய்ன், தெரிதா, கடாமர், தெல்யூஸ், கத்தாரி முதலிய சில பெயர்கள் உடனடியாக நினைவுக்கு வருபவை. இலக்கிய, விமர்சனத்துறைகளிலும் இது எதிரொளித்ததை நாம் அறிவோம். அய்ரோப்பிய, அமெரிக்க மேலை இலக்கியங்கள் என்பதிலிருந்து லத்தின் அமெரிக்க மற்றும் கறுப்பு இலக்கியங்கள், மூன்றாம் உலக எழுத்துக்கள் என்கிற விளிம்புகளை நோக்கி இலக்கியக் கவனங்கள் திரும்பிய நூற்றாண்டாகவும் இதனைக் குறிப்பிடலாம். சென்ற நூற்றாண்டின் மிக முக்கியமான எழுத்தாளர்கள் எனச் சிலரைச் சொல்ல நேர்ந்தால் அதில் கப்ரியேல் கார்ஷிய மார்க்யூஸ் என்கிற லத்தீன் அமெரிக்கரின் பெயர் முதலில் அமையும் என்பதை யாரும் மறுத்துவிட இயலாது.

## 2

1914 ஜூன் 28ந் தேதியன்று பிரான்ஸ் பெர்டினார்ட் என்கிற ஆஸ்திரிய - ஹங்கேரி நாட்டு இளவரசன் சராஜீவோ வில் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து முதல் உலகப் போர் முகிழ்ந்தது என்று பள்ளி நாட்களில் படித்திருக்கிறோம். அப்புறம் 1917ல் ருசியப் புரட்சி. இது உலகெங்கிலுமிருந்த குடியேற்ற நாட்டு மக்களிடம் ஏற்படுத்திய எழுச்சிக்கு நமது சுப்பிரமணிய பாரதி எடுத்துக் காட்டு. இந்த நூற்றாண்டின் முதல் இருபதாண்டுகளில் உலகெங்கிலும் தாராள - சன நாயகச் சிந்தனைகள் ஓங்கி நின்றன. சட்டத்தின் ஆட்சி, அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இயங்கும் அரசுகள், சிவில் உரிமைகள், சர்வாதிகார எதிர்ப்பு என்கிற சிந்தனைகள் மேலெழுந்தன. இவற்றிற்கு எதிரான பாரம்பரிய மதங்கள் மற்றும் மடாலயங்களின் எதிர்ப்புகள் மிகவும் பலவீனமாகவே இருந்தன. புதிதாக உருவான சமூக சனநாயக இயக்கங்களும், தொழிலாளர் இயக்கங்களும் மிகவும் ஆபத்துக்குரியவையாகக் கருதப்பட்டன. எனினும் இந்த இடதுசாரி இயக்கங்கள் அனைத்தும் அவற்றின் கோட்பாடுகளிலும் நடைமுறைகளிலும் சனநாயகம், ஒழுங்கு, தர்க்கம், முற்போக்கான வளர்ச்சி என்பதான விஞ்ஞானப் பொருத்தமுடைய சிந்தனைகளையே முன் வைத்தன. ஜெர்மன் நாட்டில் சமூக சனநாயகக் கட்சி வெளியிட்ட மே தினப் பதக்கத்தில் ஒரு புறம் கார்ல் மார்க்சின் படமும் மறுபுறம் அமெரிக்க சுதந்திர தேவதைச் சிலையும் பொறிக்கப் பட்டிருந்தன.



படிப்பகம்

www.padippkam.com

1929-'33 கால கட்டத்தில் உலக முதலாளியம் மிகப் பெரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்தது. அதை ஒட்டி தாராள சனநாயகச் சிந்தனைகளெல்லாம் சற்றே பின்னுக்குத் தள்ளப்பட்டு பாசிச உணர்வுகளும், சிந்தனைகளும், இயக்கங்களும் மேலெழுந்தன. 1920களின் தொடக்கத்திலிருந்தே இந்தப் போக்கினைக் காண முடியும்.

இதில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில் பாசிசம் என்றால் ஏதோ ஜெர்மனியில் இட்லரும், இத்தாலியில் முசோலினியும் உருவாக்கிச் செயற்படுத்திய அரசியற் கோட்பாடு என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உலகெங்கிலும் குறிப்பாக மேலை நாடுகள் அனைத்திலும் இத்தகைய பாசிச உணர்வுகளும், கோட்பாடுகளும், இயக்கங்களும் அன்று தலையெடுத்திருந்தன. லத்தீன் அமெரிக்க நாடுகள் சிலவற்றிலும் பாசிச எதிரொலிகள் எழும்பின. தாராள சனநாயகச் சிந்தனைகள் ஒதுக்கப்பட்டன. 1945 வரை இந்நிலை நீடித்தது எனலாம். இந்தியாவிலுங்கூட இக்கால கட்டத்தில் தான் (1925) இந்து உயர்சாதியினர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை உருவாக்கினர்.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின் மூன்றாம் உலக நாடுகள் காலனீய ஆட்சிகளிலிருந்து விடுதலை பெறத் தொடங்கின. கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் பொதுவுடைமைக் கட்சிகள் சோவியத் யூனியனின் ஆதரவோடு அரசுகளை அமைத்தன. எல்லையற்ற கனவுகளோடு மக்கள் இந்நாடுகளில் தேச நிர்மாணப் பணிகளிலும் சோசலிசக் கட்டுமானப் பணிகளிலும் ஈடுபட்டனர். கிழக்கு அய்ரொப்பிய அரசுகளுக்கு மட்டுமின்றி மூன்றாம் உலக அரசுகளுக்கும் சோவியத் யூனியனின் ஆதரவு குறிப்பிடத்தக்கதாய் அமைந்தது. ஸ்டாலினிய அரசுகளின் சனநாயக மறுப்புகள், மொத்தத்துவ ஆட்சிகள் பற்றிய விரிவான விமர்சனங்களை நாம் செய்துள்ளோம். 1950-1990 கால கட்டத்திய பனிப்போர் குறித்தும் விரிவான விளக்கத்திற்கு இது நேரமல்ல. 'வளர்ச்சி' என்கிற கோட்பாட்டிற்கு ஆட்பட்ட மூன்றாம் உலகத்தின் சார்பு முதலாளிய அரசுகள் ஒரு பக்கம் அமெரிக்கா, இதர முதலாளிய நாடுகள், உலக நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிடியில் சிக்கியிருந்த போதிலும் இன்னொரு பக்கம் சோவியத் யூனியனின் தலைமையிலான சோசலிச நாடுகளின் ஆதரவு என்பது உலக முதலாளியத்தை ஓரளவு சரியீடு (balance) செய்வதாக இருந்தது.

எனினும் அடுத்த இருபதாண்டுகளில் தேச நிர்மாணக் கனவுகளுடன் காலடி எடுத்து வைத்த மூன்றாம் உலக நாடுகளாயினுஞ் சரி, சமத்துவ லட்சியத்தை முன்னிறுத்தி இயங்கிய சோசலிச நாடுகளாயினுஞ் சரி மிகவும் இறுக்கமான, பொருளாதார ரீதியாய்த் தேங்கிப்போன, தேசிய இனங்களையும் சிறுபான்மையினரையும் ஒடுக்குகிற எதேச்சாதிகார அரசுகளாக மாறின. பெருமளவில் வறுமை, வேலையின்மை ஆகியவற்றையும் மூன்றாம் உலக மக்கள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. முதல் உலகம் எனச் சொல்லப்படுகிற பிரிட்டன், பிரான்ஸ் முதலான அய்ரோப்பிய நாடுகளிலும் பொருளாதாரத் தேக்கங்கள் உருவாயின. வளர்ச்சி (Development) மற்றும் சனநாயகம் குறித்த பெருங்கதையாடல்களெல்லாம் வீழ்ச்சியுற்றன.

இந்தப் பின்னணியில்தான் 1960களின் இறுதியில் பெரும் அரசெதிர்ப்பு இயக்கங்கள், மாணவர் இயங்கங்கள், போர் எதிர்ப்பு இயக்கங்கள், பசுமை இயக்கங்கள் முதலியன ஒரு வகை பின் நவீனச் சாய்வுடன் உருவாயின. சோவியத் மேலாண்மைக்கு எதிராகக் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும் சலசலப்புகள் தோன்றின. மூன்றாம் உலக நாடுகளில் தேசிய இன இயக்கங்கள், மாவோயிச இயக்கங்கள் தலைகாட்டத் தொடங்கின.

இரண்டாம் உலகப் போரில் பாடங் கற்றுக் கொண்ட முதலாளிய நாடுகள் 1945-1983க்கு இடைப்பட்ட காலத்தில் பெரும் போர் எதையும் தமது மண்ணில்



படிப்பகம்

www.padippkam.com

அனுமதிக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கது. எல்லாப் போர்களும் இராணுவ மோதல்களும் மூன்றாம் உலக நாடு களிலேயே நடத்தப்பட்டன. இந்தப் போர் களில் அழிந்து போன இருபது மில்லியன் மக்களும் மூன்றாம் உலகத்தவரே. வியட்நாம் போரில் கொல்லப்பட்ட அய்ம்பதாயிரம் அமெரிக்கர் மட்டும் ஒரு விதி விலக்கு. அறுபதுகளுக்கும் பிந்திய புரட்சிகளுங் கூட லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே மய்யங் கொண்டன. சே, பிடல், ட்ராட்ஸ்கி மாவோ ஆகியோர் உலகெங்கிலுமுள்ள இடதுசாரி இயக்கங்களின் புரட்சித் திரு உருக்களாக (icons of revolution) மாறினர். லத்தீன் அமெரிக்காவில் உருவான இந்த இயக்கங்களில் சோசலிசத் தன்மைகளைக் காட்டிலும் தேசியக் குணாம்சங்களே விஞ்சி நின்றன. சைமன் பொலிவர் முதலான தேசிய வீரர்கள் மறு கண்டுபிடிப்புக் குள்ளாயினர். "தந்தையர் நாடா, மரணமா?" என்கிற முழக்கத்தைத்தான் பிடல் காஸ்ட்ரோவும் கூட ஒலித்தார். ஆயுத எழுச்சி களாக இவை அமைந்தன. 1970கள் என்பன பயங்கரவாதம், எதிர் பயங்கரவாதம் இவை எல்லாவற்றிற் கும் மூலதாரமான அரசு பயங்கரவாதம், மோதல் சாவுகள், காவல் நிலையச் சித்திரவதைகள் நிரம்பிய ஒரு கொடுங் கால கட்டமாக விளங்கியது.

சே, பிடல் ட்ராட்ஸ்கி மாவோ ஆகியோர் உலகெங்கிலுமுள்ள இடதுசாரி இயக்கங்களின் புரட்சித் திரு உருக்களாக (icons of revolution) மாறினர்.

இந்தியாவிலுங்கூட மாவோயிச முழக்கங்களுடன் நக்சல்பாரி எழுச்சி உருவானது இக் காலகட்டத்தில்தான். தரகு முதலாளியம் என்ற வரையறையையும், ஆயுதப் புரட்சி, அழித்தொழிப்பு முதலான வழி முறைகளையும் இது முன் வைத்தது. ஆகக் கொடுமையான அரச பயங்கர வாதத்தின் மூலம் நக்சல்பாரி எழுச்சி எதிர் கொள்ளப்பட்டது. இலங்கையில் ரோகண விஜயவீராவின் தலைமையிலான எழுச்சியும் இவ்வாறே நசுக்கப்பட்டது.

இந்தியக் குடியரசுத் தலைவர்களில் ஒருவரான சஞ்சீவ ரெட்டி என்பவரின் மருமகனும் ஆந்திரச் சட்டமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தவரு மான தரிமேள நாகிரெட்டி, "ஏகாதிபத்தியத் திடம் இந்தியா அடகு வைக்கப்பட்டு விட்டது. சட்டமன்றத்தின் மூலம் இனி மக்களுக்கு விடுதலை இல்லை" என முழங்கி சட்டமன்றத்தை விட்டு வெளியேறினார். பின்னாளில் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டபோது 'இந்தியா அடகு வைக்கப்பட்டது (India mortgaged) என்கிற விரிவான தகவல்களும் தரவுகளும் அடங்கிய அவரது வாக்குமூலம் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு அன்று உணர்ச்சியூட்டுவதாக அமைந்தது. அன்று நக்சல்பாரிகள் சொன்னது இன்னும் விரிந்த பரிமாணங்களுடன் இன்று நடைமுறையாகியுள்ளது. உள்ளங்கை நெல்லிக் கனியாய் இது எல்லோருக்கும் விளங்கி நிற்கிறது. ஆனால் சாரு மசூம்தாரையும், நாகி ரெட்டியையும் நினைவு கொள்ளத்தான் யாருமில்லை.

### 3

1975ல் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. பத்திரிகைத் தணிக்கை, கடும் அடக்குமுறை, 'இந்திராவே இந்தியா, இந்தியாவே இந்திரா' என்கிற முழக்கம், சனநாயக மறுப்பு என்பவற்றை நாம் மறந்துவிட இயலாது. இவற்றிற்கெதிராகக் கனன்றெழுந்த எதிர்ப்பு. சனநாயக விழிப்புணர்வு, சனதா ஆட்சியில் நிறுவப் பட்ட மண்டல் குழு, பிற்படுத் தப்பட்ட சாதியினரின் படிப்படியான எழுச்சி, அம்பேத்கர் நூற்றாண்டை ஒட்டி தலித் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப் புணர்வு முதலியன சமீபத்திய நிகழ்வுகள். உலக அளவில் சோவியத் யூனியன் பலவீன மடைந்ததும், சோவியத் மேலாண்மைக்கும் ஏதேச்சதிகார அரசுகளுக்கும் எதிராக கிழக்கு அய்ரோப்பிய மக்கள் கிளர்ந்தெழுந் ததும், சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு அய்ரோப்பிய அரசுகள் வீழ்ந்ததும் சமீபத்திய நிகழ்வுகள். இதில் உலக முதலாளியம், தொலைக்காட்சி, தொடர்புச்



படிப்பகம்

www.padippkam.com

சாதனங்கள் ஆகியவற்றின் பங்கு என்பது நாம் சமீபமாகக் கண்டவை, அனுபவித்தவை.

ஒற்றைத் துருவ உலகின் கொடிய விளைவுகளை வளைகுடாப் போரின் போது பார்த்தோம். இன்றளவும் ஈராக், ஆப்கானிஸ்தான், கியூபா, ஓரளவிற்குச் சீனா முதலான நாடுகள் உலக முதலாளியத்தால் குறி வைத்துத் தாக்கப் படுகின்றன. இந்த நூற்றாண்டின் இறுதியில் நாம் கண்ட இன்னொரு கவலைக்குரிய விசயம் எல்லா நாடுகளிலும் புத்துயிர்ப்புப் பெற்று வருகிற நவ பாசிசப் போக்குகள். முந்தைய பாசிசம் யூதர்களை எதிரிகளாய் நிறுத்தியது; இன்றைய பாசிசம் மூன்றாம் உலக அகதிகளை, இசுலாமியரை எதிரிகளாக நிறுத்தி வளர்கிறது. மண்டல் குழு அமுலாக்கத்திற்கெதிரான உயர்சாதி எதிர்ப்புகள், இந்துத்துவப் புத்துயிர்ப்பு, பாபர் மசூதி இடிக்கப்பட்டமை, சிறுபாண்மையினர் மீதான தாக்குதல்கள் முதலியன இதற்கிணையான இந்திய நிகழ்வுகள்.

**நம்பிக்கை ஊட்டிய தலித் எழுச்சியைக் கூட உட்செரித்துக் கொள்ள இந்துத்துவம் முனைகிறது.**

'உலகம் என்றொரு கிராமம்' என்கிற முழக்கத்தோடு மேற்கொள்ளப்படுகிற உலகமயமாதலின் உச்ச நிகழ்வுகள் சென்ற நூற்றாண்டின் இறுதிக் காட்சிகளாக அமைந்தன. கருத்தியல்களின் காலம் மலையேறிவிட்டது, கருத்தியல்களின் காலம் முடிந்துவிட்டது என்கிற அறிவிப்போடு உலகமயச் சிந்தனையாளர்கள் வலம் வரு கின்றனர். எல்லாவற்றையும் பிரும்மாண்டங் களாக நிகழ்த்துவதும், சிறிய நிறுவனங் களைப் பெரிசுகள் உட்செரித்துக் கொள்வதும், கல்வி, மருத்துவம் உட்பட அனைத்தையும் சந்தைக்கான பொருட்க ளாக, லாபத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளாக்குவதும் உலகமயச் செயற்பாடுகளாக உள்ளன.

உலகமயமாக்கலின் இரும்புப் பிடிக்கு இந்தியாவும் தப்பவில்லை. புத்துயிர்ப்புப் பெற்று வருகிற வலதுசாரி எழுச்சிகள், நவ பாசிசப் போக்குகள் என்பன மீண்டும் தாராளவாத, சனநாயக, புரட்சிகரச் சிந்தனைகளைப் பின்னடைவுக் குள்ளாக்கி யிருக்கின்றன. தொழிற் சங்க இயக்கங்கள் தேக்கத்தை எட்டியுள்ளன. நம்பிக்கை யூட்டிய தலித் எழுச்சியைக் கூட உட்செரித்துக் கொள்ள இந்துத்துவம் முனைகிறது. பாசிசத்திற்குரிய எல்லாப் பண்புகளுடனும் வெற்றிகரமாக மேலெழுந்த இந்துத்துவம் இன்று ஆட்சியில். தமிழகமும் இந்தப் பொதுப் போக்குகளுக்கு விதி விலக்காய் இல்லை.

## 4

1958 அல்லது 59 ஆக இருக்கலாம். நான் படித்துக்கொண்டிருந்த பாப்பாநாடு அரசு இடை நிலைப்பள்ளியில் ஏதோ ஒரு விழா. 'தண்டல் நாயகம் அவர்களே வருக வருக' என்றொரு வரவேற்பு வாசகம் பெரிதாக எழுதப் பட்டிருந்தது. 'தண்டல் நாயகம்' என்ற சொல்லிற்கு 'கலெக்டர்' எனப் பொருளென் பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். 'மாவட்ட ஆட்சியர் என்பது இன்று பொதுமக்கள் மத்தியிலும் புழக்கத்திலுள்ள ஒரு சொல். 'அக்கிராசனர்', 'கனம்', 'அபேட்சகர்' முதலான சொற்களைத் தினசரி இதழ்களில் பார்த்திருக்க நம்மில் சிலருக்கு வாய்ப்புண்டு. 'விவாஹ முகூர்த்தப் பத்திரிகை', 'கிரஹப் பிரவேசம்', 'ஹாஸ்யம்' முதலான பிரயோகங்களும் கூட இன்று பழங்கதைகளாகிவிட்டன. மொழிப் பயன் பாட்டில் நிகழ்ந்தேறியுள்ள இந்த சனநாயக மாற்றம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்து செயல்பட்ட தமிழுணர்வு, அச்சு இதழியல் துறைகளின் விரிவாக்கம் ஆகியவற்றின் விளை பொருள்.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் (1902) வேதாசலம் பிள்ளை 'ஞானசாகரம்' என்கிற தனது இதழின் பெயரை 'அறிவுக் கடல்' எனத் தூய தமிழாக்கினார். தனது



படிப்பகம்

www.padippkam.com

பெயரையும் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார். மாதவய்யா கூடத் தனது இதழுக்குத் 'தமிழர் நேசன்' என்றுதான் பெயரிட்டார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக 'செந்தமிழ்' வெளிவரத் தொடங்கியது (1902). பாரதியார் 'சக்கரவர்த்தினி' தொடங்கியபோது (1906) 'தமிழ்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே நோக்கமாக வெளியிடப்படும் மாதாந்தரப் பத்திரிகை' என்றுதான் அதை அறிமுகப் படுத்தினார். 'தமிழ் மாது' (1906), 'தமிழ் நேஷனல் பத்திரிகை' (1907), அயோத்தி தாச பண்டிதரின் 'ஒரு பைசாத் தமிழன்' (பின்னர் 'தமிழன்' 1907), 'தமிழ் அபிமானி' (1921), 'செந்தமிழ்ச் செல்வி' (1923), 'தமிழ்ப் பொழில்' (1925) என்பன சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த சில தமிழ் இதழ்கள். இப்படிப் பெண்கள் இதழாயினும் சரி, தாழ்த்தப்பட்டவர்களின் இதழாயினும் சரி 'தமிழ் என்கிற அடையாளத்துடன் வெளிவர நேர்ந்த சூழல் நமது கவனத்திற் குரிய ஒன்று.

1907 தொடங்கி வெள்ளையராட்சிக்கு எதிரான (அகில இந்தியத்) தேசியப் பேரலை வீசத் தொடங்கியது. பாரதி சொன்னது போல "சென்ற சுபகிருது வருஷத்திலே (1907) பாரத நாட்டில் எல்லாச் சுபங்களுக்கும் மூலாதாரமாகிய தேசபக்தி என்ற நவீன மார்க்கம் தோன்றியது". இக் கூற்றில் இரு அம்சங்கள் நம் கவனிப்பிற்குரியன. ஒன்று: தேசத்தின் சுபமும் குடிமகனின் சுபமும் ஒன்று என்பது; மற்றது: இதுவரை இல்லாத புதிய மார்க்கமாகத் 'தேசபக்தி'யை முன் வைப்பது. Nationalism என்ற சொல்லை 'ஜாதீய அறிவு' என்று மொழியாக்கிய பாரதி, 'நாட்டினுடைய ஷேம லாபமே தன்னுடைய லாபம்' என அதற்கு விளக்கமளித்தார். 'தேசத்தைக் காத்தல் செய்' என்பது அவரது ஆத்திச் சூடி. "ஸ்வதேசாபிமானமும் ஸ்வபாஷாபிமானமுமில்லாத காகத்தை ஒரு காகம் என்று சொல்லுதல் தகுமோ? அதைப் பறந்து தீனி தின்று திரியும் கரும் சிறு பிணமென்றுதான் சொல்ல வேண்டும்" என்று கதை எழுதியவரும் (காக்கை இலக்கணம் கற்ற கதை) அவரே.

இவ்வாறு முகிழ்த்த (அகில இந்தியத் தேசிய உணர்வுக்கும் தமிழுணர்வுக்கும் இடையிலான சில வேறுபாடுகள் இங்கே கருதத்தக்கன. அகில இந்தியத் தேசியத்தை முன்னெடுத்ததில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர்கள் பாரதி, வ.வே.சு. அய்யர் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலானோர் குறிப்பாகப் பார்ப்பனர்கள் தேசியத்துடனும் வேளாளர், செட்டியார், முதலியார் முதலான இதர மேற் சாதியினர் தம்மைத் தமிழுணர்வுடனும் அடையாளம் கண்டனர் தமிழுணர்வைப் பொருத்த மட்டில் அது சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் தேசிய உணர்வாக, தனிநாட்டுக் கோரிக்கை யாக உருப்பெறவில்லை. 1930களின் பிற்பகுதியில், இந்தி எதிர்ப்புப் போராட்டத் திற்குப் பின்பே 'தமிழ்நாடு தமிழருக்கே என்பது போன்ற கோரிக்கை உருப்பெற்றது தொடக்கத்தில் தமிழுணர்வு என்பது சைவ உணர்வுடன் பின்னிப் பிணைந்ததாகவே இருந்தது. அயோத்தி தாச பண்டிதர் மட்டும் விதிவிலக்கு. தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய இவர் தமிழ் என்னும் அடையாளத்தைச் சைவத்திலிருந்து பிரித்து பவுத்த மரபுடன் இணைக்க முயற்சித்தார்.

தமிழ் மீட்பு வாதத்திற்கு அடிக்கல் நாட்டிய மறைமலை அடிகள், ஜே.எம் நல்லுசாமிப் பிள்ளை (சித்தாந்த தீபிகை சித்தாந்த சமாஜம்) முதலியோர் முழுமை யாகத் தமிழைச் சைவத்தோடு பிணைத் தனர். சி.வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் முதலான 'யாழ்ப்பாணக் குழாத்தினர்' இவர்களுக்கு மூலாதாரமாக விளங்கினர். யாழ்பாணத் தமிழ்ச் சங்கத்தின் மாதிரியிலேயே மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பாண்டித்துரைத் தேவர் நிறுவினார். "தமிழ் மொழியின் வளர்ச்சியைப் போன்ற சமாந்தரப் போக்கு தமிழர் தேசியத் தத்துவமாகிய சைவ சித்தாந்தத்தில் காணப்படுகிறது" என முழங்கினார் செ கனகசபைப் பிள்ளை (யாழ்ப்பாணம் ரிட்ஜ்வே மண்டபத்தில் 1892ல் நடைபெற்ற கூட்டமொன்றில்). "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்" என்கிற முக்கிய நூலின் ஆசிரியர் இவர்.



படிப்பகம்

www.padippkam.com

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே பல்வேறு தமிழ்ச் சாதியினரும் அவரவர்கள் சாதி அடையாளத்தை முதன்மைப்படுத்தி இயங்கவும் இதழ்கள் நடத்தவும் தொடங்கினர். இருபதாம் நூற்றாண்டிலும் இது தொடர்ந்தது. 'முத்தரையர் முழக்கம்', 'மீனவர் ஓசை', 'முக்குலமுரசு', 'மறவர் தூதன்', 'செங்குந்த மித்திரன்', 'கருணீக மித்திரன்', 'வேளாளன்', 'முசுலிம் தூதன்', 'இசுலாம் நேசன்' முதலியன இவ்வாறு வெளியான சில இதழ்கள். ஆக சாதிகளை ஒழித்து அதனூடாகத் தமிழ் அடையாளம் அல்லது இந்திய அடையாளத்தைக் கட்டுவது என்பதற்குப் பதிலாக இத்தகைய சாதி அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொண்டே, சாதீய ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக்கொண்டே அவற்றை இணைத்து மூடி நிற்கும் ஒரு குடையாக இங்கு தேசிய உணர்வுகள் உருவாக்கப் பட்டன. "ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அன்னியர் வந்திங்கு புகலென்ன நீதி" எனப் பாரதி சினந்தது இதற்கு ஒரு சான்று. தேசிய உணர்வைக் கற்பிப்பதற்கென இவர்கள் சார்ந்திருந்த கலாச்சாரக் கூறுகள் இந்நிலைக்கு இட்டுச் செல்வதன் தவிர்க்க இயலாமையும் சிந்திக்கத்தக்கது.

வெள்ளையராட்சி ஏற்படுத்திய சில மாற்றங்களினூடாக தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி, உரிமைகளைக் கோர மேற்கண்ட முயற்சிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டில் தொடர்ந்தன. 1891ல் 'ஆதிதிராவிட மகாஜன சபை'யை இரட்டைமலை சீனிவாசன் உருவாக்கினார். 1891-1900 காலகட்டத்தில் 'பறையன்' என்னும் வார இதழையும் நடத்தினார். 'பஞ்சமன்', 'திராவிட மித்திரன்', 'திராவிட பாண்டியன்' முதலானவை தாழ்த்தப்பட்ட மக்களால் நடத்தப்பட்ட வேறு சில இதழ்கள். தமிழ்த் தேசிய உணர்விலிருந்தும் தேசிய இயக்கங்களிலிருந்தும் தாழ்த்தப்பட்டவர்கள் தம்மை விலக்கி நிறுத்திக் கொண்டது குறிப்பிடத் தக்கது.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகெங்கிலும் உணரப்பட்ட தாராள சனநாயகக் கருத்துக்களும் ரசியப் புரட்சியின் விளைவான புதிய சிந்தனைகளும் தமிழகத்திலும் எதிரொலித்தன. பார்ப்பனராயினும் மாதவய்யா சாதி எதிர்ப்புக் கருத்துக்களையும், விதவைத் திருமணம் முதலான சீர்திருத்தக் கருத்துக்களையும் தாங்கின கதைகளை எழுதினார். 1903ல் அவரது 'முத்து மீனாட்சி அல்லது பார்ப்பன விதவை மறுமணம்' வெளிவந்த போது 'இந்து' நாளிதழ் அதனைக் கண்டித்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இயங்கிய தமிழ் எழுத்தாளர்களில் நவீனத்துவ மாற்றங்களை விளங்கிக் கொண்டவர்களாக நமக்குக் காணக் கிடைப்பது பாரதியும் மாதவய்யாவும் மட்டுமே. ஒரு மாற்று வரலாற்று வாசிப்பை நிகழ்த்தியவர் என்கிற வகையில் குறிப்பிடப் பட வேண்டியவர் அயோத்தி தாசபண்டிதர்.

தாராள சனநாயகக் கோரிக்கைகள் அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகவே 1916ல் உருவான 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' மற்றும் அது முன் வைத்த பார்ப்பனரல்லாதார் அறிக்கையையும் இரட்டை மலை சீனிவாசன் முதலானோர் அன்றைய சட்ட அமைப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு வந்த தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களையும் காணவேண்டும். 1920ல் நீதிக் கட்சி ஆட்சியிலமர்ந்தது. 1921ல் வகுப்பு வாரி ஆணை பிறப்பிக்கப்பட்டது. 'அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்' கொண்டுவரப்பட்ட போது, "கடவுளரையும் மதத்தையும் அழிக்க முனைந்து விட்டார்கள்; ஆண்டவனையே சட்டம் போட்டு அடக்கப் பார்க்கிறார்கள்" என்றும் 'தேவதாசி ஒழிப்பு மசோதா' தாக்கல் செய்யப்பட்ட போது (1929), "இந்தியக் கலாச்சாரத்தை அழிக்க முனைந்துவிட்டார்கள்" என்றும் சத்திய மூர்த்தி முதலான உயர்சாதித் தேசியத் தலைவர்கள் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக் குரலை அழிவு சக்தியாக



படிப்பகம்

www.padippkam.com

உருவகப்படுத்திக் கடுமையாகத் தாக்கினர். 1920களில் தீண்டாமைக் கெதிரான பல சட்டங்களை நிறைவேற்றுவதில் சீனிவாசன் வெற்றி பெற்றாராயினும் அவர் முன் மொழிந்த பல சட்டங்கள் வீழ்த்தப்பட்ட செய்தியும் இங்கே குறிப்பிடத் தக்கது.

1920களில் நிகழ்ந்த இரு அரசியல் பிரவேசங்கள் இந்திய அளவிலும் தமிழகத் திலும் பெருந் தாக்கங்களை விளைவித்தன. அகில இந்திய அளவில் காந்தி, தமிழக அரசியலில் பெரியார். தீண்டாமைக்கெதி ராக காங்கிரஸ் இயக்கம் நடத்திய வைக்கம் போராட்டத்தில் (1923-'24) பெரியார் பங்கு பெற்றார். 1925ல் சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினையை முன்வைத்து காங்கிரசை விட்டு விலகிச் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். தொடக்கத்தில் சோசலிசக் கருத்துக்களின்பால் ஈர்க்கப்பட்ட பெரியார் பின்னர் நீதிக்கட்சியை இணைத்து 'திராவிடர் கழக'மாக உருவாக்கினார். சாதி எதிர்ப்பை மய்யமாகக் கொண்ட அவரது தீவிரமான செயற்பாடுகள் சுமார் அய்ம்பதாண்டு காலம் தமிழகத்தில் தடம் பதித்தன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தி லிருந்தே தொழிலாளர் இயக்கங்கள் உருவாயின; வேலை நிறுத்தக் கிளர்ச்சிகள் நடைபெற்றன. திலகர் கைது செய்யப் பட்டதை எதிர்த்து பம்பாய்த் தொழிலாளர் (1908) வேலை நிறுத்தம் செய்தனர். 1906ல் தபால் ஊழியர் வேலை நிறுத்தம் நடை பெற்றது. 1928, 30களில் தொழிற்சங்கப் போராட்டங்கள் உச்சம் அடைந்தன. திரு.வி.க., சர்க்கரைச் செட்டியார் முதலானோர் தொழிற்சங்க இயக்கங்களில் முன்னோடியாக இருந்தனர். சிங்காரவேலர், ஜீவா முதலியோர் பொதுவுடைமைச் சிந்தனைகள் அறிமுகமாவதில் முக்கிய பங்காற்றினர். 1920ல் திரு.வி.க. 'நவசக்தி' இதழைத் தொடங்கினார். ம. சிங்கார வேலரின் 'தொழிலாளர்' (1923), வ. சுப்பையா வின் 'சுதந்திரம்' (1935), திரு.வி.க.வின் 'சமதர்மம்' (1934) முதலியன தொடக்ககால இடதுசாரி இதழ்களில் சில.

முதற்கட்ட நாவலாசிரியர்கள், சிறு கதையாசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர்கள், பதிப்பாசிரியர் கள் ஆகியோரின் உயர் சாதிப் பின்புலத்தை யும் அவர்களது 'படைப்பு' முயற்சிகளில் தொனித்த 'பண்பாட்டுக் கவலை' (அதாவது நவீன மாற்றங்கள் இந்துப் பண்பாட்டைச் சிதைத்துவிடக் கூடாதே என்ற கவலை) யையும் பற்றி விரிவாகப் பலமுறை பேசியாயிற்று. வெள்ளைக்காரர்களின் தயவில் இங்கே அறிமுகமான நவீனநிலை (Modernity) இந்துத்துவக் கறைபட்டுச் சிதைந்த நவீனத்துவமாகவே வெளிப் பட்டது என்பதைமட்டும் நினைவிற் கொள்வோம்.

எழுதப் படிக்கத் தெரியாத பெருந் தொகையினரான கிராமப்புறத் தமிழ் மக்களின் ஒரே பொழுது போக்காகவும் கலை, இலக்கிய ரசனையாகவும் அன்றைய பாய்ஸ் கம்பெனி நாடக சபைகளே விளங்கின. திருவிழாக்கள் மற்றும் சடங்குகளோடு இணைந்த தெருக்கூத்துகள், ஊர் ஊராகச் சென்று நிகழ்ச்சிகள் நடத்துகிற தோல்பொம்மை நாடகக் குழுவினர், திருவிழாக்களில் நடைபெறும் நாட்டுப்புற இசை மற்றும் ஆடல்கள், பாய்ஸ் கம்பெனி நாடகங்கள் என யாவும் பெரும்பாலும் புராண, இதிகாச நிகழ்வுகளையே பாடும் பொருளாகக் கொண்டிருந்தன. நாட்டுப்புற ஆடல் பாடல்கள் மட்டும் சிறிது விதி விலக்காகவிருந்தன என்று சொல்லலாம். ஓரிரவிற்குள் ஒரு நாடகம் இயற்றுகிற புலமைத் திறம் வாய்ந்த சங்கரதாஸ் சுவாமிகளின் 'தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை' என்பது தொடக்க கால 'பாய்ஸ் கம்பெனி'களில் ஒன்று. மேற்தட்டு ரசிகர்களை நோக்கிய சாஸ்திரீய சங்கீதம் எனப்பட்ட கருநாடக இசை என்பது பெரும்பாலும் உயர் சாதியினரின் பிடியிலேயே இருந்தது.

## 5

இட்லர் ஆட்சியைக் கைப்பற்றிய அதே காலகட்டத்தை ஒட்டி இங்கே



படிப்பகம்

www.padippkam.com

ஏற்பட்ட சில அரசியல், பண்பாட்டு நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கன. தாழ்த்தப்பட்டவர்களுக்காக அம்பேத்கர் முன்மொழிந்த இரட்டை வாக்குரிமை உரிமையை காந்தி பெருமுயற்சி செய்து நடைமுறைக்குக் கொண்டு வராமல் தடுத்தார். இதற்கான பூனா ஒப்பந்தம் 1932ல் கையெழுத்தாகியது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஈடுகட்ட 1933-34 காலப் பகுதியில் காந்தியும் காங்கிரஸ்காரர்களும் முன்னின்று ஆலயப் பிரவேச நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். தமிழகத்திலும் இதன் எதிரொலிப்புகளைக் காண முடிந்தது. தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் ஆலய உரிமைகள் கோரி ஏற்கனவே போராட்டங்கள் நடத்திவந்தனர். இன்றும் நடைபெறுகிற திருவாடனை கோயில் போராட்டம் அன்றே தொடங்கியிருந்தது. 1934ல் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் தேவகோட்டை பூச்சி, சாதி இந்துக்களால் கொல்லப்பட்டார். இந்தக் கொலையைக் கண்டித்து காந்தி அறிக்கை விட வேண்டியதாயிற்று; காங்கிரஸ்காரர்கள் கண்டன நிகழ்ச்சிகள் நடத்தினர்.

பாரத மாதா படம், 'மகாத்மா காந்தி வாழ்க' என்கிற முழக்கம் ஆகியவற்றோடு 1924ல் 'குடிஅரசு' இதழைத் தொடங்கிய பெரியார், தனது அய்ரோப்பியப் பயணத்தை முடித்து வந்து சில காலத்திற்குப் பிறகு 'விடுதலை' (1935) இதழைத் தொடங்கினார். 1930களின் இறுதியில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தியவரும் தனது வாழ்நாள் முழுமையும் தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கையை முன் வைத்தவருமான பெரியார் தொடர்ந்து தேசப்பற்று, மொழிப் பற்று ஆகிய கட்டமைப்புகளுக்கு எதிராகவே இருந்தார். தேசாபிமானமும் பாஷாபிமானமும் இல்லாதவர் மனிதரே அல்ல எனத் தேசியவாதிகள் மொழிந்து கொண்டிருந்தபோது, மனிதன் விட்டொழிக்க வேண்டிய பற்றுக்களில் முதன்மையாகத் தேசப் பற்றையும் மொழிப் பற்றையும் கூறிப் பிரச்சாரம் செய்தார் பெரியார். 'தேசபக்தி என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்று சொல்லி வந்த பெரியார் தன்னை ஒரு தேசத் துரோகி என்றே அழைத்துக் கொண்டார். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சொன்னபோதுகூட தமிழ்த் தேசப் பெருங்கதையாடல் எதையும் அவர் முன்வைக்காதது குறிப்பிடத் தக்கது. சொல்லப் போனால் இத்தகைய பெருங்கதையாடல்களை அவர் சிதைத்தே வந்தார். தமிழைக் காட்டுமிராண்டி மொழி என அவர் சொல்லி வந்தது சிந்திக்கத் தக்கது.

**'தேசபக்தி என்பது அயோக்கியர் களின் கடைசிப் புகலிடம்' என்று சொல்லி வந்த பெரியார் தன்னை ஒரு தேசத் துரோகி என்றே அழைத்துக் கொண்டார்.**

வருணா சிரமத்தை உள்ளடக்கியுள்ள அரசியல் சட்டத்தை நான் ஏற்காததால்தான் தனி நாடு கோருகிறேன், அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்து விட்டாயானால் நான் பிரிவினைக் கோரிக்கையை விட்டு விடுவேன் என்று கூட அவர் சொன்னார்.

இந்த நூற்றாண்டில் சுயமாய்ச் சிந்தித்த ஒரே தமிழ்ச் சிந்தனையாளர் எனச் சொல்லத் தக்க ஈ.வெ.ராமசாமிப் பெரியார் தன் வாழ்நாள் இறுதிவரை (1973) தேசப்படம், தேசியக் கொடி, அரசியல் சட்டம், கடவுளரின் புனித உருவங்கள், கம்ப இராமாயணம் உள்ளிட்ட இதிகாசங்கள் ஆகியவற்றை அழிப்பவராகவும் அவமானம் செய்தவருமாகவே இருந்தார் என்பதும் தேசத்திற்கும், மொழிக்கும், மரபுகளுக்கும், இந்து மதத்திற்கும் விசுவாசமற்ற சுயமரியாதை மிக்கத் தன்னிலைகளை உருவாக்குவதாகவே அவரது செயற்பாடுகள் அமைந்தன என்பதும் இங்கே நினைவுகூறத் தக்கன. பன்நூற்றாண்டுகளாக இங்கே மேலாண்மை செய்துவந்த பார்ப்பனீயம் சற்றே கதிகலங்கியது இன் நூற்றாண்டில்தான், அதுவும் பெரியாரைக் கண்டுதான்.

சுதந்திர தினத்தைத் (1947) துக்க நாளாக அறிவித்த பெரியாரிடமிருந்து



படிப்பகம்

www.padippkam.com

இந்தக் காரணத்திற்காக விலகத் தொடங்கிய அண்ணா வெகுவிரைவில் (1949) 'திராவிட முன்னேற்றக் கழகத்தை' உருவாக்கினார். பெரியாரைப் போலன்றி தேர்தலில் பங்கேற்று படிப்படியாக ஆட்சி அதிகாரத்தை நோக்கி தி.மு.க. முன்னேறியது. தேசத்திற்கும் சமூக அமைப்பிற்கும் விசுவாசமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க குடிமக்களைக் கட்டமைப்பதாக தி.மு.க.வின் சொல்லாடல்களும் செயல்பாடுகளும் விளங்கின. பெரியாரும் சரி, தி.மு.க.வும் சரி தமிழர் யார் என்பதிலும் எதிரிகளைக் கட்டமைப்பதிலும் இறுக்கமற்ற (Fuzzy Definition), இசுலாமியர், தாழ்த்தப் பட்டோர், பிறமொழியினர் ஆகிய அனைவரையும் உள்ளடக்குகிற ஒரு வரையறையையே முன்வைத்ததன் மூலம் தமிழ்த் தேசியம் தமிழ்ப் பாசிசமாக உருப்பெறாது தடுத்து நிறுத்தினர்.

1933ல் தான் தமிழ் மறுமலர்ச்சியின் அடையாளமாகவும் சிற்றிதழ் பாரம்பரியத்தின் முன்னோடியாகவும் சொல்லப்படுகிற மணிக்கொடி இதழ் தொடங்கப்பட்டது. தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு இதழாகப் பிறப்பெடுத்த மணிக்கொடி மிக விரைவில் 'அரசியலை உதறிவிட்டு' முற்றிலும் ஒரு இலக்கிய இதழாக (சிறுகதைப் பதிப்பு) மாறியது. கு.ப. ராஜகோபாலன், புதுமைப் பித்தன், பிச்சமூர்த்தி, எம்.வி. வெங்கட்ராம் முதலான மிக முக்கியமான எழுத்தாளர்கள் மணிக்கொடிக்காரர்களாகவே இன்று அடையாளம் காட்டப்படுகின்றனர்.

மணிக்கொடியின் மூன்றாவது பரிமாணத்தில் மீண்டும் அரசியல் நுழைந்தது. தமிழுணர்வு, இந்தி எதிர்ப்பு முதலியவை கேலி செய்யப்பட்டன. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தைக் காலிகளின் இயக்கம் என மணிக்கொடி இதழில் தொடர்ந்து எழுதப்பட்டது. சாதிப் பிரச்சினை, தொழிலாளர் இயக்கங்கள், நடைபெற்றுக் கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் எதைப்பற்றியும் மணிக்கொடி (சிறுகதைப் பதிப்பு) கண்டு கொண்டதில்லை. பெரும்பாலும் உயர்சாதி எழுத்தாளர்களாலேயே நடத்தப்படுவதாகவும், அரசியலை முற்றிலும் விலக்கியதாகவுமுள்ள ஒரு சிற்றிதழ்ப் பாரம்பரியத்தின் தோற்றப் புள்ளி இதுவே. மேலை x கீழை (மரபு) என்கிற முரணை உருவாக்கி, கீழை மரபை உன்னதமென உயர்த்திப்பிடிக்கும் சனாதனச் சிந்தனைகள் மிகுந்தவர்களாகவே பெரும்பான்மை மணிக்கொடி எழுத்தாளர்கள் விளங்கினர். "மணிக்கொடி எந்நாளுமே பட்டொளி வீசிப் பறந்த தில்லை" என்று பின்னாளில் கைலாசபதி அவர்கள் குறிப்பிட்டது எளிதில் புறக்கணிக்கப்படக்கூடியதல்ல.

தமிழ்க் கவிதையின் வடிவத்தில் மணிக்கொடி எழுத்தாளர்கள் ஏற்படுத்திய ஒரு தாக்கமாகப் 'புதுக்கவிதை'யின் உருவாக்கத்தைக் குறிப்பிடவேண்டும். இலக்கணத் தளைகளிலிருந்து கவிதை மொழியை மீட்டெடுத்ததன் மூலம் கவிஞனின் சுதந்திரம் வடிவத்தில் மட்டுமின்றி உள்ளடக்கத்திலும் விரிந்த பரிமாணங்களுடையதாக மாறியது. புதுக்கவிதை வடிவத்தைப் புலவர்களும் மார்க்சியர்களும் எதிர்த்தனர். மாற்றங்களைப் புலவர் மரபு சகிக்க இயலாமற் போனதை நம்மால் விளங்கிக் கொள்ள இயலுகிறது. "மாறுவது ஒன்றே மாறாதது" என்று கூறுகிற மார்க்சியர்கள் இந்த மாற்றத்தைப் புரியாமலிருந்தது சிந்தனைக் குறியது.

1940களின் பிற்பகுதியில் தொடங்கி 1950களின் முற்பகுதிவரை தீவிரமாக இயங்கிய திராவிட இயக்கத்தவரின் கலை இலக்கியச் செயற்பாடுகள் குறிப்பிடத் தக்கவை. நாடகத் துறையில் தேசிய இயக்கம் ஏற்கனவே சில தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. முற்றிலும் புராணக் கதைகள் என்பதிலிருந்து சமூகக் கதைகளும் நாடகப் பொருளாக மாறியிருந்தன. 'தேசபக்தி', 'ஜம்புலிங்கம்', 'கதரின் வெற்றி', 'டம்பாச்சாரி', 'பம்பாய் மெயில்', 'மேனகா' முதலிய நாடகங்கள் சில எடுத்துக்காட்டுகள். நாடக மேடைகளைத் தேசியப் பிரச்சாரத்திற்குப்



படிப்பகம்

www.padippkam.com

பயன்படுத்தியதும், பகத்சிங் தூக்கிலிடப் பட்டபோது (1931) கடும் அடக்குமுறைகளையும் மீறி அதனைக் கண்டிக்கிற பாடல்களை நாடக மேடைகளில் பாடியதும் குறிப்பிடத் தக்கன. 1937ல் மேடை ஏறிய 'குமாஸ்தாவின் பெண்' குறிப்பிட வேண்டிய ஒன்று. பெரியார், அண்ணா முதலியோர் இந் நாடகத்தைப் பாராட்டினர். 1944-45 ஆண்டுகளில் தமிழக அளவில் நாடகக் கலை மாநாடுகள் நடத்தப் பட்டன. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திராவிட இயக்கத்தவரின் நாடக, திரைப்பட முயற்சிகள் புராணக் கதைகளிலிருந்து தமிழ் நாடகத்தை பெருமளவிற்கு விடுதலை செய்தன. சமூக சீர்திருத்தக் கருத்துக்கள், மூட நம்பிக்கை எதிர்ப்பு, பார்ப்பன 'சம்பாஷணை'களைத் தவிர்த்து ஓரளவு நல்ல தமிழில் உரையாடல்கள் அமைத்தல் என்பன இவர்களது நாடக திரைப்பட முயற்சிகளின் முக்கிய அம்சங்களாயிருந்தன. அண்ணா, மு.க., எம்.ஆர்.ராதா முதலியோர் இவ்வகையில் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

பார்ப்பனரல்லாதோர் இயக்கமாகத் தோன்றி திராவிட இயக்கமாகப் பரிணமித்த இவர்களது அரசியலிலிருந்து தாழ்த்தப் பட்டவர்கள் அன்னியப்பட்டு நின்றதைக் குறிப்பிட்டோம். நீதிக் கட்சி ஆட்சி இறக்கப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட மக்களின் அன்றைய தலைவர் எம்.சி.ராஜா கடவுளுக்கு நன்றி சொன்னார். திராவிட இயக்கத்தவரின் இலக்கிய முயற்சிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய கவனமளிக்கப்படவில்லை. காங்கிரஸ்காரர்கள் மேற்கொண்ட அளவிற்குக் கூட அரசியலிலும் சரி, கலை இலக்கியங்களிலும் சரி தி.மு.க.வினர் தீண்டாமைப் பிரச்சினையைத் தொட்டதில்லை. நாட்டுப்புற இலக்கியங்கள், நாட்டுப்புற நாயகர்கள், நாட்டுப்புற மொழி ஆகியவற்றையும் கூட திராவிட இயக்கத்தவர் கண்டு கொண்டதில்லை. 1960 வரை இந்நிலை தொடர்ந்தது.

## 6

நாட்டுப்புறக் கலை இலக்கியங்களின் பால் கவனம் ஈர்த்ததில் இடதுசாரிகளின் பங்கு கணிசமானது. பின்னாளில் பொதுவுடைமையாளர்களாலேயே கைவிடப்பட்ட சோசலிச எதார்த்தவாதம், பிரதிபலிப்புக் கொள்கை, அடித்தள - மேற்கட்டுமானச் சிந்தனை ஆகியவை உச்சம் பெற்று விளங்கிய காலகட்டமாயினும் 1958-'65ல் வெளிவந்த 'சரஸ்வதி', 'தாமரை', 'சாந்தி' முதலிய இடதுசாரி இதழ்களின் பங்களிப்பு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. பாரதியின் முற்போக்குப் பரிமாணத்தை உயர்த்திப் பிடித்த இடதுசாரிகள் தமது இதழ்களின் வாயிலாக ஈழத்து எழுத்தாளர்கள் பலரையும், கிராமப்புறங்களிலிருந்து எழுதவந்த பலரையும் அறிமுகம் செய்தனர். கே. டானியல், கி. ராஜநாராயணன் முதலியோர் இடதுசாரி இதழ்கள் மூலமாகவே தமிழ்ச் சூழலில் அறிமுகமாயினர்.

1948-1952 காலகட்டத்திய விவசாய இயக்கங்கள், அவற்றின் மீதான கடும் அடக்குமுறைகள் ஆகியவற்றிற்குப் பிறகு பொதுவுடைமையாளர்கள் பாராளுமன்றப் பாதையைத் தெரிவு செய்தனர் (1952). தங்களின் கவனத்தை இலக்கிய / பண்பாட்டுப் பிரச்சினைகளின்பால் திருப்ப வாய்ப்புக்கிடைத்தபோது அவர்கள், இதர புலவர் மரபோ, கல்வியாளர்களோ, திராவிட இயக்கத்தினரோ, சிறு பத்திரிகையாளர்களோ கண்டு கொள்ளாமல் புறக்கணித்திருந்த மேற்குறித்த கலை - இலக்கியக் கூறுகளுக்கு முதன்மை அளித்தனர். தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைகளைக் கருவாய்க் கொண்ட இலக்கிய முயற்சிகளும் முதன் முதலில் இவர்களிடமிருந்துதான் உருவாயின.

இடதுசாரிப் பின்புலத்தில் உருவாகிப் பின்னாளில் தமிழில் பரவலாக வாசிக்கப் படக்கூடிய எழுத்தாளராகப் பரிணமித்தவர் ஜெயகாந்தன். அவரும் ஜி. நாகராஜனும்



படிப்பகம்

www.padippkam.com

அடித்தளமக்கள், விளிம்பு நிலையினரை நடுநாயகமாகக் கொண்ட இலக்கிய வார்ப்புகளைச் செய்தனர். ஈழத்து எழுத்தாளர்களாகிய டானியல், டொமினிக், ஜீவா, ரகுநாதன், எஸ். பொன்னுத்துரை முதலியோர் ஈழத்தின் விளிம்பு நிலையினரான தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினைகளை எழுதினர். முதன் முதலில் ஒரு ஓரினப் புணர்ச்சியாளனை,பெரு வியாதிக்காரனை நாயகனாக வைத்து எழுதப்பட்ட கரிச்சான் குஞ்சுவின் 'பசித்த மானுடம்' 1978ல் வெளிவந்தது.

1965-'74 கால கட்டத்தில் வெளிவந்த 'கசடதபற', 'கண்ணதாசன்', 'கணையாழி', 'தீபம்' முதலிய சிற்றிதழ்கள் மணிக்கொடி பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகச் செயற்பட்டன. பல முக்கிய எழுத்தாளர்கள் இவற்றினூடாக வெளிப்பட்டனர். கவிஞர் கண்ணதாசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'கண்ணதாசன்' முழுக்கவும் மணிக்கொடி மரபில் வைத்துச் சொல்ல முடியாத ஒரு இதழ். ஜி. நாகராஜன், ஜெயகாந்தன், என்.ஆர்.தாசன் முதலியோரின் எழுத்துக்கள் இதில் தொடர்ந்து இடம் பெற்றன. கொஞ்சகாலம் ஜெயகாந்தனை ஆசிரியராகக் கொண்டு 'ஞானரதம்' இதழ் வெளிவந்தது. மேற் குறித்த சிற்றிதழ்களும் சரி பின்னர் வெவ்வேறு நபர்களாலும் குழுக்களாலும் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில் வெளிவந்த 'கொல்லிப் பாவை', 'வைகை', 'யாத்ரா' முதலான எண்ணற்ற பல சிற்றிதழ்கள் சனரஞ்சக இதழ்களுக்கு மாற்றாக விளங்கின. சோதனை முயற்சிகளுக்கு இடமளித்தன எனினும் மிகவும் தர்க்க வகைப்பட்ட ஒழுங்கு முறைகளுக்குள் தேங்கி நின்ற இவை தமிழ் எழுத்துலகில் பெரிய பண்பு மாற்றம் எதையும் ஏற்படுத்தத் தக்கனவாக இல்லை.

**இலக்கியம் என்பது காலத்தை விஞ்சியது (Trancedental) வரலாற்றிற்கு அப்பாற் பட்டது என்கிற கருத்தாக்கத்தை கைலாசபதி, சிவத்தம்பி, கோ. கேசவன் முதலான மார்க்சிய ஆய்வாளர்கள் கேள்விக் குள்ளாக்கினர்.**

தமிழ் ஆய்வுச் சூழலிலும், விமர்சனத் துறையிலும் மார்க்சியச் சிந்தனையாளர்கள் ஏற்படுத்திய தாக்கம் குறிப்பிடத்தக்கது. இன்று அனைத்துத் தரப்பினராலும் முற்றாக ஒதுக்கப்படுகிற கறாரான ஸ்தானோவியப் பார்வையை வரித்துக் கொண்டவராயினும் நா. வானமாமலை, மார்க்சீய ஆய்வை வெறும் மனிதாயத் தேடல் என்கிற நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்தினார். 'ஆராய்ச்சி' என்னும் இதழைத் தொடர்ச்சியாக (1969-71) நடத்தியதோடு, ஒரு நிறுவனமாகச் செயற்பட்டு பல இளம் மார்க்சிய ஆய்வாளர்கள் உருவாவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தினார். நாட்டுப்புறகலை இலக்கியங்களின்பால் தமிழுலகின் கவனத்தை ஈர்த்ததில் 'ஆராய்ச்சி' குழுவினரின் பங்கு கணிசமானது. சமண, பவுத்த அவைதீக மரபில் வந்த பண்டைய இலக்கியங்களின்பால் கவனத்தை ஈர்த்ததும் உலகாயதக் கருத்துக்களையும், தேவ மறுப்புக் கருத்துக்களையும் தொட்டுக் காட்டியதும் வானமாமலையின் முக்கிய பங்களிப்புகள் எனலாம். 1950களில் வெளிவந்த டி.டி.கோசாம்பி, தேவி பிரசாத் சட்டோபாத்யாயா ஆகியோரின் இந்திய வரலாறு - தத்துவ ஆய்வு நூற்கள் இங்கிருந்த மார்க்சிய ஆய்வாளர்களுக்குப் பெரும் உந்துதலாக இருந்தன.

கைலாசபதி அவர்களின் 'தமிழ் நாவல் இலக்கியம்' 1968ல் வெளிவந்தது. அவரது பிற நூற்களான 'அடியும் முடியும்', 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' முதலிய



படிப்பகம்

www.padippkam.com

நூற்கள் இலக்கியச் சூழலிலும் கல்விச் சூழலிலும் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தின. இலக்கியம் என்பது காலத்தை விஞ்சியது (Transcedental), வரலாற்றிற்கு அப்பாற் பட்டது என்கிற கருத்தாக்கத்தை கைலாசபதி, சிவத்தம்பி, கோ. கேசவன் முதலான மார்க்சிய ஆய்வாளர்கள் கேள்விக் குள்ளாக்கினர். இலக்கியத்தை வரலாற்றில் வைத்து, வரலாற்றின் வினை பொருளாய்ப் பார்க்க வேண்டியதின் அவசியத்தை முதலில் மொழிந்தவர்கள் இவர்களே. 1980-90களில் தீவிரமாக இயங்கிய கேசவன் சங்க இலக்கியம் குறித்த புனைவுகளைக் கட்ட விழ்த்தார்.

மார்க்சிய இலக்கிய அணுகல் முறைகள் ஏற்படுத்திய தாக்கத்திற்கான எதிர்வினைகளும் தமிழ்ச் சூழலில் ஏற்படாமல் இல்லை. ‘மார்க்சின் கல்லறையிலிருந்து ஒரு குரல்' என்னும் வெங்கட் சாமிநாதனின் நூல் 1970ல் வந்தது.

இன்னொரு பக்கம் ‘அந்நியமாதல்' என்கிற மார்க்சியக் கோட்பாட்டின்பால் ஈர்க்கப் பட்டு எஸ்.என். நாகராசன், கோவை ஞானி முதலியோர் இயங்கினர். கீழை மரபுக் குரிய மார்க்சியம் ஒன்றைக் கட்டமைக்க வேண்டும் என்கிற கருத்தை இவர்கள் முன் வைத்தனர். எஸ்.வி. இராசதுரை மார்க்சின் அந்நியமாதல் கோட்பாட்டையும் சார்த்தரின் ‘எக்சிஸ்டென்ஷியலிசத்'தையும் அறிமுகம் செய்து நூல்கள் எழுதினார். இவர்கள் தரப்பிலிருந்து வெளிவந்த ‘பரிமாணம்', ‘நிகழ்' முதலான இதழ்கள் இங்கே குறிப்பிடத் தக்கன. சிற்றிதழ்கள் என்பன அரசியல், தத்துவம் ஆகியன குறித்து பேசக்கூடாது என்று இங்கே நிறுவப்பட்ட மரபை மீறி நின்றன.

1980 களில் மார்க்சீய அணுகல் முறை குறித்து விரிவான பல விவாதங்கள் நடந்தன. இன்னொரு பக்கம் நமது மார்க்சீய விமர்சகர்கள், கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் மற்றும் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னணியில் தமது அணுகல் முறைகள் குறித்துச் சுய விமர்சனங்கள் மேற் கொண்டனர். கோ. கேசவனின் ‘இலக்கிய விமர்சனம் ஒரு மார்க்சீயப் பார்வை' (1984) என்கிற நூல் கடும் விமர்சனத்திற் குள்ளாகியது. இதை ஒட்டிய விவாதங்கள் கலை இலக்கியம் குறித்த மார்க்சீயப் புரிதல்களை விரிவுபடுத்தின. மார்க்சிய அழகியல் குறித்த ஜி.பி. மோகன் தம்பி (1984), சச்சிதானந்தன் (1985) ஆகியோரின் நூற்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டன. ஞானியின் கட்டுரைத் தொகுப்பு 1988ல் வெளிவந்தது. மார்க்சீய இலக்கிய விமர்சனம் குறித்த ஸ்தானோவியப் போக்குகளையும், சோசலிச எதார்த்தவாதம் என்கிற கருத்தாக்கத்தையும் தொ.மு.சி. ரகுநாதன், கா. சிவத்தம்பி ஆகியோர் சுய விமர்சனம் செய்து கொண்ட நிகழ்வுகளும் இக் காலகட்டத்தில் அரங்கேறின.

ஒரு நூற்றாண்டு காலத் தமிழ் இலக்கியச் செயற்பாடுகளைத் தொகுத்துக் கொள்ளும் ஒரு முயற்சி 1975-85 கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. வரலாறு எழுவதிலுள்ள எல்லாவிதமான அரசியலும் இந்த முயற்சிகளிலும் வெளிப்பட்டது. தொகுப்பின் மூலம் கட்டப்படும் இலக்கிய மரபு, அதிகாரக் குவிப்பு ஆகியவற்றிற்கும் இம் முயற்சிகள் இடமளித்தன. 1977ல் வெளிவந்த ‘தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்' (சிட்டி, சிவபாதசுந்தரம்), வல்லிக்கண்ண னின் ‘புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்', பி.எஸ். ராமையாவின் ‘மணிக்கொடி காலம்', க்ரியா வெளியீடாக வந்த ‘தமிழ்ச் சிறுகதை தோற்றமும் வளர்ச்சியும்' (1989), சி.சு. செல்லப்பாவின் தமிழ்ச் சிறுகதை வரலாறு முதலியன இந்த வகையில் சுட்டிக்காட்டத் தக்கவை. ஒரு தோற்றம், சில மைல் கற்கள், சில சாதனையாளர்கள், சில திரு உருக்கள் (icons) ஆகியவற்றைக் கட்டமைப்பதிலும்,



படிப்பகம்

www.padippkam.com

இனி நவீன தமிழ் இலக்கியத்தை இத்தகைய மரபின் வெளிச்சத்தில்தான் பார்க்க வேண்டும் என்கிற ஒரு அதிகார வரையறையை உருவாக்குவதிலும், சில பிதாமகர்களை அடையாளங் காட்டுவதிலும் இந்த நூற்கள் ஆற்றிய பங்கு கணிசமானது. இவ்வாறு உருவாக்கப்பட்ட திரு உருக்கள் மற்றும் பிதாமகர்களின் பெயர்களில் 'இலக்கியத் தடங்களை' வெளியிட்டு புத்தக வணிக நிறுவனங்கள் இன்று லாபம் சம்பாதித்து வருவதை நாம் அறிவோம். சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் மிகத் தீவிரமாக இலக்கியக் களத்தில் செயல்பட்டவரும், இலக்கியத் தரம் குறித்த தீவிரக் கரிசனை உள்ளவரும், உலக 'மகா' இலக்கியங்கள் பலவற்றைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவரும், பட்டியல்கள் வரைவதில் ஆர்வமுள்ளவருமான க.நா.சு, இத்தகைய வரலாறெழுது முயற்சியில் நல்ல வேளையாக இறங்கவில்லை. இவ்வாறு திரு உருக்களைச் சமைப்பதிலும், இலக்கிய மரபைக் கட்டமைப்பதிலும் உள்ள ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டும் பணியை 'நிறப்பிரிகை' தொடர்ந்து செய்து வந்தது.

**இலக்கியம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்கிற பொய்மையை உடைத்தெறிந்து கலாச்சார அரசியலை முன் வைத்தவைகளாக இவற்றையும் 'நிறப்பிரிகை'யையும் குறிப்பிடுவது அவசியம்.**

## 7

மார்க்சியத்திற்கு உலக அளவில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் என்பன இலக்கியம், சமூகம், வரலாறு ஆகியவை குறித்த அணுகல் முறைகளில் எதிர்ப்புகளற்ற ஒரு ஒற்றைப் பரிமாணப் பார்வையை நிலைநாட்டிவிடாதபடிக்கு இங்கே அறிமுகம் செய்யப்பட்ட சில புதிய அதர்க்க வகைப்பட்ட சிந்தனைகள் காப்பாற்றின. 1980-களின் இடைப் பகுதியில் வெளிவந்த தமிழவனின் 'ஸ்ட்ரக்சுரலிசம்', முத்துக்குமாரசாமி, நாகார்ஜுனன் முதலியோர் அறிமுகம் செய்த பின் அமைப்பியல் சிந்தனைகள், கட்டவிழ்ப்பு முறைகள், 'நிறப்பிரிகை' மூலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், பின் நவீன நிலை குறித்த எனது நூற்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. உயிரோட்டமான பல விவாதங்களுக்கும், கடுந்தாக்குதல்களுக்கும் இவை ஆளாயின. எனினும் கேள்வி முறையற்ற ஒற்றை இலக்கியப் பார்வையை நிலைநாட்டுகிற முயற்சிகள் தோற்பதற்கு இவையே ஆதாரமாக உள்ளன.

புதிய சிந்தனைகளையும் இலக்கியப் போக்குகளையும் அறிமுகம் செய்த வகையில் எண்பதுகளின் பிற்பகுதியில் இயங்கிய 'மீட்சி' இதழ் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. 'சீரியஸ்' இலக்கியம் என்கிற பெயரில் சாதாரணமான இலக்கியப் பார்வைகளிலிருந்து பெரிதும் விடுபடாத சிற்றிதழ் பாரம்பரியத்தைப் பின்னோக்கிப் பார்க்கும்போது மிகவும் வித்தியாசமாகக் காட்சியளிக்கும் இவ்விதழ் பிரும்மராஜனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. புதிய மேலைச் சிந்தனைகள், ஃபூக்கோ போன்ற சிந்தனையாளர்களின் கருத்துக்கள், புதிய இலக்கிய முயற்சிகள், கவிதைகளில் உலகளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றை தமிழ் இலக்கிய வாசகர்களுக்கு அறிமுகம் செய்த வகையில் 'மீட்சி'யின் பங்கு முக்கியமானது. இதே போல குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய வேறு சில முக்கிய இதழ்கள் 'படிகள்', 'புறப்பாடு', 'இனி' ஆகியன. இலக்கியம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்கிற பொய்மையை உடைத்தெறிந்து கலாச்சார அரசியலை முன் வைத்தவைகளாக இவற்றையும்



படிப்பகம்

www.padippkam.com

'நிறப்பிரிகை'யையும் குறிப்பிடுவது அவசியம். 1980 களின் பிற்பகுதியில் ப்ரெக்ட்டின் நூற்கள் சில மொழிபெயர்க்கப்பட்டதும் (மு. இராமசாமி, பிரம்மராஜன்) ப்ரெக்ட் பற்றிய சில கட்டுரைகள் (அ. மார்க்ஸ்) வெளிவந்ததும் இலக்கியம் குறித்த பார்வை விசாலிப்பிற்கு வழிகோலின.

இத்தகைய புதிய சிந்தனைகளினூடாக 1985-'95 காலகட்டம் வளமான சாத்தியங்கள் நிரம்பியதாக விளங்கியது. பிரதி, ஆசிரியன், வாசிப்பு, வாசகனின் முக்கியத்துவம் முதலான பல்வேறு சிந்தனைகள் மேலெழுந்தன. இந்திய வரலாற்றறிஞர்களால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அணுகல் முறையாகிய 'அடித்தள ஆய்வுகள்' (Subaltern Studies) முதலியனவும் இதற்குப் பெரிய அளவில் உதவின. அம்பேத்கர் நூற்றாண்டை ஒட்டி 1990களில் ஏற்பட்ட தலித் எழுச்சி தலித் இலக்கியமாகவும், தலித் அரசியலாகவும், தலித் பண்பாட்டு அமைப்புகளாகவும் இங்கே முகிழ்த்தன. இதுகானும் ஒதுக்கி வைக்கப்பட்ட சேரி மொழியும், சேரி மனிதர்களும் இலக்கியக் களத்திற்குள் தாமதமாகவேனும் பிரவேசம் செய்தனர். தலித் இலக்கியத்தை மய்யமாக வைத்து சில முக்கிய விவாதங்களும் இங்கு எழுந்தன. பாமா, சிவகாமி முதலியோர் குறிப்பிடத் தகுந்த தலித் எழுத்தாளர் களாகத் தம்மை நிறுவிக் கொண்டனர். ராஜ்கவுதமனும் ரவிக்குமாரும் முக்கிய தலித் விமர்சகர்களாக வெளிப்பட்டனர். கலை மற்றும் நாடகத்துறையில் கே.ஏ.குணசேகரன் முக்கிய கலைஞராகத் தடம் பதித்தார். இக் காலகட்டத்தில் கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த 'சுபமங்களா' என்னும் இலக்கிய இதழ் இலக்கியம் குறித்த பன்முகப் பார்வைகளுக்கும் இடமளித்தது.

பண்டைய இலக்கியங்களானாலும் சரி, நவீன இலக்கியத் திருஉருக்களின் எழுத்துக்களானாலும் சரி எதுவும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவையல்ல. கோ. இராசாராம், ராஜன்குறை, ரவிக்குமார், ராஜ்கவுதமன், அ. மார்க்ஸ் முதலானோர் இவ்வாறு இலக்கியங்களையும் மறுவாசிப் பிற்குள்ளாக்கினர்; மறுவாசிப்பின் அவசியத் தையும் வலியுறுத்தினர். அமெரிக்கக் கறுப்பு இலக்கியத்தை அறிமுகம் செய்தும், தலித் இலக்கியத்திற்கெனவும் சிறப்பு மலர்களை 'நிறப்பிரிகை' வெளியிட்டது. மாற்று இலக்கியங்களையும் இலக்கியக் கோட்பாடு களையும் அறிமுகம் செய்வதற்கென இலக்கிய இணைப்புகளையும் அது வெளியிட்டது. தேசியம், பெண்ணியம், பெரியாரியம், சோசலிசக் கட்டுமானம் ஆகியன குறித்து 'நிறப்பிரிகை' முன் வைத்த சிந்தனைகள் சென்ற நூற்றாண்டின் இறுதியில் தமிழ்ச் சூழலில் மிகப் பெரிய விவாதங்களுக்குக் காரணமாயின. 'கோடாங்கி', 'தலித்', 'மனுசங்க' முதலான இதழ்களும் தலித் இலக்கியத்திற் கெனவே வெளிவந்தன. 'தோழமை' என்கிற அமைப்பின் மூலமாக டானியலின் தலித் எழுத்துக்கள் சிலவற்றையும் பழமலய் அவர்களின் 'சனங்களின் கதை'யையும் எண்பதுகளில் நாங்கள் வெளியிட்டோம். 'விடியல்', 'அலைகள்' முதலான சிறு பதிப்பகங்கள் பின்பு இப் பணியைத் தொடர்ந்தன. அம்பேத்கர், பெரியார் போன்றோரின் சிந்தனைகள் வெளிவருவதில் இப் பதிப்பகங்கள் முக்கிய பங்காற்றின.

இலக்கிய இயக்கங்களைப் பொருத்த மட்டில் 'கலை இலக்கியப் பெருமன்றம்', 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' முதலிய இடதுசாரி அமைப்புகள் இலக்கியத்தை அதி புனிதமாக்கி மக்களிடமிருந்து அந்நியப் படுத்தாமல் ஓரளவு சமூக சிந்தனைகளைத் தாங்கிய ஆக்கங்களையும் நாட்டுப்புறக் கலைகளையும் வெகுசனங்களிடம் கொண்டு செல்லும் பணியைச் செய்தன. 1990களில் ஏராளமாக நடத்தப் பட்ட தலித் கலை விழாக்களும் இப் பணியை வீச்சுடன் மேற்கொண்டன. தலித் கலை விழாக்களை நடத்துவதில் தன்னார்வக் குழுக்கள் முன்நின்றன.

இலக்கியம், கலாச்சாரம் ஆகியவை குறித்துத் தீவிரமான சிந்தனைகளை



படிப்பகம்

www.padippkam.com

முன்வைத்து எழுபதுகளின் பிற்பகுதியில் இயங்கிய 'இலக்கு' இயக்கம் குறிப்பிடத்தக்க ஒன்று. அரசியல் கட்சிகளின் பின்புலம் ஏதுமின்றி, கலாச்சார அக்கறையுடைய மத்திய வர்க்கச் சிந்தனையாளர்கள் சிலரால் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு தமிழக அரசின் உலகத் தமிழ் மாநாட்டை எதிர்த்துக் கிளப்பிய சர்ச்சை முக்கிய மானது. எனினும் இதில் பங்குபெற்றிருந்த படிப்பாளிகள் பலரும் பின்னாளில் பல்கலைக் கழகப் பதவிகளிலும் இலக்கிய நிறுவனங்களின் பொறுப்புகளிலும் அமர்ந்து, அமைப்பிற்கு விசுவாசமாகச் செயற்படும் கண்ணியமிக்க அதிகாரி களாயினர். 'இலக்கும்' தேய்ந்து மறைந்தது.

## 8

கொஞ்சம் நிறுத்திவிட்டு இந்தக் 'கணக்கெடுப்பை' ஒரு சுய விமர்சனத்திற் குள்ளாக்கினால் சில முக்கிய விடுபடல்கள் மனதில் உறைக்கின்றன. தனித் தமிழியக்க ஆர்வலர்களின் செயற்பாடுகளின் விளைவாக 1930கள் தொடங்கி இங்கே மேற்கொள்ளப்பட்ட தனித் தமிழாக்க முயற்சிகள், அகர முதலிகள், கலைச் சொல்லாக்கங்கள் முதலியன குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. பார்ப்பனமயமான தமிழ் இதழியல், நாடகங்கள், திரைப்படங்கள் முதலியவற்றில் பொதுத்தமிழாக உலாவந்த ஒரு காலகட்டத்தில், இந்நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்ததில் திராவிட இயக்கம், தனித் தமிழ் இயக்கம் ஆகியவற்றின் பங்கு கனிசமானது. அதேபோலப் பத்திரிகைகள் தொடர்பாகவும் திரைப்படம் தொடர் பாகவும் விரிவாகப் பேச வேண்டும். இப் போது அது சாத்தியமில்லை. பத்திரிகைகள் குறித்துச் சில குறிப்புகளை மட்டும் சொல்லத் தோன்றுகிறது.

சி.பா. ஆதித்தனாரின் தினத்தந்தி (1942) அச்சு ஊடகத்துடன் பரந்துபட்ட மக்களின் தொடர்பை விரிவாக்கியது. 1930-களில் மத்தியதர வர்க்க உயர்சாதி மக்களிடையே பரவலாகச் சென்றடைந்த 'ஆனந்த விகடன்' இன்றைய சனரஞ்சக இதழ்களுக்கு முன்னோடி எனலாம். பிறகு 'கல்கி' 1940-களில் செட்டியார்களால் தொடங்கப் பட்ட 'குமுதம்'. இன்று பின்னோக்கிப் பார்க்கும்போது இந்தச் சனரஞ்சக இதழ்களின் பங்கு மிகவும் எதிர்மறையாக மதிப்பிடத்தக்கதாகவே உள்ளது. இவற்றை வாசிக்கிற மத்தியதர வர்க்கத்திற்கு எவ்விதமான சுதந்திரமான சிந்தனைகளும் மாற்றுப் பார்வைகளும் முகிழ்த்துவிடாமல் பார்த்துக் கொள்வதில் இன்றளவும் இவை சிரத்தையாய் உள்ளன. பெரியார் போன்ற பரந்த மக்கள் தளமுள்ள மாற்றுச் சிந்தனையாளர்களைக் கூட இவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டதில்லை. சிந்தனா ரீதியாகத் தாழ்ந்த ஒரு வாசகக் (mediocre) குழுமத்தை உருவாக்குவதில் இவற்றின் பங்கு கணிசமானது. இந்த வகையில் தமிழ்த் திரைப்படங்களைக் காட்டிலும் பத்திரிகைத்துறை மிகவும் ஆபத்தானதாகவே உள்ளது.

இந்தச் சனரஞ்சகப் பத்திரிகைகளில் பெரும்பாலும் அதிகாரத்திலும் கருத் துருவாக்கத்திலும் இருக்கக் கூடியவர்கள் பார்ப்பன உயர்சாதியினராகவே இருப்பதும் அவர்களுக்குக் கேள்வி முறையற்ற விசுவாசிகளாக இருப்போரை மட்டுமே பத்திரிகைகளில் அனுமதிப்பதும் இந்நிலை தொடர்வதற்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது. 1924ல் தொடங்கிய வானொலி நிலையங்கள், பின்னர் அறிமுகமான தொலைக்காட்சி (1974), வண்ணத் தொலைக்காட்சி (1983), பின் முகிழ்த்த பல தனியார் தொலைக்காட்சிகள் என எவையும் இப் பொதுப் போக்கிற்கு விதிவிலக்காய் அமையவில்லை.

1959ல் மாவட்டத் தலைநகர்களி லிருந்து மாலை இதழ்கள் வெளிவரத் தொடங்கின. இவற்றின் மூலம் உள்ளூர்ச் செய்திகளுக்கு முக்கியத்துவம் வரத் தொடங்கியது. 'செய்தி'யின் அர்த்த பரிமாணம் மேலும் சற்றுச் சனநாயக மாகியது. 1968ல் தொடங்கப்பட்ட 'ராணிமுத்து' ஓரளவு அறிமுகமான ஒரு நாவலை மிகக் குறைந்த விலையில்



படிப்பகம்

www.padippkam.com

மாதந்தோறும் பரந்துபட்ட மக்கள் படிப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது நெருக்கடி நிலையைத் தொடர்ந்து பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்றெல்லாம் விரிவாகப் பேசப்பட்ட ஒரு காலகட்டத்தில் (1980கள்) 'நக்கீரன்', ஜுனியர் விகடன்', 'விசிட்டர்' முதலான இதழ்கள் தொடங்கப்பட்டன. புலனாய்வு இதழ்கள் என்பதாகத் தொடங்கி செய்திகளுக்குப் பின்னால் இருக்கக்கூடிய கதைகளைச் சுவாரசியமாகச் சொல்லி வாசகர்களை மகிழ்விக்கும் கிசுகிசு இதழ்கள் என்கிற நிலைக்கு இவை இன்று சரிந்துள்ளன. 'ஜுனியர் விகடன்' போன்ற இதழ்கள் போலீஸ் தரப்புச் செய்திகளை வெளியிடு வதற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன.

முக்கிய நாவலாசிரியர்கள், சிறுகதை யாசிரியர்கள் கவிஞர்கள் பற்றியும் இந்த நூற்றாண்டில் வந்துள்ள முக்கிய புதினங்கள் பற்றியும் தமிழ்ச் சூழலில் பலரும் விரிவாய்ப் பேசியுள்ளனர். அவரவர்களின் அரசிய லுக்கும் ரசனைக்கும் ஏற்ப பல்வேறு விதமான பட்டியல்கள் முன் வைக்கப் பட்டுள்ளன. சில முக்கிய எழுத்தாளர்கள், படைப்புகள், திருஉருக்குள் அடையாளம் காட்டப்பட்டுள்ள சூழலில் இவற்றை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இவ்வாறு அடையாளம் காட்டப்பட்டுள்ளவற்றையும் தவிர்த்துள்ளவற்றையும் நாமே சுயமாய்த் தேடிச் சென்று நமது சுய அனுபவங்களின் அடிப்படையில் கருத்துச் சொல்வது அவசியம். சிட்டி, சிவபாதசுந்தரம் எழுதிய நூறாண்டு நாவல் வரலாற்றைப் படித்தீர் களேயானால் ப. சிங்காரம் என்கிற நாவலாசிரியரை அதில் நீங்கள் பார்க்க இயலாது. நகுலன் போன்றவர்களுக்குக் கூட அவர்களுக்குரிய முக்கியத்துவங்கள் அளிக்கப்படடதில்லை. சிறுகதை வரலாறு எழுதியவர்கள் மாதவய்யாவைப் பின்னுக்குத் தள்ளி வ.வே.சு அய்யரைச் சிறுகதைப் பிதாமகராக முன் வைப்பதைப் பார்க்கலாம். ஒன்றைமட்டும் இங்கே சொல்ல முடியும். துண்டு துண்டான சாதீயக் குழுமங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள நமது வருண சமூகத்தின் படிநிலையில் மேலிருக்கும் குழுமங்களிலிருந்து வந்த இந்தப் படைப்பாளிகள் பலரும் தமது ஆக்கங்களில் தம்மையும் தமது சமூகத்தை யும்தான் துருத்தி நிறுத்தியுள்ளனரே தவிர மாற்றுத் தன்னிலைகளாகத் தம்மை உணர்ந்து வெளிப்படுத்தியதில்லை. தமது உயர்சாதி நிலை குறித்த, இந்தச் சமூகத்தின் ஒதுக்கி நிறுத்தும் பண்பு குறித்த விமர்சனப் பார்வைகளோ, குற்ற உணர்வோ கிஞ்சித்தும் இவர்களிடம் இருந்தது கிடையாது. எழுபதுகளில் என்னை மிகவும் ஈர்த்த தி.ஜானகிராமன் உட்பட்ட முந்தைய தலைமுறை எழுத்தாளர்களின் எழுத்துக்கள் எதுவும் Classic எனச் சொல்லத் தக்கவை யாக இல்லை. மீண்டும் மீண்டும் படிக்கப் படிக்கப் புதிதாய்த் தோன்றும் பரிமாணங் கள் அவற்றிற்கு இல்லை. நிலவுகிற கூற்றுக்களின் (Statements) உண்மைத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும் சாத்தியங்கள் மிக்கவையாக இவை எதுவும் தேறவில்லை என்பதை வருத்தத்தோடு பதிவு செய்ய வேண்டியுள்ளது.

எண்பதுகளின் பிற்பகுதியில் இங்கே அறிமுகமான அதர்க்க வகைப்பட்ட சிந்தனைகள் தமிழ் எழுத்தைப் புதிய பண்பு மாற்றத்திற்கு இட்டுச் சென்றன. வழக்கமான கதை சொல்லுதல் என்கிற நிலையைத் தாண்டி சில புதுவகை முயற்சிகள், பரிசோதனை எழுத்துக்கள் வந்தன. பெரிய அளவில் இவ்வகையில் சாதனைகள் நிகழ்ந்துவிடவில்லை யாயினும் அவர்களது கொஞ்ச நஞ்ச வெளிப்பாடுகளும் கூட மிகுந்த தடைகளுக்கு மத்தியில்தான் (resistance) நடைபோட வேண்டியிருக்கிறது. எனினும் இனி பழைய முறையில் கதை சொல்லிக் கொண்டிருக்க முடியாது என்கிற நிலையை இன்று சகல தரப்பினரும் புரிந்து கொண்டிருப்பதை யாரும் எளிதில் அவதானிக்க முடியும். புதிதாக வந்துள்ள பல இளம் எழுத்தாளர்கள் நம்பிக்கைக் குரியவர்களாகத் தென்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippkam.com

தலித் எழுத்தைக் கண்டு தொடக்கத்தில் முகஞ் சுழித்த தமிழ்ச் சூழல் வேறு வழியின்றி அதனை ஏற்க நேரிட்டுள்ளது. அதிலும் கூட வேற்று மொழி இலக்கியங்களை வாசிப்பதற்கும், எழுதுவதற்கும், எழுதியவற்றைப் பிரசுரிப்பதற்கும் வாய்ப்புகளற்ற இளம் தலித் எழுத்தாளர்களைக் கண்டறிவதற்கும் ஊக்குவிப்பதற்கும் முன்னுரிமை கொடுக்காமல் ஏற்கனவே உறுதியாக இடம் பெற்றுவிட்ட எழுத்தாளர்களைத் தமது கட்டமைப்பிற்குள் கொண்டுவருவதற்கே தமது முயற்சிகளைச் செலவிட நமது இலக்கிய மய்யங்கள் தயாராக உள்ளன.

ஆக்க இலக்கியங்களுக்குச் சொன்ன பல விசயங்கள் தமிழ் ஆய்வுகளுக்கும் பொருந்தும். பல்கலைக் கழகங்களிலும் சைவ மடங்களிலும் சிறைப்பட்டுக் கிடந்த நமது தமிழாய்வுகள் தமிழ் இலக்கியம், பண்பாடு, வரலாறு ஆகியவற்றை சைவப் பின்னணியிலேயே வைத்துப் பார்த்து வந்தன. சைவம் ஓங்கிய காலம் பொற்காலம் ஆகவும் சைவம் வீழ்ந்த காலம் (எ.டு.: களப்பிரர் காலம்) இருண்ட காலமாகவும் சித்திரிக்கப் பட்டன. இந்நிலையில் மதஞ்சாரா ஆய்வுகள் எனச் சொல்லத் தக்கவையாக வையாபுரிப் பிள்ளை, தொ.பொ.மீனாட்சி சுந்தரனார், மயிலை சீனி. வேங்கடசாமி முதலியோரின் ஆய்வுகள் மட்டுமே காணக் கிடக்கின்றன. 1980களில் திராவிட இயக்கம் குறித்து ஏராளமான வெளிநாட்டு ஆய்வுகள் வெளிவந்தன. மேலை நாடுகள் மூன்றாம் உலக மக்கள் இலக்கியங்கள் குறித்துத் தரவுகளைக் கண்டறிய முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியதன் விளைவாக இவற்றைக் காணலாம். அதேபோல தமிழ்க் கலை, இலக்கியங்களையும் நாட்டுப்புற வடிவங்களையும் பதிவு செய்ய ஃபோர்டு பவுண்டேஷன் முதலானவை இன்றளவும் செய்து வரும் முயற்சிகளும் கவனிக்கத் தக்கன. வெளிநாட்டாரின் ஆய்வுகளில் பர்ட்டன் ஸ்டெய்ன், கமில் ஸ்வலபில் ஆகியோரது நூற்கள் குறிப்பிடத் தக்கன. பண்டைய இலக்கியங்களைப் பதிப்பித்த வகையில் மிகவும் விரிவான ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும், நவீனமான பதிப்பு நுட்பங்களுடனும் நூற்களைப் பதிப்பித்த உ.வே.சுவாமிநாத அய்யர் குறிப்பிடத் தக்கவர்.

சென்ற ஒரு நூற்றாண்டையும் திரும்பிப் பார்க்கையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சுய சிந்தனையாளராகவும் தமிழ்ச் சமூகத்தை மதநீக்கம் (Secularisation) செய்து நவீனப்படுத்த தனது வாழ்நாள் முயற்சிகள் அனைத்தையும் செலவிட்டவராகவும் எஞ்சுவது பெரியார் ஒருவர்தான் என்பதை மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.

## 9

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் மத்தியிலும் வெறும் எழுத்தை மட்டுமே நம்பி வாழ்ந்தவர்கள் வறுமையையும் மரணத்தையும் எதிர் கொள்ள நேர்ந்த கதைகள் நமக்குத் தெரியும். பாரதியும் புதுமைப் பித்தனும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். எவ்வளவு தரம் மிக்கவையாயினும் தமது எழுத்துக்களை அச்சில் கொண்டுவருவதற்கு அன்றைய எழுத்தாளர்கள் பட்ட சிரமங்களையும் நாம் அறிவோம். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தோடு ஒப்பிடும்போது இன்று நிலைமை எவ்வளவோ பரவாயில்லை. ஒப்பீட்டளவில் இன்று நூற்பதிப்பு எளிதாகியுள்ளது. இன்னும் கூடத் தொடக்க நிலையிலுள்ள எழுத்தாளர்கள் சொந்தச் செலவிலேயே தமது நூற்களை வெளியிட வேண்டிய நிலை இருந்தபோதிலும் காத்திரமான நூற்களுக்கான வினியோக அமைப்புகள் சரியாக இல்லை என்ற போதிலும் ஓரளவு 'நிலைபெற்று' விட்ட எழுத்தாளர்கள் தமது நூற்களை எளிதில் வெளியிட்டு விட முடிகிறது. கோணங்கி, எஸ். ராமகிருஷ்ணன் முதலான வேறு வருமானங்கள் இல்லாத எழுத்தாளர்களுங்கூடத் தமது நூற்களைத் தரமாக வெளியிட்டுவிட முடிகிறது. பிச்சமூர்த்தி



படிப்பகம்

www.padippkam.com

தொடங்கி இன்றுள்ள எழுத்தாளர்கள் பலரும் வேறு வழிகளில் வருமானத்திற்கு உத்திரவாதம் செய்து கொண்டே எழுதுகின்ற நிலை உள்ளது. மேலை நாடுகளைப் போல எழுத்தையே பிரதானமாக நம்பி வளமாக வாழக்கூடிய நிலைமை தமிழ்ச் சூழலில் இன்றும் இல்லை. நமது சனத்தொகைக்கு ஏற்ப இங்கே வாசிப்பவர்களின் எண்ணிக்கை இல்லை. எனினும் சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஓரளவு நூற்களை வாங்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும், புத்தக வணிகம் என்பது ஒரு லாபகரமான தொழிலாகியுள்ளதும், சிறு பதிப்பகத்தினர் கூட பெரும் இழப்புகளின்றி தமது நூற்களை விற்றுவிடக் கூடியதும் வரவேற்கத்தக்க மாற்றங்கள் என்று சொல்லலாம்.

பெருந் தேசிய இனவாதத்தின் விளைவாக எண்பதுகளில் பெரும் எண்ணிக்கையில் மேலை நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் மூலம் உருவான புத்தகச் சந்தை என்பது தமிழ் நூற்களின் விற்பனை பெருகியிருப்பதற்கான ஒரு முக்கிய காரணமாக உள்ளது. இந்தப் புதிய சந்தையை நோக்கி எழுதுவது. வெளியிடுவது என்கிற நிலையும் இன்றுள்ளது. வேறு இந்திய மொழிகளில் இல்லாத அளவிற்கு தமிழில் இணைய இதழ்கள் தோன்றியுள்ளதற்கும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களே காரணம்.

உலக அளவிலான அரசியல் பொருளாதார மாற்றங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலும், தமிழ்ச் சூழலிலும், தமிழ் இலக்கியக் களத்திலும் இணையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதைப் பார்த்தோம். உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கியுள்ள இன்றைய சூழலில் இத்தகைய உடனடி எதிரொலிப்புகளுக்கான வாய்ப்புகள் கூடுதல் என்பது தெளிவு. உலக மயமாக்கலின் இரும்புப் பிடிக்குள் இன்று நாமும் சிக்கியுள்ளோம் என்பது ஊரறிந்த கதை. ஒருதுருவ உலகம் (Unipolar World) என்றும் கருத்தியல்களின் காலம் முடிந்து விட்டது (End of ideologies) என்றும் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றன. ஒற்றை உலகச்சந்தை, எல்லாவற்றையும் லாபத்தை அடிப்படையாகக் கொண்டு இயக்குவது, எல்லாத் துறைகளிலும் அரசுக் கட்டுப்பாடுகளையும் சிறிய நிறுவனங் களையும் உள்வாங்குவது, எல்லாவற்றையும் மய்யப்படுத்திப் பெரிதாக நிகழ்த்துவது, முற்றிலும் தனியார் மயமாக்குவது முதலியன உலக மயமாக்களின் முக்கிய கூறுகள். கல்வி, மருத்துவம் முதலிய துறைகளும் இவற்றிலான உயராய்வுகளும் இன்று தனியார் வசம் ஒப்படைக்கப் படுகின்றன. எடுத்துக்காட்டாக இரத்தம் தொடர்பான உயராய்வுகள் அனைத்தும் இன்று 'அப்போலோ' நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தனியார் பல்கலைக் கழகங்களுக்கான மசோதாக்கள் தயாராகி வருகின்றன. சந்தைக்கான கல்வி, கல்வியைச் சந்தைப் படுத்துதல், வெளிநாட்டுச் சந்தைக்கான கல்வி என்கிற கருத்துக்கள் இன்று விதைக்கப்படுகின்றன. தொழில் நிறுவனங்களைப் போலக் கல்வி நிறுவனங் களையும் அணுகப் போவதாக மத்திய அரசு சொல்கிறது.

பன்மைத் தன்மையை ஏற்பது, உள்ளூர்க் கலாச்சாரங்களை அங்கீகரிப்பது என்றெல்லாம் ஒரு பக்கம் சொன்ன போதிலும் எல்லாமே லாபம், சந்தை ஆகியவற்றை நோக்கியே அமைய வேண்டும் என்பதில் உலக மய முகவர்கள் குறியாய் உள்ளனர். முழுமையான மனிதனை உருவாக்குவதே கல்வியின் பணி என்கிற 'உன்னத' நோக்கங்களெல்லாம் சிதைந்து போய் சந்தைக்கான கல்வி என்று சொல்லும் ஒரு உலகில் இன்று நாம் நிற்கிறோம்.

சிறிய முயற்சிகளையெல்லாம் ஓரங்கட்டி எல்லாவற்றையும் பெரிதாயும் லாபத்திற்காகவும் செய்கிற இந்தச் சூழல்



படிப்பகம்

www.padippkam.com

இன்று நமது கலை இலக்கியச் செயற்பாடுகளிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எழுபது எண்பதுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றாவது அரங்கு, வீதி நாடகம் என்பதெல்லாம் இன்று நடைமுறையில் இல்லை. இன்று நாடக முயற்சிகள் என்றால் பெருந் தனியார் நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் உதவியோடுதான் சாத்தியம் என்கிற நிலை ஏற்பட்டுள்ளது.

சிற்றிதழ்களின் மீது நாம் எத்தனையோ விமர்சனங்கள் வைத்தாலும் அவற்றின் ஒரே சிறப்பம்சம் அவைகளின் சிறு தன்மைதான். அந்தச் சிறு தன்மைகளையும் இன்று சிற்றிதழ்கள் இழந்து வருகின்றன. இலக்கிய முயற்சி என்பது பெரு வணிகச் செயற்பாடுகளுடன் இணைக்கப்படுவதற்கு 'காலச்சுவடு' இதழும் அது முன்னின்று நடத்தக்கூடிய 'தமிழ் இனி 2000' என்கிற 'மெகா' இலக்கியச் சந்திப்பும் சாட்சியமாக அமைகின்றன. புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் சேரன் போன்றவர்கள் முன்னின்று வசூலிக்கும் பெரு நிதியங்கள், 'காலச்சுவடு' 'ஸ்ரீராம் சிட்ஸ்', 'சென்னை ஆன் லைன்' முதலானவற்றின் நிதி உதவிகள் ஆகியவற்றோடு சுமார் இருபது முப்பது லட்ச ரூபாய்கள் செலவில் மேற்கொள்ளப்படுகிற நிகழ்ச்சியாக இது அமைகிறது. மீண்டும் புனித இலக்கியங்கள், இலக்கியத் திரு உருக்கள் எல்லாம் பீடங்களில் ஏற்றப்படுகின்றன. மாற்றுக் கருத்துக்களுக்குச் சாத்தியமும் இடமும் இல்லை என்கிற நிலை இதன்மூலம் உருவாக்கப்படுகிறது. மாற்றுக் கருத்துக்கள் பேச வேண்டுமானாலும்கூட அதை எங்களுக்குள் நின்றுதான் பேச வேண்டும் என்கிற போக்கும் கவலைக்குரியதாய் இருக்கிறது. இலக்கிய உலகத்தையும் ஒரு ஒற்றைத் துருவ உலகமாக ஆக்கும் முயற்சியாகவே இது உள்ளது. அரசியல் நீக்கப்பட்ட, இந்துத்துவ பாசிசம் குறித்தெல்லாம் சிறிதும் கவலை கொள்ளாத உலகம் இது.

தமிழ்ச் சூழல் என்பது பல்வேறு விதமான பண்பாடுகளையும் புவியியல் வேறுபாடுகளையும், பேச்சு வழக்குகளையும், சாதிக் குழுமங்களையும் உள்ளடக்கிய ஒன்று. இந்தப் பன்மைத் தன்மைகளைத் தக்கவைப்பதும் பாதுகாப்பதுமே சனநாயகம் தழைப்பதற்கான வழி முறையாக இருக்கும். பல்வேறு தனித்துவங்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். நவீன மாற்றங்களையும் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. ஆனால் அவற்றை எல்லாத் தரப்பினருக்கும் சம அளவில் கிடைக்கச் செய்வது அவசியம்.

இந்தப் பன்மைத் தன்மைகளைத் தக்கவைப்பதற்கான போராட்டம் இருபத்தி ஓராம் நூற்றாண்டில் இலக்கியக் களத்திலும் தொடர வேண்டும். பாசிசத்தின் இலக்கிய வெளிப்பாடுகள் அடையாளம் காணப்பட வேண்டும். தரம், தூய்மை என்கிற பெருங் கதையாடல்களின் விரிப்பில் சிறு குரல்கள் நசுக்கப்பட்டுவிடக் கூடாது. இலக்கிய முயற்சிகளையும் ஆய்வுகளையும் தீர்மானிக்கிற வரையறுக்கிற ஒற்றை மய்யங்கள் மிகவும் ஆபத்தானவை. பன்மையான சாத்தியங்களுக்கு வாய்ப்பளிக்கும் பல்வேறு சிறு மய்யங்களினூடான செயற்பாடுகளைத் தொடர்வதற்கான போராட்டத்தை இலக்கிய சனநாயகத்தில் ஆர்வமுள்ளவர்கள் நடத்தியாக வேண்டியுள்ளது.

குறிப்பு : சென்ற ஆண்டு 12, 13 தேதிகளில் 'வானவில் இலக்கிய வட்டம்' கன்னியாகுமரியில் ஏற்பாடு செய்திருந்த 'நூறாண்டுத் தமிழ் இலக்கியம்' கருத்தரங்கின் தொடக்க உரை. இது ஒரு முறையான ஆய்வு அல்ல. அதற்கான ஒரு முன்னுரை என்று வேண்டுமானால் சொல்லலாம். பல்வேறு செய்திகள் நினைவிலிருந்து சொல்லப்பட்டவை. தேதிகளில் சிறு பிழைகளுக்கு வாய்ப்புள்ளது.



படிப்பகம்

நமது உரையாடல் உரையாடலாகத்
துவங்குவதாக கற்பனை செய்து கொண்டோம்
பரஸ்பரமான காவல் விசாரணைகளாக
நிகழ்ந்து கொண்டிருக்கின்றன அவை.
நமக்கு நடுவிலிருக்கும் மேஜை
ஒரு கண்காணிப்புப் பலகை
ஒருபோதும் அதன் பௌதீகமான இருப்பை
நாம் உணர்ந்ததில்லை.
உரையாடல்களுக்கிடைப்பட்ட மௌனத்தை
அது சீர்படுத்துகிறது.
மதுக் கிண்ணம்
உரையாடலுக்கான வசதி
தொடர்ந்து குற்றங்களைக்
கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறோம்.
ஏதோவொன்றைப் பற்றி பேசும்போது
நடுங்கு கிறோம்.
நண்பர்கள் புறக்கணித்து விடுவார்கள்
மனைவி விபச்சாரியாகிவிடுவாள்
மனநோய் தீவிரமடையும்
வாழ்வில் சீரழிந்து போவோம்
குழந்தைகள் எதிரிகளாவார்கள்.
ஏதோவொன்றைப் பற்றி யார் வேண்டுமானாலும்
எப்படி வேண்டுமானாலும்
பேசிவிடக்கூடாது என்பது நன்றாக புரிகிறது.
மதுப்புட்டிகளோ கண்காணிப்புகளையும் மீறி
வார்த்தைகளை வெடிக்கச் செய்துவிடுகின்றன
குற்ற வுணர்ச்சிகளோ குத்துச் செடிகளாய்
வளர்கின்றன.
நண்பரே
நம்மால் குத்துச் செடிகளைக் கொண்டு
தோட்டம் அமைத்து விட முடியும்
அதை நன்றாகப் பராமரிக்கவும் முடியும்
நல்ல தோட்டம் அது
பூத்துக் குலுங்கும் போது
நாம் துவங்கக் கூடும்
காவல் விசாரணைகளற்ற
உரையாடலை



லக்ஷ்மி மணிவண்ணன்

www.padippkam.com

# சுவிட்சர்லாந்திலிருந்து வெளியாகும் 'சக்தி' - பெண்கள் பத்திரிக்கைக்கு கருத்தம்மா அளித்த பேட்டி கேள்விகள் - சுவிஸ் ரஞ்சி

**தலித் பெண்களுக்கு தனியே ஒரு அமைப்பு அவசியம் என்ற கருத்தில் உங்களுக்கு உடன் பாடுள்ளதா? அப்படியானால் பெண்கள் என்ற ரீதியில் ஆணாதிக்கத்தால் ஒடுக்கப்படுவது என்பது பொதுமையான அம்சமாக இருக்கும்போது மற்றைய பெண்ணிய அமைப்புகளும் தலித் பெண்ணிய அமைப்புகளும் ஒன்றுபட்டு செயற் படக்கூடிய களங்கள் பற்றி.....**

கருத்தியல் அடிப்படையில் பல்வேறு பெண்கள் அமைப்புகள் உள்ளன. அரசியல் கட்சிகளின் பிரிவாகவும் பெண்கள் அமைப்புகள் உள்ளன. இந்த எல்லா அமைப்புகளும் பெண் விடுதலையை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பிரச்சினைகளை முன் வைக்கின்றன என்று கூறமுடியாது. பெண் விடுதலை எந்த அளவு புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதும் அமைப்புக்கு அமைப்பு வேறுபடுகின்றது. பெண்கள் அமைப்பு ஒரே வகையானது என்றும், அவை ஒரே வகையான அணுகு முறையைக் கொண்டிருக்கின்றன என்றும், தலித் பெண்கள் அமைப்பு/அமைப்புகள் மேற்கண்ட பெருவாரியான பெண்கள் அமைப்புகளில் பிரிவினையை ஏற்படுத் துகிறது என்பதுமான மாயையிலிருந்து முதலில் விடுபடுவோம்.

இன்று, பெண் விடுதலை இயக்கங் களின் பெரும்பாலான தல அளவு செயல்பாடுகள், வரதட்சணை ஒழிப்பு, பெண் சிசுக்கொலை எதிர்ப்பு, ஆபாச சுவரொட்டி கிழிப்பு, காவல்நிலைய கற்பழிப்பு எதிர்ப்பு, மற்றும் மிகச் சில இயக்கங்களில் பெண்களுக்கு சம ஊதியம், பெண் விழிப்புணர்வுப் பிரச்சாரம் என்று வடிவெடுத்திருக்கின்றன. ஏறக்குறைய எல்லாப் பெண்கள் இயக்கங்களுமே குடும்பம், சாதி சமூகக் கட்டுப்பாடுகள், பாலுறவு, பொது ஒழுக்க விதிகள், மதம் இவற்றின் பாதுகாவலர்களாக விளங்கு கின்றன அல்லது அவற்றை வெவ்வேறு வகையில் உறுதி செய்கின்றன். பெண் கல்வி, பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்பன வற்றின் மூலம் பெண் விடுதலை சாத்திய மானது என்று நம்புகின்றன.

தலித் பெண்கள் இன்றுவரை இருவகையான ஒடுக்குமுறைக்கு ஆளாகி வந்துள்ளனர். ஒன்று சாதி, மற்றொன்று பால். தமிழ்நாட்டின் ஏழு மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பின் போது தெரியவந்த விபரங்களாவன, பெரும் பாலான குழந்தைத் தொழிலாளர்கள் ஆதி திராவிடர்களே. அதில் அறுபது சதவிகிதம் பெண் குழந்தைகள். அடிப்படைக் கல்வி, அடிப்படை வசதிகளின்றி, சாதி, ஒடுக்கு முறைக்கு பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகி வருகின்றனர் தலித் பெண்கள். பால் ஒடுக்குமுறையின் மூலக் காரணங்களாக சாதியும், மதமும் கைகோர்த்து நிற்கின்றன. சதி, கட்டாயக்கைம்மை, பேதை மணம் இவற்றின் தோற்றுவாயைப் பற்றிக் குறிப்பிடுகையில், சாதிய அமைப்பை உருவாக்கவும், கட்டிக்காக்கவும் அவை தேவையாயிருந்தன என்பார் அம்பேத்கர். அகமணம் வாயிலாக, மக்கள் குறிப் பிட்டதும் வரையறுக்கப்பட்டதுமான தனித்தனி அலகுகளாகி, ஒவ்வொரு அலகும் வேறெந்தவொரு அலகுடன் பிணைவதி லிருந்தும் தந்திரமாக தடுப்பதே இந்தியாவில் சாதி என்பதின் பொருளாகும். ஆக, அகமணமே சாதிக்குரிய தனித்தன்மையான ஒரே இயல்பு என்று கூறும் அவர், இந்த அக மண முறையைக் கட்டிக்காக்கவே பெண்ணின்மீது வன்முறைக் கட்டவிழ்க்கப் பட்டது என்பார். சாதி, பெண் பற்றிய கருத்தாக்கங்களும், மதரீதியான விளக்கங் களும் இவற்றை வளர்த்தெடுப்பதற்கு உறுதுணையாக இருந்துள்ளன. குடும்பம் முதல் அரசு வரை பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக இந்தக் கருத்தாக்கங்கள் அதிகாரமாகவும், சட்டங்களாகவும், பெண்கள் மீதான ஒடுக்குமுறையை வலுப் படுத்தியுள்ளன.

இந்நிலையில் இன்றைய பெண்கள் இயக்கங்களின் மேம்போக்கான சமூக



படிப்பகம்

www.padippkam.com

சீர்திருத்தங்கள் மூலம் எப்படி பெண் விடுதலை சாத்தியமாகும்? சாதி, மதம் இவற்றைக் குறித்து மௌனமாயிருக்கின்றனர். குடும்பம் புனிதமாகப் போற்றப்படுகிறது. இச்சூழலில் தலித் பெண்ணியம் சாதியொடுக்கு முறையோடு இணைந்த பெண் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை நடத்துவதும் அதற்கான தனி அமைப்பாவதும் தவிர்க்க முடியாதது. இக்கருத்தை வரலாற்று ரீதியாக மறுக்க முடியாத பட்சத்தில் ஏனைய பிற அமைப்புகளும், இவர்களோடு இணைந்து போராடுவதில் என்னத் தயக்கம்?

**தலித் பெண்ணிய களச் செயற்பாட்டாளர்களுக்கும் தலித் பெண்ணியம் பற்றிய விவாதங்களில் ஈடுபட்டிருக்கும் புத்திஜீவிகளுக்கும் இடையிலான இடைவெளிபற்றி கூறுங்களேன்?**

நமது சமுதாயம் கிராம சமுதாயம். கிராமந்தான் நமது தளம் அல்லது களம். கிராம அளவில் விழிப்புணர்வு பிரச்சாரங்களில் ஈடுபட்டிருப்பவரையும், அமைப்புக்களைக் கட்டி எழுப்புபவர்களையும் களச் செயல்பாட்டாளர் என வரையறுக்கிறீர்களா? பிரச்சினைகளைத் தன்னளவில் எதிர்கொள்ளும், போராடும் ஒவ்வொருவரையும் களச் செயல்பாட்டாளர் என வர்ணிக்கலாகாதா? பிரச்சினைகளை நேரடியாக எதிர்கொள்பவர் அல்லது அதில் தலையீடு செய்பவர் என இருவகையினரைத்தான் நான் காண்கின்றேன். பிரச்சினைகளில் தலையீடு செய்யும் எவருமே ஒருவகையில் புத்திஜீவிதான். தன்னார்வ நிறுவனங்களில் ஊதியம் பெற்றுச் செயல்படுவோரும் உண்டு. சொந்த செலவில் அதே பணியாற்றுபவரும் உண்டு. ஆக, புத்திஜீவிகள் பலவகை.

**மேல்தட்டு பெண்களுக்கும் தலித் பெண்களுக்கும் இடையிலான ஒடுக்குமுறை பற்றி விளக்க முடியுமா?**

**தமிழ்நாட்டில் உள்ள பெண்ணிய அமைப்புகளின் பலம், பலவீனம் பற்றி கூற முடியுமா?**

மேல்தட்டுப் பெண்கள் சாதி ஒடுக்குமுறையாளர்கள் மத ஆசாரங்களைப் பேணுபவர்கள். பாலுறவு ஒழுக்க விழுமியங்களுக்கு ஆதரவு தருபவர்கள். ஆணாதிக்கக் கருத்தாக்கங்களில் தங்களை முற்றும் இழந்தவர்கள். சாதி ஒழிப்பை மையப்படுத்தாதவரை, பெண்களை இழிவுபடுத்தும் மத ஆசாரங்களைப் பேணும்வரை அவர்களை இப்படித்தான் புரிந்துகொள்ள இயலும். தமிழகத்தின் தென்மாவட்டத்தின் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தபோது, மதிய உணவிற்காக ஒரு வீட்டுக்குச் சென்றிருந்தேன். இயல்பாகவே கிராமத்திலுள்ள மகளிர் மன்றம் பற்றி விசாரிக்க நேர்ந்தது. ஊறுகாய், அப்பளம் செய்ய பிறருக்குக் கற்றுத் தந்ததாகவும், கூடை பின்னுதல், பூவேலை செய்தல் இவற்றில் பயிற்சி பெற்றதாகவும், வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மானியம் பெற்று பெண்கள் சுற்றுலா சென்று வந்ததாகவும், அவ்வீட்டுப் பெண்கள் தெரிவித்தனர். அக்குடும்பத் தலைவர் அந்த ஊர் பள்ளியின் தலைமை யாசிரியர். அவரின் மைத்துனர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் விவசாயத்துறை அலுவலர். இல்லத்தலைவி, மகளிர் மன்றத் தலைவர். மகளிர் மன்றச் செயல்பாட்டுக்கு பிற பெண்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். தலித் பெண்கள் முன்பு இந்தக் கூட்டங்களுக்கு வந்து கொண்டிருந்ததாகவும், எப்பொழுதும் கூட்டம் வேறு பொது இடம் கிடைக்காததால், அவர்கள் இல்லத்தில் நடந்ததாகவும், இப்போது தலித் பெண்கள் தனியாக மன்றம் வைத்து விட்டார்கள் என்றும் வாயூறிப் போனார்கள். உண்மையில், மன்றச் செயல்பாடுகளில் அக்கறை இருக்கும் பட்சத்தில், நீங்கள் அவர்கள் நடத்தும் கூட்டங்களுக்குச் சென்றிருக்கலாமே என்று கேட்டதும், பாம்பை மிதித்தது போல் கவரப்பட்டுப் போனார்கள். "எங்களைச் சேரிக்குப் போகச் சொல்கிறீர்களா, அங்கே ரவுடிப் பசங்கள் கூட்டம்! ஏற்கனவே, மகளிர் மன்றத்தை எங்கள் வீட்டு ஆண்களின் எதிர்ப்பை மீறி நடத்தி வருகிறோம். இன்னும், சேரிக்குப் போய் கூட்டத்தில் கலந்து கொள்வ தென்றால் எங்கள் ஆண்கள் ஒப்புக் கொள்ளவே



படிப்பகம்

www.padippkam.com

மாட்டார்கள்" என்று கூறி நிறுத்திக் கொண்டார்கள்.

நகரப் பெண்கள் அமைப்புகள் நடத்திய பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்ட அனுபவமும் உண்டு. அங்கு தலித் பெண்கள் வாய் திறக்க முடியாதவர்களாகவும், அந்த அமைப்புகளின் பெருந்தன்மைக்கு தலித் பெண்களை, தமது அமைப்புகளில் சேர்த்துக் கொள்ளும் உதாரணங்களாக மட்டுமே உபயோகிக்கப்பட்டனர். அரசியல் கட்சிகளின் பெண்கள் பிரிவு நடத்தும் 'பயாஸ் கோப்பு' பற்றி கேட்கவே வேண்டாம். தலித் பெண்கள் வெறும் கொடி தூக்கும், கோஷம் போடும் யந்திரங்களாகத் தாழ்த்தப் பட்டிருந்தனர்.

**குடும்பம் என்பது ஆணாதிக்கம் செயற்படும் நிறுவனம் என்ற வகையில் குடும்ப அமைப்பு முறையை அல்லது ஒரு தார மணத்தை எப்படி பெண்கள் எதிர்கொள்ளலாம் என்று கூறமுடியுமா?**

"குடும்பம் என்பது தொடர்ச்சியாக நான்கு வடிவங்களைக் கடந்து வந்திருக்கிறது. இப்பொழுது உள்ளது அதன் ஐந்தாவது வடிவம் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டால், இந்த வடிவம் நிரந்தரமா என்ற கேள்வி எழுகிறது... ஆண், பெண் சமத்துவம் முழுமையாக சாதிக்கப்படுகின்றவரை அது மேலும் மேம்பட முடியும் என்று குறைந்த பட்சமாகக் கருதிக் கொள்ளலாம். நெடுந்தூர எதிர்காலத்தில் ஒரு தார மணக் குடும்பத்தினால் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமற்போனால், அதற்குப் பின்னால் வரப்போகின்றவற்றின் இயல்பை ஆருடம் கூற முடியாது" என்று மார்கனின் கூற்றை இங்கே நினைவு கூறுகிறேன்.

காதல், கற்பு, தாய்மை, குடும்பம் ஆகிய எல்லாமே அதீதமான புனைவுகளால் நிரப்பப்பட்டுள்ளன. வர்க்க, சாதி அரசியல் இந்தப் பதங்களின் மீது ஏற்றி வைத்திருக்கும் சுமைகளைக் குறைத்தாலே போதும், நாம் இலகுவாகிவிடுவோம். ஒருதார மணம் ஒழுக்க விதியாக நிர்ணயிக்கப்பட்ட சமுதாயத்தில் பெண்கள் எந்தவிதக் கருணையையும் எதிர்பார்க்க முடியாது. இப்போதுள்ள கருத்தாக்கங்களின் சிதைப்பில் மீறல்கள் நடந்தேறும் தேசியம் போன்ற கற்பிதங்களும் தகர்க்கப்படும். ஒரு தார மணம் வன்முறையை உள்ளடக்கிய சமுதாய ஒப்பந்தம் என்றும் அது மானுட விடுதலைக்கு எதிரானது என்று புரிந்து கொண்டால் போதுமானது. குடும்பத்தின் மீதான விசுவாசம் கொஞ்சமாவது குறையும். குடும்பம் இன்னும் அதை யொட்டிய எல்லா நிறுவனங்களையும் தனிமனித சுதந்திரம், சகமனிதனுடனான சமுக உறவு என்பவற்றின் அடிப்படையில் கேள்விக்குள்ளாக்குவதுதான் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் செய்யக் கூடியது.

**சாதியும் பாலியலும் சந்திக்கும் புள்ளியில் பெண் ஒடுக்குமுறையை அடையாளம் காண்பது எந்தளவில் சரியானது என்று உங்களால் விளக்க முடியுமா?**

எல்லா சாதிகளிலும் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பது சாதிகள் தொடர்ந்து நீடிப்பதற்கான நியாயத்தை வழங்கிவிடுமா? சாதி ஒடுக்கு முறையாளர்கள், தாங்கள் பெண் என்பதால் ஒடுக்கப்படுகிறோம் என்கிறார்களே, அது எந்த தர்க்க நியாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது? ஒரே சமயத்தில் வேடனாகவும் வேட்டைப் பொருளாகவும் இருப்பது எப்படி அவர்களுக்கு சாத்தியமாகிறது? தாலுகா அலுவலகத்தில் லஞ்சம் வாங்குபவன், பள்ளியில் தன் குழந்தையைச் சேர்க்க லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. பிரச்சினையை இனங்காணுவது எப்படி சாத்தியம்? சாதி ஒடுக்குமுறைக்கான போராட்டத்தைக் கையிலெடுக்காதவரை, பெண் ஒடுக்கு முறையை அடையாளம் காண்பதுகூட சாத்தியமில்லை.!

**இன்று சில பெண்ணியம் பேசும் ஆண்கள் குடும்பக் கலைப்பை முன் வைக்கின்றார்கள். ஆனால் சமூகத்தில் பெண்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மாற்றத்திற்குட்படாத நிலையில் குடும்பக் கலைப்பை முன்வைப்பது என்பது பெண்களை இன்னமும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடுமல்லமா?**



படிப்பகம்

www.padippkam.com

ஆண்கள் பெண்ணியம் பேசட்டும்- ஆதிக்கத்தின் இன்னொரு அவதாரமாக மாறாத வரையில் சரிதான்! குடும்பம் என்பது சொரணையுள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் சிறையே என்பார் பெரியார். பெண்களைப் பற்றிய கருத்தாக்கங்கள் மாறும்போது குடும்பமும் மாறும் என்பது உண்மைதான் என்றாலும், குடும்பம் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்ற வாதம் ஆபத்தானது. வளர்ந்து வருகின்ற மேலைநாடுகளில் திருமணமின்றி தனித்து வாழ்கின்ற பெண்கள் பாதுகாப்பற்றவர்களாக உணர் வதில்லை என்பது, பாதுகாப்பு குடும்பத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் வேறு பலவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதைத்தானே விளக்குகிறது. மேலும் புராதன சமுதாயம் குழுமண முறையிலிருந்து குடும்பம் என்ற சிறு அலகுக்கு நகர்ந்தது பெண்களின் பாதுகாப்பைக் கருதியா?

**குழந்தை பெறுவது என்பது ஒரு பெண்ணின் சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையில் நடைபெறுவது இல்லை. இனவிருத்திக்கான வெறும் இயல் பூக்கமாகவே தொன்று தொட்டு வருகின்றது. இதைப்பேணும் வகையில் கருச்சிதைப்பை ஒரு சிசுக்கொலையாக உருவகிப்பதில் மரபுரீதியான மதவழிப்பட்ட சிந்தனையும் துணை போகிறது என்று கூறப்படுவது பற்றி....?**

குழந்தை பெறுவது என்பது ஒரு பெண்ணின் சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையில் நடைபெறுவது இல்லை, இனவிருத்திக்கான வெறும் இயல்பூக்கம் என்பது உண்மைதான். எனினும் இன விருத்தி என்பது வெறும் இயல்பூக்க மானதாக இருந்தால் மிருகங்களைப் போல மனிதர்களும் மிக அரிதாகவே பாலுறவில் ஈடுபடுவர். இயல்பூக்கத்தோடு அறிவும் சம்பந்தப் பட்டிருப்பதுதான் நமது பிரச்சினை (மனிதக்குரங்கு போன்ற விலங்கினங்கள் பாலுறவை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியதை சமீபத்தில் டி.வி.யில் பார்த்தேன்) எப்போது அறிவு இனவிருத்தி யோடு சம்பந்தம் கொண்டதோ அப்போதே அது கேளிக்கையாகவும், வன்முறையாகவும் உருக்கொண்டது. நமது சூழல் இன்று அத்தகைய கோரிக்கைகளாலும் வன் முறையாலும் நிரம்பிப் போயிருக்கிறது. குழந்தை பெறுவது அல்லது பெற்றுக் கொள்ளாமலிப்பது அல்லது கருச்சிதைவு என்பது இன்று உடல்நலம் மற்றும் தேவையின் அடிப்படையில்தான் பார்க்கப் படுகிறதேயன்றி சிசுக்கொலை என்று வர்ணிக்கும் மதபோதகத்தை மறந்தாயிற்று என்று நினைக்கிறேன்.

இயற்கையான இயல்பூக்கங்கள், கேளிக்கை-வன்முறைத் தூண்டல்கள், இனவிருத்தி என்பவை இன்னும் ஆழமாக விவாதிக்கக் கூடிய பொருள்கள் என்று நினைக்கிறேன். பிரிதொரு சந்தர்ப்பதில் அவற்றைப் பற்றி விவாதிப்போம்.

**குடும்ப அமைப்பு முறையினுள் பாலியல் உந்துதல்கள் மீது மிகக் கடுமையான ஒழுக்க விதிகள் கடைப்பிடிக்கப்பட்டுவரும் வேளையில் ஆண்மேலாதிக்கக் கருத்தியலின் அடிப்படை யிலான பாலியல் கருத்துக்களுக்குச் சவாலாக ஓரினப் புணர்ச்சியாளர்கள் செயற்பட்டு வருகின் றனர் என்று கூறுப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?**

**பாலியல் ஒழுக்கவிதிகள் அப்படியே நிலவ லெஸ்பியன் உறவு ஆணாதிக்கத்தால் கேலிக்குரிய செயற்பாடாக உருவகிக்கப்படும் சாத்தியம் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

ஓரினப் புணர்ச்சியாளர்கள் ஆண் மேலாதிக்க கருத்தியலின் அடிப் படையிலான பாலியல் கருத்துக்களுக்குச் சவாலாக செயல்பட்டு வருகின்றனர் என்பதன் அடிப்படையில் பெண்ணியம் பற்றிப் பேசும் ஒவ்வொருவரும் இதன்மீது கருத்துத் தெரிவிக்கும்படி வற்புறுத்தப் படுகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் சூழலையொட்டியும் இக்கேள்வி எழ வாய்ப்பிருக்கிறது.

ஓரினப் புணர்ச்சியிலும் ஒருவர் தன்னை ஆணாகவும், மற்றொருவர் தன்னைப் பெண்ணாகவும் வரித்துக் கொள்கிறார்கள் என்றும், ஒருத்திக்கு ஒருத்தி அல்லது ஒருவனுக்கு ஒருவன் என்று பாலியல் விதி கடுமையாகக் கடைபிடிக்கப் படுவதாகவும் கேள்விப்பட நேர்ந்தது. பெண்



படிப்பகம்

www.padippkam.com

விடுதலையை அடிப்படையாகக் கொண்டும், இயற்கையை அடிப்படையாகக் கொண்டும், ஒருதார மணத்தை வன்முறை யென வரையறுக்கும்போது ஒருத்திக்கு ஒருத்தி அல்லது ஒருவனுக்கு ஒருவன் என்பதை ஆணாதிக்கக் கருத்துக்கு எதிரான செயல்பாடாக எப்படிக் கொள்வது? அவர்களும் தேவாலயங்களில் திருமணம் செய்து கொண்டு, தங்களுக்கெனக் குழந்தையைத் தத்து எடுத்துக் கொண்டும், சொத்து சேர்த்துக் கொண்டு... இது சவாலா அல்லது அவர்கள் தங்களது தனி வாழ்க்கையில் மேற்கொண்டுள்ள சங்கடங்களா?

ஓரிணப்புணர்ச்சி இப்போதைய பாலிய ஒழுக்கவிதியின் மீறல் என்றளவில் தான் புரிந்து கொள்ள முடிகிறது. ஓரினப் புணர்ச்சியாளர்களின் நடவடிக்கையின் விபரங்கள் முழுவதுமாகத் தெரியாத நிலையில், அதை நீங்கள் வசிக்குமிடங்களில் உள்ளவாறு தொகுத்தால் நலமாயிருக்கும்.

**தலித் பெண்ணியம் சம்பந்தமாக சிறு விளக்கம் ஒன்றை எமது சக்தி வாசகர்களுக்காக தர முடியுமா?**

ஆண் பெண் உடல்ரீதியான வேறு பாடுகளும் அது சம்பந்தமான அவர்களது உளவியலும் இருவருக்குமான ஒத்திசைவிற் கான இயற்கையின் படைப்பு என்ற புரிதல் ஆண் பெண் குணாம்சங்கள் பற்றிய பல்வேறு புனைவுகளை அகற்றுகிறது என்பது ஒருபுறமிருக்க, தலித் பெண்ணியம் என்பது, ஆணாதிக்கம் மனித குலத்தின் சரிபாதியை ஒடுக்கி வைத்ததால் ஏற்பட்ட சீரழிவை இருவரின் நலன் கருதி இருவரின் சுதந்திர வாழ்வுக்குமானதாக வளர்த் தெடுப்பதே ஆகும். தலித் பெண்ணியம் என்பது வர்க்க, சாதி, பால் ஒடுக்கு முறையினால் பாதிக்கப்பட்டவரின் வாயிலாக உலகை நோக்கி, சகல நிறுவனங் களையும் கேள்விக்குள்ளாக்குவதே. ஒடுக்கப் பட்டவர்கள் என்று பார்க்கும்போது, சகல விதத்திலும் போராட்டத்திற்கான தார்மீக அடிப்படையைத் தக்கவைத்துக் கொண் டிருப்பவர்களே மையப்புள்ளிகள். தலித் பெண்களே இன்று அத்தகைய அடிப் படையைக் கொண்டிருக்கிறார்கள். தலித் பெண்கள் எல்லோரும் ஒடுக்கப் பட்டவர்கள் என்றாலும், அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நோக்கமாகக் கொண்ட உணர்வுற்ற தலித் பெண்கள் மையப்புள்ளிகள். எல்லோரும் தங்களிடம் குவிந்திருக்கும் அதிகாரத்தைக் களைந்து கொள்ள ஏதுவாயிருக்கும் அதிகாரமற்ற வெற்றிடமே உணர்வுற்ற தலித் பெண்கள் தலித் பெண்ணியமும் அதுவே. பெண் ஒடுக்கமுறைக்கெதிரான, சாதிய ஒடுக்கு முறைக் கெதிரான போராட்டத்தை நடத்திச் செல்லவேண்டியவர்கள் அவர் களே. இது தகுதி அடிப்படை யினாலல்ல. ஆதிக்க மனோபாவத்தையும் அதன் புறக் காரணிகளையும் வென்றெடுக்கும் விதமாகத் தான். ஏனைய அமைப்புகள் இவர்களுடன் இணைந்து போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.

**பிரான்சில் நடந்த பெண்கள் சந்திப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பிரான்சில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பு தலித் பெண்ணியத்தை மையப் படுத்தியது வியப்பளித்து. பின் நவீனத்துவம், தலித்தியம் பற்றி விவாதங்களை அ.மார்க்ஸ் அங்கே தொடங்கி வைத்தது ஒரு காரணம். மேலும் பல்வேறு புலம் பெயர்ந்த தமிழர்களின் பத்திரிக்கைகள் இது குறித்த விவாதங்களைத் தொடர்ந்து செய்து கொண்டு வருவதும் காரணமாக இருக்கலாம். பெண்கள் திறந்த மனதுடன் தங்கள் கருத்துக்களை, அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டது தமிழ்ச் சூழலுக்கு வித்தியாசமானது. தமிழகத்துப் பெண் களைக் காட்டிலும், புலம் பெயர்ந்த தமிழ்ப்பெண்கள் பெண் விடுதலை பற்றி அக்கறையும் புரிந்துணர்வும் கொண் டவர்கள் என்பதைக் குறித்துக் கொண்டேன். மிகவும் எளிமையாக, ஆடம்பரமின்றி, ஜனநாயகமுறையில் நடந்தது கூட்டம். அமைப்பாளர்களுக்கும் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ●



படிப்பகம்

www.padippkam.com

# இந்தியா-சாணக்குவியல் மேல் அரண்மனை

சமியா நக்கோல்
ஆதாரம் : ஜப்பான் டைம்ஸ்
தமிழாக்கம் - ராஜா

அந்தக் காதல் ஜோடியானது கொளுந்து விட்டு எரியும் தீயில் கருகிக் கொண்டிருந்தன. பிணங்களைக் கைப் பற்ற போலீஸ் வந்து சேர்ந்தபோது, அவை இரண்டும் உருத்தெரியாமல் எரிந்து போயிருந்தன. பிய்ந்து போன காலணிகளும், கிழிந்து போன சேலைத் துணியும்தான் குற்றம் நடந்துள்ளதை நிருபிப்பதற்கு அவர்களுக்குக் கிடைத்த தடயங்கள். இது நடந்தது வட இந்தியாவில் உள்ள ராஜ்பூர் என்ற கிராமத்தில்.

21 வயது கால்றுவை அவனுடைய குடும்பத்தாரே தூக்கிலிட்டு கொன்று விட்டனர். 18 வயது ரேகாவை அவளுடைய குடும்பத்தார் கொன்று விட்டனர். ரோமியோ ஜுலியட்டைப் போல காதலித்த இவர்கள், அவர்களைப் போல் தற்கொலை செய்து கொண்டு விடவில்லை. எதிர் எதிர் வீடுகளில் நண்பர்களாக இருந்த அவர்களின் பெற்றோர்களே அந்தக் கொடூரக் கொலையைச் செய்து முடித்தார்கள்.

சாதி என்பது மனித உயிருக்கும் மேலாகக் கருதப்படுகிறது.

இரண்டு குடும்பங்களுமே சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவைதான். ஆனால் வெவ்வேறு சாதிகள். ஏழ்மையிலும் அப்படியே. ரேகா 'நாவித' இனத்தைச் சேர்ந்தவள். கால்று அதைவிட ஒருபடி உயர்ந்ததாகக் கருதப்படும் 'குகர்' இனத்தைச் சேர்ந்தவன். இரு குடும்பங்களுமே எதிரெதிர் வீட்டில் உற்றார் உறவினரைப் போல வாழ்ந்து வந்த குடும்பங்கள்தான்.

கால்று-ரேகா காதல் பற்றி தெரிந்ததும் இரு குடும்பங்களுமே அவர்களைக் கொடுமைப்படுத்தத் தொடங்கி விட்டன. கொடுமைகளைத் தாங்க முடியாத காதல் ஜோடி டெல்லிக்கு தப்பி ஓடியது. எல்லாம் சரியாகி இருக்கும் என்ற நினைப்பில் ஒரு வாரம் கழித்து தங்கள் வீட்டிற்குத் திரும்பி வந்ததுதான் அவர்களுக்கு வினையாகி விட்டது. அவர்களை பாராட்டி சீராட்டி வளர்த்த சொந்த குடும்பத்தினரே ஒன்று சேர்ந்து அவர்களைக் கொன்று எரித்து விட்டனர். கொலையை தற்கொலை என்று பிரகடனப்படுத்தினாலும், பிரேதப் பரிசோதனையில் அது கொலைதான் என்று நிருபணமாகி விட்டது.

இதற்குக் காரணம் ஏழ்மையைப் பகிர்ந்து கொண்ட அவர்களால் 3,000 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்டிப் படைத்து வரும் சாதி என்ற அரக்கனின் கோரப் பிடியிலிருந்து தப்ப முடியவில்லை. முடியவில்லை என்பதைவிட மனமில்லை என்றுதான் கூற வேண்டும். கலப்புத் திருமணம் என்ற வார்த்தைக்கே அவர்களிடம் இடமில்லை. இப்படிப் பட்ட போக்குகளின் காரணமாக கிராமப்புற இந்தியாவில் சாதிக் கொலைகள் என்பது தொடர்ந்து நடக்கும் வாடிக்கை நிகழ்ச்சிகளாக மாறி விட்டன. சாதி என்பது மனித உயிருக்கும் மேலாகக் கருதப்படுகிறது.

தெற்காசிய மனித உரிமை பதிவு மையத்தின் செயல்முறை இயக்குநரான ரவி நாயர் "சாதி என்பது இந்தியாவில் தவிர்க்க முடியாத சமூக உண்மையாக இருக்கிறது. அதன் பிம்பம் திருமணம், வாக்குப்பதிவு, பணியிடம், சமுதாயத் தொடர்புகள் என்று அனைத்து இடங்களிலும் பிரதிபலிக்கிறது" என்று கூறியிருப்பது கால்று, ரேகாவின் சோகக் கதையை மெய்ப்பிப்பதாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippkam.com

*சமயச் சார்பு*

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திறனையும், சர்வதேச அளவில் போட்டியிடும் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களையும், மாபெரும் பரிசுகளைப் பெறும் எழுத்தாளர்களையும் கொண்ட இந்தியா சமயச்சார்புடைய சாதிப் பிரிவுகளின் பிடியில் சிக்கித் தவிக்கிறது.

இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் பழமையான சமுதாயப் பிரிவுகள் அந்தக் காலத்தில் அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தவர்களால் திட்டமிடப்பட்டு அறிமுகப் படுத்தப்பட்டவையாகும். மதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பிரிவினைகளில் சமத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கீழ் சாதியினரைக் கேவலமாக நடத்துவது என்ற உணர்வு அவர்கள் உயிர் மூச்சுடன் கலந்திருந்தது... அது இன்றும் தொடர்கிறது.

சாதிகளின் புனிதத் தன்மையை நிலை நிறுத்தியே தீருவது என்ற நினைப்பு இன்றளவும் தொடர்வது நாளிதழ்களில் வெளிவரும் 'மணமகள் மணமகன் தேவை' என்ற விளம்பரங்களைப் பார்த்தாலே புரியும். இங்கு காதல் திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் சொற்ப அளவில்தான் நடைபெறுகின்றன. மணமகன் களும், மணமகள்களும் சாதி, மதம், மொழி, தொழில் என்று கேலிக் குரிய வகையில் பிரிக்கப்படுகிறார்கள்.

இந்தியாவில் உள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் பெரும்பாலும், தங்களது பணக்கார வாடிக்கையாளர்களின் சேவைக்கு உயர்சாதி பிராமணர்களைப் பணியமர்த்துகின்றன. ஜெர்மனியின் தாய்ம்லெர் பென்ஸ் தனது மெர்சிடிஸ் கார்களை இந்தியாவில் அறிமுகப் படுத்திய போது எதிர்பார்த்த அளவு விற்பனை இல்லை. மெர்சிடிஸ் கார் வாங்கும் சக்தி படைத்த உயர்சாதி செல்வந்தர்கள் உயர்சாதி விற்பனையாளர்களுடன்தான் வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்வார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள அந்நிறுவனத்திற்கு ஓராண்டு காலம் பிடித்தது.

சடங்குகளின் புனிதத் தன்மையின் அடிப்படையில், வரிசைக்கிரமமாக அமைக்கப்பட்ட சமூகப் பிரிவுகள்தான் சாதி என்பது இந்துத்துவத்தின் அடிப்படை அம்சம். இங்கு பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவன் அதே சாதியில் உழல்கிறான். அந்தஸ்துகளில் வேறுபாடு என்பது கர்மா எனப்படும் பூர்வ ஜென்மப் பலன் என்று கருதப்படுகிறது.

"மக்கள் கர்மா, ஊழ்வினை என்ற பெயர்களால் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டு, ஊமைகளாக்கப்பட்டு, வருகிறார்கள். சமயம், நம்பிக்கை என்ற பெயர்களில் அவர்களும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்" என்று கூறுகிறார் இந்திய சமூகக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சி யாளரான பிரகாஷ் லூயிஸ்.

பெரும்பாலான வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவின் சமூகப் பிரிவுகள் 3,000 ஆண்டுகளுக்கு முன்பாக மத்திய ஆசியாவிலிருந்து குடி பெயர்ந்து வந்த வெள்ளைத் தோல் ஆரியர்களால் உருவாக்கப்பட்டது என்று கருதுகிறார்கள். இவர்கள்தான் இந்தியப் பழங்குடியினரை அவர்களின் நிறம், தொழிலின் அடிப் படையில் பாகுபடுத்தினார்கள். இந்த பாகுபாடுகளை வலியுறுத்தும் இந்துமத வேதங்கள் கடவுள் உலகத்தையும், உலகிலுள்ள சமூகப் பிரிவுகளையும் ஆதி மனிதனான 'புருஷா' வினைப் பலிகொடுத்து உருவாக்கினார் என்று கூறுகின்றன. அவ்வாறு பலிகொடுக்கையில், புருஷாவின் நெற்றியிலிருந்து பிறந்தவன் பிராமணன் என்றும், தோளிலிருந்து பிறந்தவன் சத்திரியன் என்றும், தொடையிலிருந்து பிறந்தவன் வைசியன் என்றும்,



படிப்பகம்

www.padippkam.com

பாதங்களிலிருந்து பிறந்தவன் சூத்திரன் என்றும் அவை சொல்கின்றன.

இந்து சமூகமானது வர்ணம் எனப்படும் இந்த நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு சாதியிலும் நூற்றுக்கணக்கான கிளை சாதிகள் இருக்கின்றன.

## தீண்டத் தகாதோர்

இந்த நான்கு சாதிகளைச் சேராத மீதமுள்ள அனைவரும் 'தீண்டத் தகாதவர்' அல்லது 'தலித்' துகள் என்று அழைக்கப் பட்டனர். அடிமட்ட, கீழ்த்தர வேலைகள் அவர்களுக்கும் கொடுக்கப் பட்டன. இந்த புற சாதியினர் தொட்டாலே மனதிற்கும், உடலிற்கும் தீட்டு என்று உயர் சாதியினர் மட்டுமல்லாமல், இதர சாதி இந்துக்களும் நினைத்தனர்.

சுதந்திரத்திற்குப் பின்னால் வடிவமைக்கப்பட்ட அரசியல் சாசனத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் அது முழுவதுமாகச் செயல்படுத்தப்படவில்லை. இந்திய கிராம வாழ்க்கையில் தீண்டாமை இன்றளவும் நடைமுறையில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. கல்வி மற்றும் அரசு வேலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒதுக்கீட்டு முறையினால் குறைந்த அளவினரே பயனடைந்திருக்கின்றனர். நால்வருக்கு ஒருவர் என்ற கணக்கில் சுமார் 160 மில்லியன் தலித்துகளும், 80 மில்லியன் பழங்குடியினரும் ஏழ்மை, அவமரியாதை என்று பலவிதங்களில் கொடுமைப் படுத்தப்பட்டு வருகிறார்கள்.

அவர்கள் தோட்டிகளாகவும், மனித மற்றும் விலங்குகளின் கழிவுகளை அகற்று பவர்களாகவும், தெருக்களை சுத்தம் செய்பவர்களாகவும் மட்டுமே பயன்படுத்தப் படுகிறார்கள். இந்த வேலைகளை செய்ய மறுத்தாலோ, எதிர்த்தாலோ உயர் சாதியினர் அவர்களைக் கொல்லவும் தயங்க மாட்டார்கள்.

எந்த வித தற்காப்பு உபகரணங்களும் இல்லாமல், வெறும் தகர டப்பா, வாளி, விளக்குமாருடன் இந்தத் தோட்டிகள் மனிதக் கழிவுகளை அகற்ற வேண்டி யுள்ளது. இதைப்பற்றி நகராட்சியின் துப்புரவுத் தொழிலாளி ஒருவர் கூறுவதாவது:

"நான் காலை 6.00 மணிக்கு வேலையைத் துவக்கினேனென்றால் மாலை 3.00 மணி வரை மலக்குழிகளையும், சாக்கடைகளையும் சுத்தப் படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். மலக்குழிகளைக் கழுவுகையில் மனிதக் கழிவுகள் முகம், கை, கால்களில் ஒட்டிக் கொள்ளும். அதன் நாற்றமோ சகிக்க முடியாதது. இதை நான் தவிர்க்க முடியாது. சாக்கடை அடைத்துக் கொண்டால், அது இதைவிட மோசம். சாக்கடைக்குள் மூழ்கி அடைப்பை எடுப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்."

அவர்களின் வேலையின் தன்மை காரணமாக பெரும்பாலான தோட்டிகள் தோல் வியாதி, சுவாசித்தலில் பிரச்சினை போன்ற நோய்களால் பாதிக்கப் படுகிறார்கள். ஒரு சிலருக்கு கண் பார்வை கூட பாதிக்கப்படுவதுண்டு.

இவ்வளவு பிரச்சினைகள் இருந்த போதிலும், வேலை போய்விடும் என்ற காரணத்தால் இந்தத் தோட்டிகளால் அதிக சம்பளம் தாருங்கள், நவீன உபகரணங்களை வாங்கிக் கொடுங்கள் என்று கேட்க முடியாது.

இதில் மிகப் பெரிய கொடுமை என்னவென்றால், இது பரம்பரைத் தொழிலாகி விட்டது. தந்தையின் வேலையைத்தான் மகன் செய்ய வேண்டும். முறையான கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமையும், கீழ்சாதி என்ற முத்திரையும் தான் இதற்குக் காரணம்.

மூன்று குழந்தைகளுக்குத் தாயான சவீதா என்ற பெண்மணி கூறுகிறார். "இந்த



படிப்பகம்

www.padippkam.com

வேலை எனக்கும் பிடிக்கவேயில்லை. மலக்குழிகளை வெறும் கைகளால் கழுவ வேண்டியிருக்கிறது. மனிதக் கழிவுகளிலிருந்து வரும் நச்சுக் காற்றும், நாற்றமும் கண்களை எரிக்கிறது. ஆனால் எனக்கு யாரும் வேறு வேலை கொடுக்க மாட்டார்கள். எனது பெற்றோர் இந்தத் தொழிலைத்தான் செய்தார்கள். நானும் அதே தொழிலை செய்கிறேன். எனது குழந்தைகளாவது இந்த பயங்கரத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். ஆனால் அது நடக்காது என்பது எனக்குத் தெரியும்."

## புதைந்திருக்கும் இன வேறுபாடு

தலித்துக்கள் கணிசமான அளவில் கொத்தடிமைகளாக விற்கப்படுகிறார்கள். இவர்கள் உயர்சாதி நிலச்சுவான்தார்களின் பண்ணைகளில் சொற்ப சம்பளத்திற்காக அடிமைகளைவிட மோசமாக வேலை செய்ய வேண்டும்.

சில பகுதிகளில் தலித்துகள் இன்னமும் கோவிலுக்குள் அனுமதிக்கப் படுவதில்லை. வேதங்களை அவர்கள் படிக்கக் கூடாது. உயர்சாதியினர் வசிக்கும் தெருக்களில் நடக்கக்கூடாது. மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள்.

மனித உரிமைகளைக் கண்காணிக்கும் குழு 1999-ல் "மனமுடைந்த மக்களும், அவர்களுக்கு இழைக்கப்படும் சாதி கொடுமைகளும்" என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் "தலித்துகள் சொந்தமாக நிலங்கள் வைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப் படுவதில்லை... அவர்கள் மிக மோசமான சூழ்நிலைகளில் வேலை செய்ய வேண்டியுள்ளது. காவல்துறையும், காவல் துறையின் பாதுகாப்பைப் பெற்றிருக்கும் உயர் சாதியினரும் தலித்துகளை இஷ்டம் போல் நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந் தனர்" என்று தெரிவிக்கிறது.

கிராமங்களில் உயர்சாதியினர் வசிக்கும் பகுதிகளில் தீண்டத் தகாத வர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. உயர் சாதியினரின் கிணறுகளில் அவர்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது. கோவில் களுக்குள் அனுமதி இல்லை. கடைகளில் தனி டம்ளர்தான். இவ்வளவு ஏன். தங்களுக்குச் சொந்தமான நிலத்தின் மீது கூட தீண்டத்தகாதவர்கள் உரிமை கொண்டாட முடியாது. பள்ளிகளில் வகுப்பறையின் கடைசி வரிசையில்தான் தலித் குழந்தைகள் உட்கார வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால், சாதி என்னும் பெயரால் தலித்துக்கள் அடக்கி வைக்கப்பட்டனர்.

## பயனில்லாத சீர்திருத்தங்கள்

தலித் பெண்கள் பருவமடைவதற்கு முன்பாகவே உயர்சாதியினரின் தேவை களுக்காக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப் படுகின்றனர். தலித்துகள் உரிமை, ஊதியம் என்று போராடும் பட்சத்தில், அதைத் தவிர்க்கவும், பெண்களுக்கு எதிராக கொடுமைகள் நிகழ்த்தப் படுகிறது.

வளைகுடா நாடுகளில் வேலை செய்து, வளம் பெற்ற தலித்துகள் கூட, தங்கள் ஊருக்குத் திரும்பியதும் புற சாதிகளாகவே நடத்தப்படுகிறார்கள். அவர்கள் நிலம் எதுவும் வாங்க முயற்சிக் கையில், உயர்சாதியினரால் தாக்கப் படுகிறார்கள்.

பலர் படித்துப் பட்டம் பெற்றாலும் கூட உயர்சாதியினர் ஆக்கிரமித்திருக்கும் தொழில்களில் அவர்களால் முன்னேற முடிவதில்லை.

"சட்டம், மனித உரிமை பாதுகாப்பு என்பதெல்லாம் தலித்துகளுக்கு எதிராக ஏவிவிடப்படும் வன்முறைகளையும், இன வேறுபாட்டையும் மூடிமறைக்கும் முக மூடிகளாகத்தான் செயல்படுகின்றன" என்று மனித உரிமை கண்காணிப்புப் பிரிவு



படிப்பகம்

www.padippkam.com

கூறுகிறது. கீழ்சாதியினருக்கான தனி அரசியல் கட்சிகள் தோன்றியும் இந்த நிலை மாறவில்லை.

மாநில அரசுகளின் முதல் மந்திரியாக தலித்துகள் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதும், நாட்டின் மிகப் பெரிய பதவியான குடியரசுத் தலைவர் பதவியில் ஒரு தலித் அமர்த்தப்பட்டிருப்பதும் ஒரு நல்ல மாற்றம்தான். கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பிரிவுகளில் தலித்களுக்கு ஒதுக்கீடு ஏற்படுத்தியிருப்பதும் நல்ல மாற்றம்தான். ஆனால் இந்த மாற்றங்களால் தலித்துகளின் வாழ்க்கையில் குறிப்பிடும் வகையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தலித்துகளின் நலனுக்காக இயற்றப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பெரும்பாலான மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப் படவே இல்லை.

குடியரசுத் தலைவர் தனது ஐம்பதாவது சுதந்திர தினச் செய்தியில் ''சட்டங்கள் மூலம் தீண்டாமை ஒழிக்கப்பட்ட போதிலும், அதன் நிழலானது நமது சாதி அமைப்புகளின் செய்கைகளில் ஒட்டிக் கொண்டுதானிருக் கிறது" என்று கூறியிருக்கிறார்.

கல்வி மற்றும் அரசுப் பணிகளில் அரசியல் சாசனம் கூறியுள்ள ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படவில்லை. சமூக, பொருளாதார, அரசியல் நீதி என்பது இலட்சக்கணக்கான மக்களுக்கு இன்னமும் பகல் கனவாகவே இருக்கிறது.

உலகிலேயே அதிக அளவில் தொழில்நுட்ப வல்லுநர்கள் இருக்கும் நாடு என பெருமைப்படும் பாரத தேசத்தில் அதே அளவில் கல்வி அறிவு இல்லாதவர்களும் இருக்கிறார்கள். இங்கு எந்த அளவிற்கு வசதி படைத்தவர்கள் இருக்கிறார்களோ, அதை விட அதிகமாக ஏழ்மைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் இருக்கிறார்கள்.

நமது மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் குப்பை மேட்டிலிருந்துதான் கட்டப்படுகின்றன. செயற்கைக் கோள்கள் ஏழைகளின் குடிசைகளுக்கு நடுவிலிருந்துதான் அனுப்பப்படுகின்றன. தங்களின் மோசமான வாழ்க்கைத் தரத்திற்கு எதிராக மக்கள் காட்டும் சாதாரண எதிர்ப்பு, பல சமயங்களில் வன்முறைக் கலவரங்களாக வெடித்து விடுவதில் ஆச்சரிய மில்லை. தலித்துகளும், ஆதி வாசிகளும்தான் இதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

> நமது மிகப் பெரிய தொழிற் சாலைகள் எல்லாம் குப்பை மேட்டிலிருந்துதான் கட்டப்படுகின்றன. செயற்கைக் கோள்கள் ஏழைகளின் குடிசைகளுக்கு நடுவிலிருந்து தான் அனுப்பப்படுகின்றன.

தலித்துகளின் வாழ்க்கைத்தரம் உயராவிட்டால், இந்திய ஜனநாயகமானது சாணக்குவியல் மேல் கட்டப்பட்ட அரண்மனையாக விளங்கும்." என்று கூறி குடியரசுத் தலைவர் தனது உரையை முடித்திருக்கிறார்.

### சமயமா அல்லது சமூக அமைப்பா?

உறுதியாகப் பின்பற்றப்படும் இந்த பழமையான சமூக அமைப்பு நவீன இந்தியாவிலும் உயிரோடு இருப்பதற்கு சமூகவியல் வல்லுநர்கள் வெவ்வேறு விதமான விளக்கங்களைக் கூறுகிறார்கள். இந்து மதத்தில் கொடுக்கப்பட்டுள்ள இசைவுதான் இதற்குக் காரணம் என்று சிலர் கருதுகிறார்கள். வேறு சிலர் அரசாங்கம் தான் தனது அரசியல் மற்றும் பொருளாதார சந்தர்ப்பங்களுக்காக இந்த சமூக அமைப்பை பராமரிக்கிறது என்று கூறுகிறார்கள்.

"இந்தியாவில் சாதிமுறை நடைமுறையிலிருப்பதற்கு இந்து மதத்தின் ஒப்புதல் இருக்கிறது. அது புனிதமான தாகவும், பன்மை தன்மை உடையதாகவும் கருதப்படுகிறது. இது தொன்றுதொட்டு



படிப்பகம்

www.padippkam.com

நடைபெற்று வருகிறது" என்று கூறுகிறார் மனித உரிமை பத்திரிகையின் ஆசிரியரான ஆர்.எம்.பால்.

கனாய் பிரகாஷ் லூயிஸ் "வேதங்கள் சமுதாயப் பிரிவுகளுக்கு ஏற்ற வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. வேதங்களை எழுதியது ஒரு பிராமணர். எனவே அவர்கள் தங்களுக்கு உபயோகமாக இருக்கும் வகையில் சாதிமுறையை உருவாக்கி அதை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்" என்று கூறுகிறார்.

ஒன்றில் மட்டும் அனைவரும் ஒரே கருத்தை கொண்டிருக்கிறார்கள். சாதி முறையானது பொருளாதாரத்தை அடிப் படையாகக் கொண்டு இருக்கிறது. இல்லாவிட்டால் அது இத்தனை நாள் தொடர்ந்து இருக்க வாய்ப்பு இல்லை. கீழ் சாதியினருக்கு சொந்தமாக நிலங்கள் கொடுக்கப் பட்டு, ஓரளவிற்கு பொருளாதார சுதந்திரம் கிடைத் திருந்தால், அவர்கள் வெகு எளிதாக தங்களை கொடுமைப் படுத்தும் உயர் சாதியினரை எதிர்த்திருப் பார்கள்.

"பெரும்பாலான தலித்துக்களுக்கு நிலம் இல்லை. ஆக்கிரமிப்பு செய்த நிலங்களும் உயர் சாதியினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. தலித்துக்களுக்கு நிலங்கள் கிடைத்திருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பொருளாதார சுதந்திரம் எளிதாக இருந்திருக்கும். கீழ் சாதியினர் பொருளாதார சுதந்திரம் பெற்றால், மொத்த அமைப்பே மாறி விடும்" என்கிறார் பெர்ஸின்ட்டா ஃப்ராங்டா.

சில அரசாங்கங்கள் சாதி முறையை ஒழித்துவிட முயன்றாலும், பாரதிய ஜனதா கட்சி பழமைவாத இந்து தீவிர வாத அமைப்புகளின் ஆதரவுடன் சாதி முறையை பாதுகாப்பதில் மும்முரமாக இருக்கிறது.

> தலித்துகளின் வாழ்க்கைத்தரம் உயராவிட்டால், இந்திய ஜனநாயக மானது சாணக் குவியல் மேல் கட்டப் பட்ட அரண்மனையாக

அவர்களைப் பொறுத்த வரையில் சமூக முறைகளும், தொழில் பிரிவுகளும் மாற்ற முடியாதவை. இது மனித உரிமை இயக்கத்தினரின் கூற்றாகும்.

இதை நிரூபிக்கும் வகையில் பாரதிய ஜனதாவின் ஒரு அங்கமான உலக இந்துக்குழுவின் இணை பொதுச் செயலாளர் ஓங்கள் பவே "சாதியை ஒழிக்க வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கவில்லை. தொழில்கள் சரியான முறையில் பிரிக்கப்பட்டிருக்கையில் அவற்றை நாம் ஏன் ஒழிக்க முயலவேண்டும் சாதி முறையில் சமுதாயத்தில் வெவ்வேறு அந்தஸ்துகள் பாதுகாக்கப்படுகின்றன. அதிக திறமையும், அறிவும் படைத்தவர்கள் கூடுதலாக முன்னேறிக்கொள்ளட்டும்" என்று கூறுகிறார்.

மேலும் அவர் "சமயத்திற்கும் சாதிக்கும் சம்பந்தமில்லை. சாதி என்பது வேலைகளை பகிர்ந்தளிக்கும் ஒரு சமூக ஒழுங்குமுறை. மொத்த சமுதாயமும் இந்துத்துவத்தால் ஒருமைப்படுத்தப் பட்டுள்ளன சாதியானது ஒவ்வொருவரும் தனது வேலையை செய்கிறார்கள் என்ற உணர்வுடன் நாட்டையும் சமுதாயத்தையும் ஒன்றுபடுத்துகிறது" என்கிறார்.

பிராமண வகுப்பைச் சேர்ந்த பவேயின் கூற்று என்னவென்றால் "சாதிகள் ஒன்றுடன் ஒன்று கலப்பது என்பது எதிரிகளின் இரத்தத்தை நம் இரத்தத்துடன் கலப்பது போல ஆகும். இது சமூக தூய்மைக் கேட்டை உருவாக்கும்" என்பதுதான்.

"இந்துத்துவமானது நிறத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு பிரிவுகளாக செயல்படுகிறது. இது இரத்த வகையை போலத்தான். ஒரு வகை இரத்தத்தை வேறு வகை இரத்தத்துடன் கலக்கும் பட்சத்தில் தீமைகள்தான் விளையும்", என்று கூறும் பவே ஒருபடி



படிப்பகம்

www.padippkam.com

மேலே போய் "தீண்டாமையின் நோக்கம் சுத்தம் மற்றும் சுகாதாரம்" என்று கூறுகிறார்.

பெரும்பாலான இந்து தீவிரவாதி களைப் போல பவேயும் ஏழ்மையின் காரணமாக கிறிஸ்துவ, இஸ்லாமியங் களுக்கு மாறும் தலித்துக்களையும் ஆதிவாசிகளையும் சாடுவதோடு அதற்குக் காரணம் கிறிஸ்துவ பாதிரியார்களின் தூண்டுதல்தான் என்கிறார்.

**இரண்டு வெவ்வேறுபட்ட இந்தியாக்கள்**

இந்தியாவில் உயர் பதவியைப் பெற்ற முதல் தீண்டத்தகாதவர் என்ற பெருமை யைப் பெற்றவரும், அரசியல் சாசனத்தை உருவாக்கியவருமான அம்பேத்கர், இந்து மதத்தை சாதிகளின் பிடியிலிருந்தும், மதவாதிகளின் பிடியிலிருந்தும் விடுவிக்க வேண்டும் என்று போராடினார். ஆனால் அவரே இறுதியில் இந்து மதத்தை துறந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுடன் புத்தமதத்தை தழுவி விட்டார்.

"இதர மதத்தினரிடமும் மனிதா பிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை தனது மதத்தினருக்கு கற்றுத் தராத மதம் ஒரு மதமே அல்ல. அதை மதம் என்பதற்குப் பதிலாக தனது வலிமையை வெளிக்காட்டும் ஒரு அமைப்பாகத்தான் கருதவேண்டும்" என்கிறார் அம்பேத்கர்.

மிருகங்கள் தொடுவதை சகித்துக் கொள்ளும் மதத்தால், மனிதர்கள் தொடுவதை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை என்றால், அது ஒரு கேலிக் கூத்து தான். மூடர்கள் மூடர்களாகவும், ஏழைகள் ஏழைகளாகவும் இருக்க வேண்டும் என்று கூறும் மதம் மதமே அல்ல. மதமும் அடிமைத்தனமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை.

இதற்கு பரிகாரமாக அம்பேத்கர் கூறியவற்றுள் ஒன்று கலப்புத் திருமணம். மாறுபட்ட இரத்தங்கள் கலந்தால்தான் ஒற்றுமை வளரும். சாதி உணர்வு ஒழியும்.

ஆனால் சாதிமுறையை விற்கும் பலரிடம் இந்த நம்பிக்கை அவ்வளவாக இல்லை. "சாதி என்பது ஆண்டாண்டு காலமாக ஆழப்பதிந்துவிட்ட ஒரு விஷயம். அதை ஒரே நாளில் அழித்து விட முடியாது. ஒரு சில தலைமுறைகள் கடந்தால்தான் இது சாத்தியமாகும்" என்று அவர்கள் கருது கிறார்கள்.

வீடுகள் மற்றும் உதவித்தொகை வழங்குதல் போன்றவற்றில் கலப்பு சாதியினருக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற முயற்சிகளை அரசு எடுத்தால் தான் சாதி ஒழிப்பு சாத்தியமாகும். இது போன்ற முயற்சிகள் இல்லாதபட்சத்தில், சாதிமுறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவது என்பது ஒரு பகல் கனவே.

"இங்கு இரண்டு இந்தியாக்கள் இருக்கின்றன. ஒன்று கம்ப்யூட்டர் மற்றும் தொழில்நுட்பத்தில் புகழ் பெற்ற நவீன இந்தியா. மற்றொன்று ஆதரவற்ற கீழ் சாதியினரை கொடுமைப்படுத்தும் காட்டு மிராண்டி இந்தியா" என்கிறார் ரவி நாயர்.

நவீன இந்தியாவை உருவாக்கிய வர்கள் சாதிகளற்ற இந்தியாவிற்காக பிரச்சாரம் செய்த போதிலும், சாதியானது இன்னும் திருப்பித் தாக்கும் சக்தியாகவே திகழ்கிறது. தலித்துகளுக்கு தங்களது எதிர்காலத்தைப் பற்றி எந்தவித சந்தேகமும் இல்லை. இந்திய ஆட்சியாளர்கள் தங்களைக் கைதூக்கி விட முன்வந்தா லொழிய தங்கள் தலைவிதியில் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்ற முடிவிற்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

"எங்களுக்கு எதிர்காலம் என்பதே இல்லை. நாங்கள் வாழ்வதும் ஒரு வாழ்க்கையல்ல. கீழ்சாதியில் பிறந்த காரணத்தால் நாங்கள் வாழ்நாள் முழுவதும் கழிவறைகளை சுத்தப் படுத்தும் வேலையை மட்டும்தான் செய்ய வேண்டும். வேறு வேலை செய்வதற்குத் தேவைப்படும் கல்வி அறிவைப் பெற வாய்ப்பும் இல்லை. அயல்நாடுகளில் இருக்கும் விலங்குகளைவிட கேவலமான வாழ்க்கையை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார் அதே துப்புரவு தொழிலாளி. ●



படிப்பகம்

www.padippkam.com

# பி.ஜே.பி. அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை

பிரதிபா ஜெயச்சந்திரன்

சமீபத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமான இந்தியன் வங்கியில் எழுத்தர் பதவியிலிருந்து அலுவலர் பதவி உயர்வுக்கான பட்டியல்கள் வெளியாயின. இந்தப் பட்டியல்கள் இரண்டு வகைப்படும். ஒன்று Seniority cum Selectivity என்று சொல்லப் படும் அனுபவ முதிர்ச்சியின் அடிப்படையில் வழக்கப்படும் பதவி உயர்வு. மற்றொன்று திறமையின் அடிப்படையில் வழங்கப்படும் (merit) பதவி உயர்வு. இந்த இரு பட்டியலிலும் தாழ்த்தப் பட்ட பிரிவினர் ஒருவர்கூட பதவி உயர்வு பெறவில்லை என்பது பொதுத்துறை பதவி உயர்வு வரலாற்றில் அதிர்ச்சியளிக்கக் கூடிய விஷயம்.

இந்தப் பதவி உயர்வுக்கான தேர்வுகள் நடந்தது 1998 ஆம் ஆண்டு இறுதியில். முடிவுகள் வெளியானது 2001-பிப்ரவரியில், பதவி உயர்வுக்கான இந்தத் தேர்வு நடந்த ஆண்டில், நிர்வாகம் Vacancy Based Roster System என்று சொல்லப்படும் - மொத்தம் எத்தனை பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமோ, அவற்றில் தாழ்த்தப்பட்டவர் களுக்கான விகிதாச்சாரத்தில் அவர் களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. ஆனால் கடந்த ஆண்டு BJP அரசு, பதவி உயர்வில், Post Based Roaster System என்று சொல்லப் படும், ஒரு குறிப்பிட்ட பதவி வகிக்கும் அலுவலர்கள் அந்நிறுவனத்தில் எத்தனை பேரோ, அவர்களில் எவ்வளவு எண்ணிக்கை (விகிதாச்சார அடிப்படையில்) தாழ்த்தப் பட்டவர்கள் இருக்க வேண்டுமோ, அத்தனை எண்ணிக்கையில் ஏற்கனவே அப்பதவியில் தாழ்த்தப்பட்டவர்கள் இருந்தால், இப்போது, பதவி உயர்வில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு இடமில்லை என்று பொதுத் துறை நிறுவனங்களுக்கு அரசாணை அனுப்பியுள்ளது.

உதாரணமாக, Scale I என்று சொல்லப்படும் JMG (Junior Management Grade)-ல் மொத்தம் 100 நபர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இவர்களில், விகிதாச்சார அடிப்படையில் 15 நபர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அப்படியிருக்க, இந்த 100 நபர்களில், ஏற்கனவே 25 பேர் தாழ்த்தப் பட்ட பிரிவினராக இருக்கும் பட்சத்தில் இப்போது புதிதாக எடுக்க இருக்கும் 50 நபர்களில், ஒருவர்கூட தாழ்த்தப்பட்ட பிரிவினர் பதவி உயர்வு அடைய முடியாது. ஏனெனில், மொத்த எண்ணிக்கையான 150 பேரில், விகிதாச்சார அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்கள் 23 பேர்தான் இருக்க வேண்டும். இந்த அடிப்படையில், புதிதாக எடுக்க இருக்கும் 50 நபர்களில் ஒருவருக்குக் கூட பதவி உயர்வு அளிக்க முடியாது என்று மத்திய அரசு கூறுகிறது. எந்த இடத்திலும் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்துவிடக் கூடாது என்ற எண்ணம்.

இப்போது இந்தியன் வங்கியில் இப்படிப்பட்ட பிரச்சினை எழுந்ததற்கு யார் காரணம்? உண்மையில் இந்தியன் வங்கி அதிகப்படியான தாழ்த்தப்பட்ட பிரிவி னருக்கு பதவி உயர்வு ஏற்கனவே வழங்கி விட்டதா? இல்லை. அப்படியானால்



படிப்பகம்

www.padippkam.com

இப்போது ஒரு குறிப்பிட்ட பிரிவில் இவ்வளை அதிகமான நபர்கள் எஸ்.ஸி. பிரிவினராக எப்படி உள்ளனர். இதன் மர்மம் என்ன?

சமீபத்தில் மத்திய அரசு VRS என்று சொல்லப்படும் விருப்ப ஓய்வுத் திட்டம் என்னும் ஆட்குறைப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தியிருந்தது. இந்தத் திட்டத் தின் கீழ் அதிக அளவில் தங்கள் தங்கள் தொழிலைப் பார்க்கப் போய்விட்டவர்கள் அனைவரும் அல்லது பெரும்பாலும் பிற இனத்தைச் சேர்ந்தவர்கள். 100 நபர்கள் இருந்த இடத்தில் 20 நபர்கள் VRS திட்டத்தில் ஓய்வு பெற்றார்கள். இப்போது மொத்த எண்ணிக்கை 80. இதில் தாழ்த்தப் பட்டவர்கள் 25. புதிதாக எடுக்கப்போகும் எண்ணிக்கை 50. ஆக மொத்த எண்ணிக்கை 130. இதில் விகிதாச்சார அடிப்படையில் எஸ்.ஸி. பிரிவினர் இருக்க வேண்டிய எண்ணிக்கை 20. ஏற்கனவே உள்ளவர்கள் எஸ்.ஸி பிரிவில் 25. எனவே, இதன் அடிப்படையில் எஸ்.ஸி. பிரிவினர் அதிகமாக உள்ளதால், புதிதாக எடுக்க இருக்கும் 50 நபர்களில், எஸ்.ஸி. பிரிவில் ஒருவருக்குக்கூட பதவி உயர்வு வழங்க இடமில்லை

இவ்வாறு VRS திட்டத்தை ஒருபுறம் மைய அரசு அறிமுகப்படுத்திவிட்டு, எஞ்சியிருப்பவர்களில் உள்ள தாழ்த்தப்பட் டோரின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, தாழ்த்தப்பட்டோருக்கு பதவி உயர்வு மறுக்கப் பட்டுள்ளது.

1998-ஆம் ஆண்டு பதவி உயர்வுக்கான தேர்வு எழுதப்பட்டபோது, இது போன்ற திட்டங்கள் இல்லை. அப்போது எஸ்.ஸி. பிரிவைச் சார்ந்தவர்கள் தேர்வில், திரளாகக் கலந்து கொண்டார்கள், தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில். தேர்வு முடிவுகள் அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டது. முறையாக மூன்று மாதங் களுக்குள் அறிவிக்கப்பட வேண்டிய முடிவுகள், மூன்று ஆண்டுகளுக்குப் பின் வெளியானது. இதற்கிடையில், கடந்த ஆண்டில் மத்திய அரசு அறிவித்த புதிய பதவி உயர்வுக் கொள்கையில் அதைக் கடைப் பிடிக்க வேண்டிய நிர்வாகம், எஸ்.ஸி. பிரிவினருக்கு பதவி உயர்வு இல்லை என்று கையை விரித்துவிட்டது.



**இதுபோன்ற ஒரு மாபெரும் மோசடியை எதிர்த்து மற்ற சிவப்புக் கட்சிச் சங்கங்கள் கண்டும் காணாமல் இருந்துள்ளன**

இதுபோன்ற ஒரு மாபெரும் மோசடியை எதிர்த்து மற்ற சிவப்புக் கட்சிச் சங்கங்கள் கண்டும் காணாமல் இருந் துள்ள நிலையில், தற்போது BEFI (Bank Employees Federation of India) சங்கம் இதுபோன்ற மோசடி குறித்து நிர்வாகம் வெள்ளை அறிக்க வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. BEFI ஒரு மைனாரிட்டி யூனியன். தாழ்த்தப்பட்ட ஊழியர் சங்கமும் நலிவுற்ற நிலையில் இருப்பதால் நிர்வாகத்தை எதிர்த்து மேல் முறையீடு செய்ய முடியாமல் முடங்கிக் கிடக்கிறது.

இதுபோன்ற மோசடிகளை பி.ஜெ.பி. அரசு தலித்துகளுக்கெதிராக பொதுத்துறை நிறுவனங்களில் கட்டவிழ்த்து விட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க செயலாகும். ●



படிப்பகம்

www.padippkam.com

# அடைப்புக்குறிகளுடன் அலையும் அரசியல் நாய்கள்

மேகவண்ணன்

அண்மையில் (டிசம்பர் 15,16,17-2000) மதுரையில் நிகழ்ந்த "3வது மதுரை குறும்பட, ஆவணப்பட விழா"-வில் அதிகம் சுற்றுச் சூழல், மனித உரிமைகள், மூன்றா முலக நாடுகள் மீதான பொருளாதார அழுத்தம் இவற்றினூடாக எழும் போராட் டங்களை மையமாகக் கொண்ட படங்கள் திரையிடப் பட்டன.

மிகக் குறைவான பார்வையாளர் களின் மத்தியில் நிகழ்ந்த இந்நிகழ்வின் இறுதி நாளில் 'நதியின் மரணம்' திரையிடப் பட்டது.

இப்படம் குறித்து ஏற்கனவே பல்வேறு கட்டுரைகள் வெளிவந்திருந்தபோதிலும் அன்று திரையிடலுக்குப் பின்னர் நடந்த விவாதங்களும், நதியின் மரணம் குறித்து வேறு சில இடங்களில் நிகழ்ந்த உரையாடல் களின் முக்கியத்துவம் - இதை எழுத நேர்கிறது.

இந்நிகழ்ச்சியில் ஒருவர் சொன்னார் "இது உழைக்கும் மக்களது வர்க்கப் போராட்டம். இறந்தவர்களில் எல்லாச் சமூகத்தைச் சார்ந்தவர்களும் இருக்கிறார் கள். இதை தலித் போராட்டமாகச் சித்திரிப்பது தவறானது" என்றார்.

இப்படியெல்லாம் பேச முடியுமா? என்று அதிர்ச்சி நம்மை ஆட்கொள்கிறது. நாட்டில் எத்தனையோ கூலி உயர்வுக்கான போராட்டங்களும், மனித உரிமை மீறலுக் கெதிரான போராட்டங்களும் பல்வேறு தலைமைகளில் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. எத்தனை போராட்டங் களை காவல்துறை விரட்டிவிரட்டிப் படுகொலை செய்வதன் மூலமாக முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது?

தாமிர பரணியில் நிகழ்ந்தது- மக்கள் ஒரு தலித் தலைமையின் கீழ் திரளாக திரண்டு வந்தார்களென்பதினாலேயே அதை பொறுத்துக் கொள்ள முடியாத உயர்சாதி மனோபாவத்தின் அரசதிகார மமதையோடு நிகழ்த்தப்பட்டவை அந்தப் படுகொலைகள்.

"ஏண்டி கிருஷ்ணசாமி சிகப்பாயிருக் கான்னு அவன் கூப்பிட்டவுடனே வந்தீகளாடி?" என்று கேட்டபடி ஊர் வலத்தில் வந்த ஒரு தலித் பெண்ணை ஒரு போலீஸ்காரன் தாக்குவதிலிருந்து நமக்கு கண்கூடாகத் தெரிவது இதுதான். தேர்தல் சமயத்தில் நிகழ்ந்த இப்படு கொலைகள் தமிழக அரசியலில் எந்த அதிர்வையும் ஏற்படுத்த முடியாமற் போகுமளவுக்கு இதைத் திட்டமிட்டுக் கண்டுகொள்ளாமல் விட்ட தமிழகத்தில் இயங்கும் எல்லா மீடியா சாதனங்களுக்கும் "இறந்தவர்கள் தீண்டத்தகாதவர்கள். அவர்கள் இருந்தால் என்ன? செத்தால் என்ன?" என்கிற ஆதிக்க சாதி மனோபாவம் தானே காரணமாக இருக்க முடியும்? இறந்தவர்களில் தலித் அல்லாதவர்கள், CPI(M) கட்சியைச் சேர்ந்தவர்கள், இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்கள் என்று பலரும் இருக்கிறார்கள். தலித் விடுதலைக்கான நெடிய வரலாற்றில் இறந்த அனைவருமே என்றும் நினைவில் வைத்துப் போற்றப்பட வேண்டிய போராளிகளே என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இப்படுகொலையைப் பயன் படுத்தி மேலும், மேலும் கற்பனையான வர்க்க அரசியல் பிராக்கெட்டுக்குள் இதனை அடக்க முற்படும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் மீதான நமது கோபம் இதுபோன்ற விவாத அரங்குகளில் மேலும் அதிகரிக்கிறது.

காலாதிகாலமாக பிணங்களின் மீதே அரசியல் பண்ணிப் பழகிவிட்ட சமூகமல்லவா? இதில் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக்கொள்கிறவர்களும், தலித்



படிப்பகம்

www.padippkam.com

விடுதலைக்கான அரசியல் இயக்கம் என்று நம்பப்பட்டவர்களும் இதைக் கையிலெடுப் பதில் ஆச்சரியமில்லை.

தலித் இயக்கங்களுக்காவது இப் பிரச்சினையில் அவர்கள் தலித் என்கிற காரணத்திற்காகவே கொல்லப்பட்டவர்கள் என்கிற தார்மீக கோபத்தை அடிப் படையாகக் கொள்ளலாம். ஆனால் இப்படுகொலைகளின் பிரதான காரணத் தையும், சமகாலத்திலும், எதிர்காலத்திலும் இதன் வாயிலாக மக்கள் பெறவேண்டிய சரியான படிப்பினைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவரும் போலிப் பொதுவுடமை இயக்கங்களின் பிரச்சாரங்கள் வன்மை யாகக் கண்டிக்கத் தக்கவை.

இந்தியத் துணைக்கண்டத்தில் திரிபு வாதப் பாதையைத் தேர்வு செய்த பின்னர் இவர்கள் வகுத்த வர்க்க அரசியல் சட்டகம் தலித்துகளை உள்ளடக்காதது.

படிநிலைகளிலான உயர்சாதி மனோபாவம் எவ்வாறு தலித்துகளை ஒட்டுவங்கிகள் என்பது தவிர்த்து சகமனிதர் களாகவே மதிக்காத சிந்தனை கொண்டிருந் தனவோ அதுபோலவே போலிப் பொது வுடமை இயக்கங்களும் தலித்துகளை, அவர்களது சக மனிதனாக முனையும் அரசியல் தீவிரத்தை இணைக்காத ஒரு புதிய மார்க்சியத்தை இங்கே கட்டமைத்தனர். இங்கே பல மாநிலங்களில் அது பொலபொலவென்று இற்று உதிர்வதை அவர்களும் காண்கிறார்கள், நாமும் காண்கிறோம்.

சுர்ஜித்துகளை சுர்ஜித்துகளாகவேயும் நம்பூதிரிபாடுகளை நம்பூதிரிகளாகவுமே தக்கவைத்துக் கொண்ட கட்சிகள் தலித்து களை தலித்துகளாகவே இருங்கள் என்று கூறாமல் கூறுவதில் வியப்பொன்று மில்லைதான். வர்க்கப் போராட்டம் கூர்மையடைந்துவிட்டது. எனவே அரசு அதிகாரம் படைகொண்டு தாக்குகிறது என்று பிற்காலத்தில் ஒருவேளை அவர்கள் சொன்னாலும் சொல்லாம்.

ஆனால் இப்போதைக்கு வர்க்கம் என்ற இடத்தில் 'சாதி' என்றும், அரசு அதிகாரம் என்பதோடு உயர்சாதி மனோபாவத்தை இணைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.

ஏனெனில் வர்க்க விடுதலையானாலும் அது தலித்துகளின் விடுதலையானாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் உக்கிரமான எல்லாப் போராட்டங்களையும் காவு கொள்ளும் அரசதிகார ஆயுதங்களோடு என்றுமே துணை நின்றவர்கள் அவர்கள். சில MLA/MP சீட்டுகளுக்காகவும், நாங்களும் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்வதற்காகவும் வர்க்கம், ஜனநாயகம், விடுதலை, புரட்சி என்று உளறிக் கொட்டியபடி இவர்கள் நிகழ்த்தும் அரசியலானது என்றுமே விடுதலை வேட்கையோடு திரளும் மக்களுக்கான சரியான வழிகாட்டுதலாக அமையப் போவதில்லை. 'புரட்சி' பற்றிய அவர்களின் கற்பிதங்களின் வாயிலாக அதை ஒரு பூதாகரமான இனிய கற்பனையாக மட்டுமே மனதில் நிறுத்தி, தொடர்ந்து அமைப்புக்குள், அமைப்புக்காக சேவை செய்து (தானும் பலனடைந்து) வரும் அனைத்து இடதுசாரி இயக்க உறுப்பினர் களும் தயவுசெய்து இதைப் பரிசீலிக்க வேண்டுகிறோம்.

தலித்துகள், மற்றும் தலித் விடுதலைக்கு துணை நிற்கக் கூடியவர்களின் அரங்குகளுக்குள் நுழைந்து இவர்களது இந்துத்துவா ரக மார்க்சியத்தை இவ்வரங் களுக்குள்ளும் திணிக்கச் (Apply) செய்ய இவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் மறுபடியும் மறுபடியும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கவை. அவ்வாறெல்லாம் அவர்கள் அபத்தமாகப் பேசும்போது அவர்களின் வாயில் அறைய முடியாமல் நாமும் விவாதங்களின் மூலமாகவே பதில் சொல்ல வேண்டியிருப் பதை நினைக்கும் போது வெட்கமாகவும் இருக்கிறது. ●



படிப்பகம்

www.padippkam.com

# வழக்கொழிந்த புன்செய்ப் பயிர்கள்

- முனிம்ம

அடித்தள மக்களின் உணவுத் தேவையும் அவ்வுணவுத் தேவையினை நிறைவு செய்ய இயற்கையோடிணைந்த வழிகளை ஆராய்ந்து, அதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுவது எப்போதும் அரசின் கவனத்தைப் பெற்றதில்லை.

நமது நாகரீகம் பார்ப்பனமயமானது போல் அவற்றில் ஒன்றான உணவுப் பழக்கமும் பார்ப்பனமயமாகிவிட்டது. மூன்று வேளையும் அரிசி பிரதான உணவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அதிலும் துரதிர்ஷ்டவசமானது நவீன அரிசி உற்பத்திமுறை கார்போ ஹைட்ரேட் எனும் எரிசக்தி மட்டுமே மிஞ்சுமளவுக்கு மேற்கொள்ளப்படுகிறது. கம்பு, கேழ்வரகு, பல வகையான சோளம், வரகு, சாமை, தினை போன்ற உணவுவகைகள் மிகவும் அரிதாகவே பயிர் செய்யப்படுகின்றன. இப்புன்செய் பயிர்கள் பெரும்பாலும் அடித்தள மக்கள் மற்றும் பழங்குடியினரின் தானியங்கள். இத்தானியங்களின் உற்பத்தியின்மைக்குப் பல்வேறு காரணங்கள் உண்டு.

முதல் முக்கிய காரணம் இவை அரிசியைக் காட்டிலும் ஊட்டச்சத்து மிகுந்தவை என்றாலும் இவற்றுக்கு பண்பாட்டு மதிப்புக் குறைவு. இவை ஏழ்மையின் சின்னங்களாகக் கருதப்பட்டு வந்ததே காரணம்.

விளைவாக அரிசி விலையேற்றம் பெற்ற அளவுக்கு, இத்தானியங்களின் சந்தை மதிப்பு கூடவில்லை.

இத்தானியங்களை உணவுக்காகப் பக்குவம் செய்வது அதிக உடலுழைப்பையும், நேரத்தையும் கோரியது.

நெல், அரிசி உற்பத்தியில் மே கொண்ட நவீனமுறைகள் இதர தானிய களின் உற்பத்தியில் மேற்கொள்ளப்ப வில்லை.

1996-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வி படி தென் மாநிலங்களின் வறுமை விவரத்தைக் கீழே காணலாம் :-

| | வறுமைப் பிடியிலுள்ளோரின் எண்ணிக்கை | கிராம ஜனத் தொகையில் வறுமை யுற்றோரின் சதவிகித |
|---|---|---|
| தமிழ்நாடு | 1,61,000,000 | 45% |
| ஆந்திரம் | 95,000,000 | 20% |
| கேரளா | 66,000,000 | 29% |
| கர்நாடகம் | 94,000,000 | 32.82% |
| இந்தியா | 22,94,000,000 | 39.06% |

தமிழ்நாட்டில் வறுமையில் வா வோரின் எண்ணிக்கை கிராம ஜன தொகையில் ஏறக்குறைய பாதியாக உள்ள அகில இந்திய சதவிகிதத்தைக் காட்டிலு கூடுதலாக உள்ளது.

எனவே கிராமங்களில் வாழும் ஏ மக்களின் உணவுத்தேவை குறித்து அர இயல்பாக கவலையடைந்திருக்க வேண்டு அதற்கான காரணங்களை ஆராண்ந் நடவடிக்கைகளில் இறங்கியிருக்க வேண்டு மாறாக, தொடர்ந்து பெருவிவசாயிகளி நலன், பணப்பயிர், இவற்றிலேயே கவன செலுத்தி வந்துள்ளது. கிராமப் பொருள தாரத்தைப் புணரமைக்கும் திட்டங்கள வகுக்காமல், தற்காலிக வறுமையொழிப்பு திட்டங்களையே மத்திய அரசி உதவியுடன் நடத்தி வந்துள்ளது.

1965-ல் பசுமைப்புரட்சி தொடங்கி போது வட மாநிலங்களிலும், தெற்கிலு



படிப்பகம்

www.padippkam.com

உணவு உற்பத்தித் திறன் ஏறக்குறைய ஒன்றாகவே இருந்தது. ஆனால் 1980-களில் நிலைமை முற்றிலுமாக மாறி வடமேற்கு மாநிலங்கள், தமிழ்நாட்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளன, எதனால்?

நமது ஆராய்ச்சிகள் யாவும், அரிசி, கோதுமை, உற்பத்தியிலும், அதிலும் குறிப்பாக, சில தட்ப வெப்ப பிரதேசங்களில் வளரக்கூடிய ரகங்களில் மட்டுமே முடங்கியது. அரிசிக்கும், கோதுமைக்கும் வெப்பமான பகலும், குளிர்ந்த இரவும் ஏற்றவை. 1970களில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட நெல் ரகம் தெற்கில் நல்ல விளைச்சலைக் காண முடியவில்லை. காரணம், மேகமூட்டமுள்ள பகற்பொழுதுகளும், வெப்பமான இரவுகளும் எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சலைப் பெருக்கவில்லை. தமிழ்நாட்டில் மழைக்காலங்களில் பயிரிடப்பட்ட நெல் ரகம், விதை, பூச்சிக்கொல்லி, உரம் ஆகியவற்றின் செலவு அதிகரித்து, விளைச்சலும் குறைவானதால் விவசாயிகள் லாபமடைய முடியவில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நிலமும், தட்பவெப்பமும், ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிகவும் மாறுபட்டது. ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்திற்கு (மற்ற மாநிலங்களைப் போல்) உட்பட்டது. ஆண்டின் மழையில் சராசரி 32.4 சதவிகிதம் தென்மேற்குப் பருவக்காற்று மூலம் பெறுகிறது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை, ஆண்டு மழையின் 47.6 சதவிகிதம் வடகிழக்குப் பருவக்காற்றால் பெறுகிறது. மொத்தம் சராசரியாக 943 மி.மீ. ஆண்டு முழுவதுக்கும் மழை பெறுகிறது. தமிழ்நாடுதான் இரண்டு பருவக் காற்றுகளின் மூலம் மழை பெறும் ஒரே மாநிலம். வெப்பநிலை 18°C யிலிருந்து 44°C வரையிலிருப்பதால் நிலநீர் விரைவிலேயே ஆவியாகிவிடுகிறது. ஆகையால் மழைநீரை நீண்டகாலம் சேமித்து விவசாயம் செய்ய முடிவதில்லை. இதுவரை நிலத்தடி நீரைப் பெருக்க, தேக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. நிலத்தடி நீர் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது.

இதிலிருந்து தெரியவருவது, குறிப்பிட்ட நெல் ரகம் கூட புவியியல், தட்ப வெப்ப சூழ்நிலைகளுக்கேற்ப மகசூல் தருகிறது. வீரிய விதை, ரசாயன உரம், பூச்சிக் கொல்லிகள் மட்டுமே உற்பத்தித் திறனை அதிகரித்துவிடாது. இன்னமும் புவியியலும், தட்பவெப்பச் சூழலும் விவசாய உற்பத்தியில் கணிசமான பங்கு வகிக்கிறது என்பதுதான்.

சமீபத்தில் ஹார்வார்டு பல்கலைக் கழகம் தமிழகத்தில் 'புவியியலும் விவசாய உற்பத்தித் திறனும்' குறித்து நடத்திய ஆய்வு வெளிப்படுத்துவதாவது, புவியியல் கணிசமான அளவு உற்பத்தியில் தொடர்புள்ளது. நில மாறுபாட்டிற்கேற்ப உற்பத்தி அளவும் மாறுபடுகிறது. ஆகவே நிலத்தின் தரத்திற்கேற்ப, தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, உரத்தின் அளவும் விவசாயச் செலவும் வேறுபடுவதால் புவியியலைத் திட்டமிடுதலின் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்றும், புவியியல் நுணுக்கங்களை விவசாய உற்பத்தித் திறனோடு பொருத்தமுற இணைக்க ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்பதே.

அந்த ஆய்வு கூட காலங்காலமாக சாகுபடியிலிருந்து தற்போது வழக்கொழிந்த புன்செய்ப் பயிர்களை புவியியலோடு சம்பந்தப்படுத்திப் பார்க்கவில்லை. இப்படிப்பட்ட ஆய்வுகள்கூட ஒருவகையில் சந்தைக் கலாச்சாரத்தோடு சம்பந்தப்பட்டவை.



படிப்பகம்

www.padippkam.com

இப்போது, இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகமானது விவசாயப் பல்கலைக் கழகங்களோடு சேர்ந்து பகுதிவாரியான ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தாலும், ஆராய்ச்சிக்கான ஒதுக்கீடு உற்பத்தியின் அடிப்படையிலேயே அமைவதால் வட மாநிலங்கள் அதிக ஒதுக்கீடு பெறுகின்றன.

தமிழகத்தில் நெற்பயிரை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஆய்வு இறுதியாக ஆலோசனை வழங்கியிருக்கிறது. அதிர்ச்சித் தரக்கூடியது அந்த ஆலோசனை. தமிழ்நாடு விவசாயத்திற்கேற்ற மாநிலமே அல்ல என்பதுதான் அது. நாளடைவில், தமிழ்நாடு விவசாயத்திலிருந்து தொழில் துறைக்கும், வியாபாரத்திற்கும் மாறிவிடும் என்ற ஆருடத்தையும், மாறவேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துள்ளது. அந்தப் போக்கு இப்போதே தெரிவதால் விழிப்பா யிருக்க வேண்டியது அவசியம்.

தமிழகத்தின் உணவு உற்பத்தி பிற மாநிலங்களை குறிப்பாக வட மாநிலங்களைச் சார்ந்ததாகி விடும். இந்திய உணவுக் கொள்கையும் இதற்கு உதவியாக உள்ளது.

இந்திய உணவுத் திட்டத்தின் குறிக்கோள்கள் :-

1. உணவு உற்பத்தியில் தன்னிறைவு.
2. விலைக் கட்டுப்பாடு.
3. நியாய விலைகளில் உணவு தானியங்களைப் பங்கீடு செய்தல்.

இந்தக் குறிக்கோள்கள் அதனளவில் சரியானவையே. ஆனால் இது அடித்தள மக்களின் உணவு முறை, மாநிலவாரியான தன்னிறைவு இவற்றை அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆகையால் பங்கீட்டு முறை, அரிசி, கோதுமை என்றளவில் நின்றுவிட்டது. நவீன உற்பத்தி முறை
யானது. உற்பத்திச் செலவை பலமடங்காக
அதிகரித்ததன் விளைவாக, விலை
கட்டுக்கடங்காமல் போனது. அதிக
விலையில், விவசாயிகளிடமிருந்து வாங்கி
கிடங்குகளில் சேமித்து, பக்குவப்படுத்தப்
பட்டு நியாயவிலைக் கடைகள் மூலம்
விநியோகிக்கப்பட்டது.

விவசாயிடமிருந்து கொள்முதல்
தொடங்கி வாடிக்கையாளர் கைக்குச் சேரும்
வரை ஊழல் மலிந்து, உணவுப் பொருள்
களின் தரம் குறைந்து, அரசின் கஜானாவைக்
காலி செய்யுமளவுக்கு, மான்யங்களை
விழுங்கியது பங்கீட்டுமுறை. பங்கீட்டு
முறையின் கீழ் வந்த அடித்தள மக்களைக்
காரணங்காட்டியும் விவசாயிகளைக்
காரணங்காட்டியும், தொடர்ந்து ரசாயன
உரம், பூச்சிக் கொல்லிகளை இறக்குமதி
செய்தது அரசு. ஆக மொத்தத்தில் விவசாய
உற்பத்தி பண்பாட்டு மதிப்புள்ள சில
பயிர்கள், பெருவிவசாயிகள், சில மாநிலங்
களுக்குப் பயனளித்ததே தவிர அடித்தள
மக்களுக்குப் பயனளிக்கவில்லை. இன்னமும்
இந்த நடப்பில் மாறுதல் இல்லை. உணவு
உற்பத்தியில் தன்னிறைவு எனப் பொத்தாம்
பொதுவில் மார்தட்டிக் கொள்கிறது இந்திய
அரசு.

சாகுபடியிலிருந்த நிலங்கள் தரிசாகிக்
கொண்டுவருவதும். ஊட்டச்சத்து மிக்க
தானிய வகைகள் உணவு உற்பத்தி வகைகள்
லிருந்து நீக்கப்பட்டதும் கிராமப்புறங்களின்
சிறு, குறு விவசாயிகள், வறுமைக்கோட்
டிற்குக் கீழ் தள்ளப்பட்டதும் ரேஷன்
அரிசியை நம்பி வாழும் ஏழைக் கூலிகள்
பழங்குடிகள் நிலையும் மிகவும் கவலை
யளிப்பதாக உள்ளது. இந்நிலையில்
அடித்தள மக்களின் வாழ்விற்கு ஆதாரமான
புன்செய்ப் பயிர்களுக்கு மான்யமும்
விலைபாதுகாப்பும் அளிப்பதற்கு அரசு
முன்வரவேண்டும்.

ஒடுக்கப்பட்டோர் இது குறித்து
அரசை நிர்ப்பந்திப்பார்களா?



படிப்பகம்

www.padippkam.com

# வரலாற்றுச் சிந்தனைகள்

- பேராசிரியர் பி.எஸ். பன்னீர் செல்வம்

கடந்த 2000 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 6ஆம் தேதி, தினமணி நாளிதழில், தேவேந்திரர்கள் தலித் அல்லர் என்ற தன் கடிதக் கட்டுரையில், திரு. குருசாமி சித்தன் அவர்கள், பின்வரும் புள்ளி விவரத்தை தருகிறார். அதாவது தமிழ்நாட்டின் அட்டவணைப் பிரிவு சாதிகளில் (Scheduled Castes), ஆதிதிராவிடர்கள்/பறையர்கள் 30% எனவும், தேவேந்திர குல வேளாளர்கள்/ பள்ளர்கள் 60% எனவும், அருந்ததியர்கள் 10% எனவும் குறிப்பிடுகின்றார். இந்தக் கணக்கீடு மிகமிகத் தவறான ஒன்றாகும். எவ்வாறு?

கடந்த 1961 ஆம் ஆண்டு, இந்தியா எங்கணும் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கீடு; 1971 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அதாவது, (Census of India: 1971 Series 19: Tamil Nadu - Part IV-B : Ethnographic Notes on Scheduled Castes of Tamil Nadu: Vol. 1-B: Introductory, P. vii) என்பதில் கீழ்க்காணும் செய்திகள் தரப்பட்டுள்ளன.

(அ) கடந்த 1961 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டில் உள்ள அட்டவணைச் சாதிகளின் மொத்த எண்ணிக்கை 35 ஆகும்.

(ஆ) தமிழ்நாட்டில் தாழ்த்தப் பட்டோர் மக்கள் தொகையில், இந்த 35 சாதிகள் ஒவ்வொன்றும் கொண்டுள்ள மக்கள் தொகை அளவு, விழுக்காடாக கீழே தரப்பட்டுள்ளது.

(1) ஆதிதிராவிடர் : 29.60, (2) பறையன் : 24.95, (3) பள்ளன் : 15.66, (4) சக்கிலியன் : 12.82, (5) குடும்பன் : 4.08, (6) சாம்பன் : 2.25, (7) அருந்ததியர் : 1.65, (8) குறவன், சித்தனார் : 1.29, (9) வள்ளுவன் : 1.03, (10) மாதரி : 0.99, (11) தோட்டி : 0.68, (12) பகடி : 0.32, (13) ஆதி ஆந்திரா : 0.30, (14) தேவேந்திர குலத்தான் : 0.26, (15) ஆதி கர்நாடகா : 0.21, (16) பன்னாடி : 0.17, (17) திருவள்ளுவன் : 0.71, (18) புதிரை வண்ணான் : 0.16, (19) கோலியன் : 0.09, (20) வெட்டியான் : 0.06, (21) வண்ணான் : 0.06, (22) மாதிகா : 0.05, (23) மலா : 0.03, (24) தோம் (Dom) (அ) தொம்பரானபதி (அ) பனோ : 0.03, (25) செருமான் : 0.03, (26) ஹோலியா : 0.03, (27) கடையன் : 0.03, (28) பரவன் 0.03, (29) தாண்டன் : 0.02, (30) புலையன் (அ) செருமன் : 0.01, (31) பன்னியாண்டி : 0.01, (32) அய்யனார் : 0.01, (33) வேட்டன் : 0.01, (34) பரதன் : 0.01, (35) ஊரளி : 0.01 (36) இனம் பிரித்திட இயலாத தனிப்பட்ட சாதிகள் : 3.39, (37) மிக மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள மற்ற சாதிகள் : 0.03, மொத்தம் : 100%.

இந்தப் பிரிவினையில், எண் 3-ல் உள்ள பள்ளர் : 15.66%, எண் 6-ல் உள்ள குடும்பர் : 4%, எண் 14-ல் உள்ள தேவேந்திர குலத்தான்: 0.26%. ஆக, இந்த 3 சாதிகளின் மொத்த விழுக்காடே 21% தான். கடந்த 1961-ல் 21% தான் என்றால், கி.பி. 2001-ல் 1.0% கூடலாம்; அல்லது குறையலாம்.

அதிலும், சிறு குடும்ப நெறியும் (Small Family Norm) குடும்பக் கட்டுப்பாடும் (Family Planning) தலைசிறந்து விளங்கும் தமிழ் நாட்டில், தாழ்த்தப்பட்டோரில், 1961-ல் 21% ஆக இருந்த பள்ளர் பிரிவு 2000-த்தில் திடீரென 60% ஆக உயர்ந்தது எவ்வாறு? அதாவது, பள்ளர், குடும்பன், தேவேந்திர குலத்தார் மட்டும் இந்த 40 ஆண்டுகளில் 300% மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கொண்டுள்ளனரா?

தற்போது, ஆதிதிராவிடர் என்ற பிரிவிற்குள் வரும் சாதிகளின் மக்கள் தொகை விழுக்காட்டை நாம் காணலாம். ஆதிதிராவிடர் : 29.6, பறையன் 24.95,



படிப்பகம்

www.padippkam.com

சாம்பான் : 2.25, வள்ளுவன் : 1.03, திருவள்ளுவன் : 0.17, கோலியன் : 0.09, வெட்டியான்: 0.06, புலையன் (அ) செருமான் : 0.01, ஆக, இந்த சாதிகளின் மொத்தம், தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகையில் : 58.16% ஆகும்.

மேலும், தமிழ்நாட்டின் கிறிஸ்துவர்களின் தொகையான ஏறத்தாழ 60 இலட்சத்தில், சுமார் 75% மக்கள் தலித் கிறிஸ்துவர்களே. இதில் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை மூன்றில், இரண்டு மடங்காகும். அதாவது 45 இலட்சமாகும். இதிலும் கூட ஆதிதிராவிடர் 25 இலட்சம் இருப்பர். ஆக, ஆதிதிராவிடர்கள் மட்டும், தமிழ்நாட்டில் 120 இலட்சம் இருப்பர்.

இங்கு, மற்றொரு விளக்கத்தினையும் நாம் காண வேண்டும். தமிழ்த்தாத்தா உ.வெ. சாமிநாத அய்யர் அவர்களால் முன்னுரை எழுதப்பட்டு, இ.மா. கோபாலகிருஷ்ண கோன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் பறையர்கள் 18 வகையினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 18 வகைப் பறையருள் முதலில் வருபவர் திருவள்ளுவர் ஆவர். மற்றொரு பிரிவினர் சாம்பான். சாம்பான் என்பது, சிவபெருமானையும் குறிக்கும் ஒரு சொல்லாகும்.

மற்றொரு பிரிவினரான கோலியப் பறையர் என்போர், நெசவாளர்கள். மனித உரிமைக் கட்சியின் தலைவர் திரு. எல். இளையபெருமாள் அவர்கள், தன்னைப் பற்றி எழுதும்போது, தான் பிறந்த தெருவிற்கு கோலியர் தெரு என்ற பெயர் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். கோலியர்கள் என்றால் நாகர்களில் ஒரு பிரிவினர் என வரலாற்றறிஞர் டி.டி. கோஸாம்பி (1992 : The Culture and Civilization of Ancient India in Historical Outline) கூறுகிறார்.

நாகர்களும் (Nagar) ஆதிதிராவிடர்களும் (பறையர்களும்) ஓரினத்தவரே என்ற அண்ணல் அம்பேத்கரின் கருத்தும், இங்கு உற்று நோக்கத்தக்கதே.

இங்கு, கோலியர் பற்றிய மற்றொரு கருத்தினையும் நாம் காணவேண்டும். கவிஞர் தமிழ்மறையானை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் புத்தர் ஒளி செய்தி மடலில் (Buddha's Light News Letter, July 2000, P.1) ஒரு செய்தி நமக்குக் கிடைக்கிறது.

"தமிழர்-சிங்களர்களின் உரிமைப் பங்கீட்டுப் போர்போலவே, 2525 ஆண்டுகளுக்கு முன்னர், ரோகிணி ஆற்று நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் பெரும்போர் மூளவிருந்தது. கோலியர்களுக்கு எதிராக சாக்கியர்கள் போர் தொடுக்க வேண்டும் என சேனாதிபதி சாக்கிய சங்கத்தில் தெரிவித்தபோது சித்தார்த்தர் அதை எதிர்த்தார்.

"எந்த பிரச்சினையையும் போர் தீர்ப்பதில்லை. போர் தொடுப்பது, நம் நோக்கத்திற்கு எவ்வகையிலும் உதவப் போவதில்லை. அது மற்றொரு போருக்குதான் விதை தெளிக்கும்."

(1-14-264, பக். எண் 25 - புத்தரும் அவர் தம்மமும் - B.R. அம்பேத்கர்)

"பகைமையால் பகைமை ஒழியாதென்றறிவதே தர்மம் என்று நான் புரிந்து வைத்திருக்கிறேன். அன்பால் மட்டுமே அதை வெல்ல முடியும்"

(1-14-20-273, பக். எண் 26 - புத்தரும் அவர் தம்மமும் - B.R. அம்பேத்கர்)

"போரைத் தவிர்ப்பதற்காக - இரு நாட்டு மக்களும் போரிட்டு வீரர்களும் அப்பாவி மக்களும் அழிவதை தவிர்ப்பதற்காக சித்தார்த்தர் சாக்கிய சங்கத்தை விட்டும் தன் அரசு உரிமையை விட்டும் தன் நாட்டையே விட்டும் வெளியேறி அமைதியை ஏற்படுத்தினார்."

தாழ்த்தப்பட்டோரின் மற்றொரு



படிப்பகம்

www.padippkam.com

பிரிவினர் செருமான் என்பவர். சேரன்மான் என்பதின் திரிபே செருமான் என ஆராய்ச்சியாளர் கூறுவர். மேலும், சேலம் மாவட்டத்தில், சங்கறுக்கும் பறையர்கள் என்ற ஒரு பிரிவினரை இன்றும் நாம் காணலாம். இவர்களின் மூதாதையர்களின் தொழில், கடல் சங்கினை அறுத்து வளையல் செய்வதாகும். இவர்கள் பாடிக் கொள்ளலாம் :

"சங்கறுப்பதெங்கள் குலம்!
சங்கரனார்க் கேது குலம்... சங்கை
அரிந்துண்டு வாழ்வோம், அரனே உன்போல்
இரந்துண்டு வாழ்வதில்லை..."

என்று நக்கீரர் பிராமணராகவோ, புலால் உண்ணாத சைவராகவோ இருந்திருந்தால், சங்கை அரிந்து உண்டிருப்பாரா?

அடுத்து, தாழ்த்தப்பட்டோரைக் குறித்த தீண்டாதோர், ஹரிஜன் போன்ற சொற்களைப் பற்றி ஆராயும் மார்க் கெலண்ட்டர் (Marc Galanter, 1984 : Competing Equalities, P. 13n) கூறுகிறார் "தங்களின் மீது காலங்காலமாக சுமத்தப்பட்ட இழிவுகளை ஒழித்திடப் போராடுகின்ற தாழ்த்தப்பட்ட இனப்போராளிகள், தங்களுக்குத் தாங்களே விரும்பிச் சூட்டிக்கொண்ட அடையாளமே "தலித்" (Dalit) என்பது, என்று. ●

# மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பாதிக்கப்படும் பட்டியல் சாதியினர்

2001 ஆம் ஆண்டு 'சென்சஸ்' பணியை அரசு முடித்துவிட்டது. முதற்கட்ட அறிக்கைகள் வந்து கொண்டுள்ளன. சாதி வாரிக் கணக்கெடுப்பு வேண்டுமென பிற்படுத்தப்பட்ட சாதியினர் கோரினர். அது இம் முறையும் ஏற்கப்படவில்லை. பட்டியல் சாதியினைப் பொருத்த மட்டில் ஒரு மிகப் பெரிய அநீதி நடந்துள்ளது. பட்டியல் சாதியைச் சேர்ந்த ஒருவர் வேறு மாநிலத்தில் வாழ்ந்தால் அந்த மாநிலத்திலும் அது பட்டியல் சாதியாக அறிவிக்கப்பட்டிருந்தால் மட்டுமே அவர் பட்டியல் சாதியாகக் கருதப்படுவாராம். எடுத்துக்காட்டாக நமது குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்கள் கேரள மாநிலத்துப் பட்டியல் சாதிகளில் ஒன்றான 'பரவர்' வகுப்பைச் சேர்ந்தவர். குடியரசுத் தலைவர் என்கிற வகையில் அவர் இப்போது புது டெல்லியில் வாழ்கிறார். புது டெல்லியில் பரவர் சாதி பட்டியல் சாதியாக அறிவிக்கப் படவில்லை. அப்போது பட்டியல் சாதி என்கிற உரிமையை அவருக்கு வழங்குவதா இல்லையா? விதிப்படி முடியாது.

இது மட்டுமல்ல பட்டியலில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களைப் பொருத்த மட்டில் (SC) அவர்கள் இந்து, பவுத்தம் அல்லது சீக்கிய மதம் ஆகிய ஏதாவது ஒரு மதம் என்று சொன்னால்தான் அவர்கள் பட்டியல் சாதியாகக் கருதப்படுவார்கள். கிறிஸ்தவர் களுக்கும், இசுலாமியருக்கும் அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கு இசுலாமிய ராகவும் கிறிஸ்தவராகவும் வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

அதே போல இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம், சீக்கியம், பவுத்தம், சமணம் ஆகிய மதங்களில் ஏதாவது ஒன்றில் மட்டுமே நீங்கள் பதிவு செய்துகொள்ள லாம். பிற மதங்கள் உதாரணமாக சரோஸ்ட்ரிய மதம் என்று நீங்கள் பதிவு செய்து கொள்ள இயலாது.

இத்தகைய குறைபாடுகளுடன் கணிக்கப்படுகிற சென்சஸ் கணிப்புகள் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோரின் சதவித அறிவிப்புகள் எத்தனைதூரம் சரியாக இருக்க முடியும்? ●



படிப்பகம்

www.padippkam.com

நடந்தவை, நடப்பவை...

# புத்தர் சிலைகளும் இந்துத்துவக் கரிசனமும்: இதுதாண்டா முதலைக் கண்ணீர்

அ. மார்க்ஸ்

இந்துத்துவ சக்திகள் திருக்குரான் பிரதிகளை எரியூட்டியுள்ளனர். கான்பூர் முதலான இடங்களில் பதட்டங்களும் கலவரங்களும் ஏற்பட்டுள்ளன. சர்ஜூ நதிக்கரையின் பிரும்மாண்டமான புத்தர் சிலைகளைப் பீரங்கி வைத்துப் பிளந்த தற்குக் கண்டனமாக இதைச் செய்துள்ள னராம்.

புத்தர் சிலைகளைத் தகர்த்த கொடுஞ் செயலைச் செய்தவர்கள் தாலிபான்கள். இதற்காகக் குரானை எரிப்பானேன். யாழ் நூலகம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்டபோது நாம் தம்மபதத்தைக் கொளுத்தினோமா? சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மார்க்ஸ் - லெனின் - ஸ்டாலின் சிலைகள் உடைக்கப் பட்டபோது பைபிளை யாராவது கொளுத்தி னார்களா? பாபர் மசூதியை இடித்தபோது பகவத்கீதை எரிக்கப்பட்டதா?

தாலிபான்கள் செய்தவற்றை வைத்துக் கொண்டு முஸ்லிம்கள் எல்லோரையுமே பகைவர்களாக, சகிப்புத்தன்மையற்றவர் களாக, காட்டுமிராண்டிகளாகச் சித்தரிக்க இந்துத்துவ சக்திகள் முயலுகின்றன. நமது தொடர்புச் சாதனங்கள் இதற்குத் தூபம் போடுகின்றன. மார்க்ஸ் - லெனின் சிலைகள் உடைக்கப்பட்டபோது அட்டைப் படங்கள் வெளியிட்டு மகிழ்ச்சி காட்டியவை இவை என்பதை நாம் மறந்துவிட முடியாது. மார்க்ஸ் - லெனின் சிலைகள் சரித்திரச் சின்னங்களில்லையா? ஒரு வரலாற்றைப் பிரதிபலிக்கவில்லையா? அப்போது குதூகலித்து மகிழ்ந்தவர்களெல்லாம் இப்போது கண்ணியவான்கள் ஆகி விட்டனர். கலாச்சாரச் சின்னங்களின் மீது கரிசனம் வந்துவிட்டது.

உண்மையில் பவுத்த சமணச் சின்னங் களை மிகப் பெரிய அளவில் அழிவுக் குள்ளாக்கியவர்கள் யார்? இந்து மதத்தின் பெயரால் செய்யப்பட்ட அளவிற்கு இந்தக் கொடுமை வேறு யாராலும் செய்யப்பட் தில்லை. தஞ்சைப் பெரிய கோவிலிலிருந்து காஞ்சி காமாட்சியம்மன் கோவில் வ பவுத்த சமணக் கோயில்களாக இருந்தவை தான். ஆராய்ச்சியாளர் சுரேஷ் பிள்ளைய லிருந்து மயிலை சீனி. வேங்கடசாமி வ இதை நிறுவியுள்ளனர். இப்போது அய்யனார் கோவில்களாகவும் அம்மன் கோவில்களாகவுமுள்ள பல சின்னங்க பவுத்த சமணக் கோவில்கள் தான். இதெ லாம் ஏதோ ஆயிரம் ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தவையல்ல. நேற்று வரை இந்த செயலை இந்துமதம் செய்து வந்துள்ளது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகி மயிலை. சீனி. வேங்கடசாமியின் 'சமணமு தமிழும்', 'பவுத்தமும் தமிழும்' நூற்களை படித்துப் பாருங்கள். காஞ்சிபுரத்து கோயில்களில் தான் கண்ணால் கண்ட பவுத்த சிலைகள் உடைக்கப்பட்டு இ போது அங்கே இந்துக் கடவுளரின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதை அவர் கண் கலங்க சொல்லியிருப்பார். ஒரு ஐம் தாண்டுக்கு முன்பு வரை இப்படிப் புத்த சிலைகளை உடைத்துக் கொண்டிருந் வர்கள் இப்போது புத்தருக்காகக் கண்ணீ சிந்துகின்றனர். குரானை எரிக்கின்றனர்.

தாலிபான் புத்தர் சிலைகளை உடை ததை உலகமே கண்டித்துள்ளது. ஆப்கானி தானத்து மக்கள் கண்டித்துள்ளன ஆப்கானின் 'குடியரசுத் தலைவராக' சர் தேச அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட் ரப்பானி கண்டித்துள்ளார். 'ஆப்கான் பெண்களின் புரட்சிகரக் கூட்டமைப் (RAWA) கண்டித்துள்ளது. மார்க்க அறிஞ அஸையா அல் ஹிப்ரி, மிக விரிவான ஆதாரங்களுடன், இக் கொடுஞ் செய திருக்குரானின் நெறிமுறைகளுக்கு எதிரானது என்பதை நிறுவியுள்ளார். இந்தியாவி குள்ளும் பல்வேறு இசுலாமிய அமைப்புகள் தாலிபானின் செயலுக்கு எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். ஃப்தேபூர் மசூதியின்



படிப்பகம்

www.padippkam.com

இமாம் முக்காரம் அகமது தாலிபானைக் கண்டித்துள்ளதோடு அய்.நா. தலையிட வேண்டும் எனவும் கோரியுள்ளார். சையத் சகாபுதீன் போன்ற தலைவர்களும் அஸ்கர் அலி என்ஜினியர் போன்ற அறிஞர்களும் தமது எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர். பல்வேறு மதம்சாரா அமைப்புகளும் ஆனந்த் பட்டவர்த்தன் போன்ற சிந்தனை யாளர்களும் கூடக் குரலெழுப்பியுள்ளனர்.

இத்தகைய எதிர்ப்புக் குரலை ஒலிப்பதற்கு எல்லாவிதமான தகுதியும் நியாயமும் படைத்தவர்கள் இவர்கள். இவர்களோடு சேர்ந்துகொண்டு விசுவ இந்து பரிசத்தும், பஜ்ரங் தள்ளும், வாஜ்பாயியும் குரல் எழுப்பும் முரண் நகைதான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. பாபர் மசூதியை இடித்ததையும், அங்கு ராமர் கோவிலைக் கட்டி முடிக்க எத்தனிப்பதையும் தேசியப் பேருணர்வு என்று சொல்லி மகிழ்ந்த நா உலருமுன் புத்தர் சிலை உடைப்பை 'வெட்கங்கெட்ட செயல்' என்றுள்ளார் வாஜ்பாயி. உலகத்தையே போர்க்களமாக்கத் தாலிபான்கள் முயற்சிப்பதாகவும் ரொம்பக் கவலைப்பட்டுள்ளார்.

பாபர் மசூதி தவிர வேறு இரண்டாயிரம் மசூதிகளை உடைக்க வேண்டும் எனத் திட்டம் வைத்துள்ள பரிசத், தாலிபானைத் தாக்கியுள்ளதை 'இந்து' நாளிதழாலேயே கூடச் சகிக்க முடியவில்லை. முரண்பாட்டைச் சுட்டிக் காட்டியுள்ளது. கஜினியில் உள்ள பிருத்வி ராஜ் சவுகானின் சமாதியில் மட்டும் தாலிபான்கள் கை வைக்கட்டும், ஆஜ்மீரை என்ன பாடு படுத்துகிறோம் பாருங்கள் என்றும் பரிசத் மிரட்டியுள்ளது. என்ன செய்வீர்கள் எனப் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, 'அதை இப்போது சொல்ல மாட்டோம்' என்று கூறியுள்ளார் பரிசத்தின் மூத்த தலைவர் கிரிராஜ் கிஷோர்.

இது குறித்துத் தாலிபான்கள் என்ன சொல்கின்றனர் என்பதையும் நமது 'மீடியா'க்கள் இருட்டடிப்புச் செய்கின்றன. அரபு நாடுகளின் ஒன்றியத்திலிருந்தும் (UAE) கட்டாரில் இருந்தும் இசுலாமிய அறிஞர்கள் வந்து பேசியதை அடுத்து சிலை உடைப்பை நிறுத்தியுள்ளனர் தாலிபான்கள். ஆப்கானில் உள்ள பழம் புனிதச் சின்னங்களில் நாங்கள் உடைத்தவை ஒரு சதத்திற்கும் குறைவு, ரொம்பத்தான் சத்தம் போடுகிறார்கள் என்கிறார் தாலிபான்களின் சகல அதிகாரங்களும் மிக்க தலைவர் முல்லா முகம்மது ஓமர். தாலிபான் அரசின் வெளியுறவு அமைச்சர் முத்தவக்கீலின் பேட்டியிலிருந்து.

**கேள்வி:** இந்தியா, கிரேக்கம் போன்ற கலாச்சாரங்களின் பிற கலைச் சின்னங்களையெல்லாம் என்ன செய்வதாக உத்தேசம்?

**முத்த வக்கீல்:** இந்தக் கலாச்சாரம் அல்லது அந்தக் கலாச்சாரத்தின் கலைச் சின்னம் என்பதல்ல பிரச்சினை. புத்தர் சிலைகளைத்தான் உடைக்கிறோம், மற்ற சிலைகளை விட்டுவிடுகிறோம் என்றும் நாங்கள் சொல்லவில்லை. எல்லாம் வல்ல இறைவன் மட்டுமே வணங்குவதற்குத் தகுதியானவர் என்கிற அடிப்படையில் மனிதனால் நிறுவப்பட்ட சிலைகளை அழிப்பது என்கிற 'ஃபட்வா'வின் அடிப் படையில்தான் புத்தர் சிலைகளை உடைத்தோம். எந்த ஒரு குறிப்பிட்ட மதம், நாடு, பண்பாடு என்றெல்லாம் நாங்கள் குறி வைத்துச் செயல்படவில்லை. மாதா கோவில், இந்து கோயில், குருத்வாரா போன்ற வழிபடுதலங்கள் எதையும் நாங்கள் அழிக்கவில்லை. இங்கே வாழக்கூடிய இந்துக்களும் சீக்கியர்களும் தமது மதத்தைப் பின்பற்ற நாங்கள் தடை விதிக்கவும் இல்லை.

**கே:** ஆப்கானிஸ்தானிலுள்ள மதச் சிறுபான்மையினர் குறித்து தாலிபானின் நிலைபாடு என்ன?

**மூத்த:** முன்னைப் போலவே இப்போதும் மதச் சிறுபான்மையினருக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்துக்களையும் சீக்கியர்களையும் கேட்டுப் பாருங்கள். தாலிபான்களின் ஆட்சியில்



படிப்பகம்

www.padippkam.com

அவர்கள் எவ்வளவு பாதுகாப்பாக உள்ளனர் என்பதைச் சொல்வார்கள். 'சரியத்' சட்டத்திலுள்ள எல்லா உரிமைகளையும் நாங்கள் சிறுபான்மையினருக்கு வழங்கி யுள்ளோம்.

கே: புத்தர் சிலை மீதான தாலிபான் களின் இந்த அணுகல்முறையை மற்ற நாடுகள் அங்குள்ள மசூதிகள் மீது பிரயோகித்தால் என்ன செய்வீர்கள்?

முத்த: மற்ற மதங்களில் வழிபடு தலங்கள் எதையும் நாங்கள் தாக்கவில்லை என்பதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளுங்கள். இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அந்த இடத்தில் ஒரு கோயிலை நிறுவுவதற்கு இந்து அடிப்படை வாதிகள் இப்போது திட்டமிட்டு வரு கின்றனர். நாங்கள் அப்படி எதையும் செய்யவில்லை. சிலைகளை வைத்திருப்பதும், வணங்குவதும் இசுலாமிய வழக்கமல்ல. இறையாண்மை மிக்க முஸ்லிம் நாடு என்கிற வகையில் எங்கள் சட்டப்படி முடிக்க எங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. எனவே மசூதிகளையோ தர்க்காக்களையோ அழிப்பதற்கு யாருக்கும் எந்த நியாயங்களும் இல்லை.

ஈரான் போன்ற நாடுகள் சிலைகளைக் கேட்கிறார்களே, கொடுத்துவிட வேண்டியது தானே என முல்லா முகமது ஓமரிடம் கேட்டபோது, தாம் வைத்துக் கொள்ள விரும்பாத ஒன்றைப் பிறருக்கு வழங்குவது இசுலாமிய வழக்கமல்ல என்றும் அவர் சொல்லியுள்ளார்.

இந்தக் கருத்துக்கள் எல்லாம் சரியானவை, நியாயமானவை என்று நாம் சொல்ல வரவில்லை. இதற்கு எதிரானக் கருத்துக்களையும் இசுலாமிய அறிஞர்களே சொல்லியுள்ளனர். ஆனால் இந்தக் குரல்கள் எல்லாவற்றையும் இருட்டடிப்பு செய்து விட்டு முஸ்லிம்கள் எல்லோரையும் சகிப்புத் தன்மையற்றவர்களாகச் சித்திரிப்பதின் பின்னாலுள்ள அரசியலை நாம் கவனத்தில் இருத்த வேண்டும்.

இசுலாம் எல்லாக் காலங்களிலும் நெகிழ்ச்சியற்ற மதமாக இருந்ததில்லை சூழலுக்கும், இடத்திற்கும் தகுந்தாற் போல பல மாற்றங்களை அது தனக்குள் அனுமதித்து வந்துள்ளது என்பதற்கு 'ஹதீஸ்'கள் சாட்சியமாக விளங்குகின்றன ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் நீட்ஷே சொன்னது போல கிறிஸ்தவம் அடிமைகளின் மதம். அடிமை மதிப்பீடு களைப் போற்றிய மதம். 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு' என்பது போன்ற அடிமை அறங்களையே (Slave morality) அதில் காண முடியும். பல்வேறு போரிடும் இனக் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரு சமூகமாக ஒரு அரசாக உருவமைத்த இசுலாமிய மதத்தில் அடிமை அறங்களைத் தேடிப் பயனில்லை. மாறாக சமத்துவச் சிந்தனை களை உயர்த்திப் பிடித்து ஏற்றத் தாழ்வு களை மறுக்கும் அறங்களை உள்ளடக்கிய தாக இசுலாம் அமைந்துள்ளது. இந்த உலகத் துன்பங்களுக்கு மறு உலகில் விடிவு கிடைக்கும் எனச் சொன்ன மதம் கிறிஸ்தவம். இந்த உலகின் துன்பங்களெல்லாம் முற்பிறவியின் கரும பலன் எனக் கைவிரித்த மதம் இந்து மதம். இந்த உலகின் அநீதிகளுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் இந்த உலகிலேயே விடிவு சொன்ன மதம் இது ஒன்றுதான். அடிமை அறங்களைப் போதித்த கிறிஸ்தவம் பின்னாளில் நாடுகளையே அடிமை கொண்டது. ஆனால் இசுலாம், அது பெரிய அளவில் எழுச்சியுற்றிருந்த நாட்களில் கூட பிற நாடுகளைக் காலனியாக்க முயலவில்லை என்பதையும், இந்தியாவில் சாதியை வென்ற ஒரே மதமாக அது மட்டுமே திகழ்வதையும் நாம் மறந்துவிடலாகாது. இந்த வரலாறு களைப் புறக்கணித்துவிட்டு இசுலாமைச் சகிப்புத் தன்மையற்ற மதமாகப் படம் காட்டுவது அறியாமை மட்டுமல்ல அநீதியுங்கூட. யாரிடம் அவர்கள் சகிப்புத் தன்மையின்றி நடந்து கொண்டார்கள் என்பது கேள்வி. முஸ்லிமாய்ப் பிறந்தவர்கள் செய்வதற்கெல்லாம் இசுலாமைக் குற்றம் சாட்டுவது அரசியல். ●



படிப்பகம்

www.padippkam.com

# தி.க.சி.க்கு விருது : சர்ச்சையை உருவாக்கும் இலக்கிய 'அத்தாரிட்டி'கள்

அ. மார்க்ஸ்

தி.க.சிக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். எள்ளளவும் தயக்கமின்றி எல்லோரையும் பாராட்டி மகிழ்ந்ததற்குக் கடைசி காலத்தில் நல்ல பாடம். ஜெயமோகனும் 'காலச்சுவடு'ம் தி.க.சிக்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளதைக் கடுமையாய்ச் சாடியுள்ளனர். புதுமைப்பித்தன், க.நா.சு., சுந்தரராமசாமி போன்றோரின் எழுத்துக் களில் சாதி வீச்சம் வீசுகிறது என்று சொன்னால் தாண்டிக் குதிப்பவர்கள் பெரியவர்கள் வல்லிக்கண்ணன், தி.க.சி. முதலியோரின் சாதிகளை எல்லாம் இழுத்துப் பேசியுள்ளனர்; சாதி உணர்வுடன் செயல்பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டி யுள்ளனர். காலச்சுவடு வழக்கம் போல தனது கருத்துக்களைத் தான் பேசுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் பிறர் வாய்களிலும் திணித்திருக்கிறது.

சாகித்ய அகாதமி பரிசுகள் மீதோ அரசு விருதுகள் மீதோ நமக்கு எள்ளளவும் மதிப்பில்லை. இதன் பின்னணியில் செயல்படுகிற அரசியல்களையும் நாம் அறிவோம். சில நாட்களுக்கு முன் ரொம்பவும் சார்பாகச் செயல்படுகிற சா.கந்தசாமியிடம் சிறுகதைத் தொகுப்புப் பணியை அகாதமி தொடர்ந்து வழங்கி வருவதைக் கண்டித்து சு. சமுத்திரம் தொடங்கி விக்கிரமன், இராசேந்திர சோழன் ஈறாகப் பலரும் கண்டித்த போது கண்டுகொள்ளாமல் மவுனம் காத்தவர்கள் இப்போது தி.க.சி.க்கு எதிராகக் களம் இறங்கியுள்ளனர்.

சாகித்ய அகாதமி பரிசுகள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட நூலின் பெயரால் வழங்கப்பட்டாலும் எழுதியவரின் ஒட்டு மொத்தப் பணிகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு வழங்கப்பட்டதாகவே இதுவரை பார்க்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் தி.க.சி. விசயத்தில் மட்டும் அந்தக் குறிப்பான நூலைக் 'கைமா' பண்ணத் தொடங்கி விட்டனர் நமது இலக்கிய விற்பன்னர்கள். தி.க.சி.யின் இலக்கியப் பணிகளில் அவர் 'தாமரை' இதழாசிரியராக இருந்து செய்தவை குறிப்பிடத் தக்கவை. பல இளம் எழுத்தாளர்களை, நாட்டுப்புற இலக்கியங் களை, ஈழத் தமிழ் எழுத்தாளர்களை 'தாமரை' மூலம் அடையாளம் காட்டியவர் தி.க.சி. பின்னோக்கிச் சென்ற நூற்றாண்டைப் பார்க்கும் போது இந்த வகையில் இடது சாரிகளின் பங்கு, 'தாமரை'யின் பங்கு மிகவும் குறிப்பிடத் தக்கவையாக உள்ளது. சமூகச் சிந்தனைகளைத் தாங்கிய எழுத்துக்களையே 'அரசியல்' என்று ஒதுக்க முனைந்த போக்கைத் தடுத்து நிறுத்தியவர்கள் இவர்கள். தலித் இலக்கியத்திற்கான முன்னோடிப் பணியைச் செய்தவர்களும் இவர்களே.

இளம் எழுத்தாளர்களை, மிகச் சிறிய இலக்கிய இதழ்களை ஊக்குவித்ததையும் பெரும் பாவமாகச் சொல்கின்றனர். சாம, தான, தண்ட, பேதங்களை எல்லாம் பயன் படுத்தித் தம்மையும், தமது வாரிசுகளையும் மகா எழுத்தாளர்களாக முன் வைப்பதற்கு இவர்கள் மேற்கொள்கிற முயற்சிகளை அறியாதவர்களல்ல நாம். இத்தகைய வாய்ப்பு வசதியற்ற ஒரு எளிய கிராமப்புற இளைஞர் எப்படியோ முண்டி முனைந்துத் தனது எழுத்துக்களை அச்சில் கொண்டு வரும்போது அதைப் பாராட்டுவது, ஊக்குவிப்பது, எதற்கும் உதவாது எனத் தூக்கி எறியாமல் மெலிதான விமர்சனங் களை வைப்பது, பிரசுர வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது எப்படித் தவறாக



படிப்பகம்

www.padippkam.com

முடியும்? எழுதுகிற ஒருவருக்கு இத்தகைய ஊக்குவிப்புகள் எத்தனை அவசியம் தெரியுமா? தகுதி, தரம் என்கிற பெயரில் தடாலடியாக அடித்து அவரை மறுபடியும் பேனா எடுப்பதற்கே கூசும்படியாகச் செய்துவிடல் சரியா?

தி.க.சி. போன்றோரின் எழுத்துகள் குறித்து நமக்கு எத்தகைய விமர்சனங்கள் இருந்தாலும் அவரது மார்க்சியப் பார்வையில் நமக்கு மாறுபாடுகள் இருந்த போதிலும் அவர் இளைஞர்களை ஊக்குவித்ததைப் பெரும் பாவமாகச் சுட்டிக் காட்டுவதை நாம் ஏற்க முடியாது.

பரிசு வழங்குவதற்காக வல்லிக்கண்ணன் மேற்கொண்ட முயற்சிகளைக் காலச் சுவடும் ஜெயமோகனும் காய்ந்துள்ளனர். எந்த அளவிற்கு அதில் உண்மைகள் உள்ளன என்பது ஒருபுறம் இருக்கட்டும். தமது புத்தகங்களுக்குப் பத்திரிகைகளில் மதிப்புரை பெறுவதற்காக இவர்கள் செய்கிற ஏற்பாடுகள், பரிந்துரைகள், முகவர்கள் மூலமாகச் செய்யும் தாஜாக்கள் நாம் அறியாதவையல்ல. தங்களின் ரத்தத்திலேயே மார்க்சியத்தின் மீதும் இடதுசாரிக் கருத்துக்கள் மீதும் காழ்ப்புடைய இந்தச் சனாதனிகள் தி.க.சி.க்கு வழங்கப்பட்டுள்ள விருதைத் தகுதி என்கிற அடிப்படையில் சாட முயற்சிப்பதற்கு நாம் துணை போகலாகாது. அகாதமி போன்ற அமைப்புகளில் எப்போதாவது இடதுசாரிக் கருத்துடையவர்கள் இடம்பெற நேர்ந்தால் அதைக் கொச்சைப்படுத்துகிற முயற்சியையும் நாம் அனுமதிக்கலாகாது.

இந்துத்துவ முகவர்களை அரசு பொறுப்புகளில் செருகுவதற்கும் அதன் மூலம் இந்துத்துவக் கருத்துக்களைப் புகுத்துவதற்கும் பிரச்சாரம் செய்வதற்கும் கொஞ்சங்கூட வெட்கப்படாத வாஜ்பாய் அரசு, திரைப் படங்களுக்கான தேசிய விருதுகளை வழங்குவதில் அம்பலப்பட்டுப் போயுள்ளது. குழு உறுப்பினர்களான இயக்குனர் பிரதீப் கிருஷ்ணன், ஒளிப் பதிவாளர் சசி ஆனந்த், நடனக் கலைஞர் மதுமித்ரா ஆகியோர் இதனைக் கண்டித்துள்ளனர், பதவி விலகியுள்ளனர். சௌமித்ர சட்டர்ஜியும் கவுதம் கோஷும் தமக்கு வழங்கப்பட்டுள்ள விருதுகளை ஏற்க மறுத்துள்ளனர். வைஜயந்திமாலா, தாருண் விஜய், நிவேதிதா, பார்வதி இந்துசேகர் முதலான வெளிப்படையான பா.ஜ.க. ஆட்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆர்.எஸ்.எஸ். காரர்கள் குழுவில் நியமிக்கப் பட்டுள்ளனர். செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ்க்குப் பெல்லாரி தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்த தற்காக சிறந்த நடிகைப் பரிசை ரவீணா டாண்டனுக்கு வழங்கியுள்ளது. சிறந்த நடிகர் அனில் கபூராம். 'பாண்டவா' என்கிற படம் இந்துத்துவக் கருத்துக்கு ஏற்புடையதாக இருந்ததாலேயே அதற்குப் பரிசு வழங்கப் பட்டுள்ளது என்கிறார் திருத்திமான் சட்டர்ஜி.

பரிசு வழங்கு முயற்சிகளில் இந்துத்துவ சக்திகளின் இந்தத் தலையீட்டைக் கண்டிக்க ஜெயமோகன், காலச்சுவடு, வெங்கட்சாமி நாதன் ஆகியோர் முன் வருவார்களா? இதற்காக ஒரு கையெழுத்து இயக்கம் நடத்தினால் இவர்கள் கையெழுத்திடுவார் களா? தி.க.சி.க்குப் பரிசளிக்கப்பட்டுள்ள தைக் கண்டிக்கும் இவர்கள் இந்துத்துவ அரசைக் கண்டிப்பதில் முனைப்புக் காட்டுவார்களா, இல்லை தமது நூற்களை விற்றுக் கொடுக்கிற 'விஜய பாரத'த்துக்கு விசுவாசம் காட்டுகிறார்களா என்று பார்ப்போம்.



படிப்பகம்

www.padippkam.com

# மார்ச் மாத மாமிகள்

தலித் சுப்பையா

அகிலஉலக மகளிர்தினக் கூட்டமாம்-இதில்
ஆதிதிராவிடப் பெண்ணுக்கென்ன நாட்டமாம்
மைதானத்தை நிரப்புவது சேரிப்பெண்டுக-ஜாதி
பெண்டுகளின் சமுகசேவை விவரம்கேளுங்க.
குடிசைக்குள்ளே உரிமையோடு செல்லுவார்
கூழுக்கஞ்சி கேட்டுவாங்கி உண்ணுவார்
தொட்டுப்பேசி சங்கம்கட்டச் சொல்லுவார்-நாலு
துட்டுச்சேர்ந்தா இடத்தைமாற்றிக் கொள்ளுவார்
விழிப்புணர்வு நாடகங்கள் நடத்துவார்
விதவிதமா பாட்டுப்பாடி அசத்துவார்
சவால்விட்டு சாகசங்கள் நிகழ்த்துவார்
சர்க்காரிடம் பயந்துவாலை ஆட்டுவார்
சாதிமதம் மோசமென்று பேசுவார்-சொந்த
சாதிக்குள்ளே மாப்பிள்ளையை தேடுவார்
அக்கா தங்கை உறவுசொல்லிக் கொஞ்சுவார்
அதிகாரம் கிடைத்தபின்னே மிஞ்சுவார்
நகரத்துல கூடும்போது சாதிஇல்லைதான்
நடுத்தெருவுல பேசும்போது பேதமில்லைதான்
கூட்டம்முடிஞ்சு திரும்பும்போது தெரியுதே
ஊருசேரி பாதைவேறாய் பிரியுதே
கோஷம்போட்டு கொடிப்பிடிப்பது சேரிப்பெண்டுக
கூட்டத்துக்கு ஆள்சேர்ப்பது சேரிப்பெண்டுக
போட்டோவுக்கு போஸ்கொடுப்பது சேரிப்பெண்டுக-ஒரு
டாட்டாகாட்டி பேரெடுப்பது ஊருமாமிங்க.
கால்நடைப்போல் சேரிப்பெண்கள் வீதியில்
காரில்வரும் ஊருப்பெண்கள் மேடையில்



படிப்பகம்

www.padippkam.com

காசுபண்ணும்
கையைத்தட்டி
தாய்மொழியில்
தந்தைமொழியில்
சாப்பாடெல்லாம்
சந்தையிலே
தலித்பெண்கள்
இயக்குவதோ
சிரித்துப்பேசி
சேரிப்பெண்கள்
சின்னப்பிள்ளை
செய்யும்சேவை
வறுமைஒழிப்பு
வட்டிக்கடையை
பரச்சியென்று
பண்டுவாங்க
அடையாளத்தை
அடிமைக்கு
சங்கம்வச்சா
சந்தேகப்பட
சேரிப்பெண்கள்
அறிவுரைப்படி

மாமிகளின்
ஏமாறுதே
வெளிப்படையாய்
ரகசியமாய்
ஒரேதட்டில்
சாதிக்கில்லை
தலைமையிலே
சாதிஇந்துப்
சூழ்ச்சிசெய்யும்
ரத்தம்குடிக்கும்
சேரிப்பிள்ளை
சிறுசேமிப்பு
திட்டங்களை
சின்னப்பிள்ளை
வெளியில்சொன்னா
மட்டும்சாதி
மறைத்துவாழும்
மகளாக
சங்கடங்கள்
தேவையில்லை
மொத்தசக்தி
வெடிக்கிடங்காய்

தந்திரம்
தலித்சனம்
சேரிப்பெண்டுக
ஊருமாமிங்க
சமத்துவம்தாங்க
வேறுபாடுங்க
பேரணி-அதை
பெண்மணி
மாமிகள்
அட்டைகள்
உண்மைதான்-அது
எண்ணமாம்
ஒழிச்சது-அரசு
நடத்தது.
கசக்குமாம்
இனிக்குமாம்
சோதரியே-ஒரு
பிறந்தவள்நீயே.
தீரும்தான்-இதில்
யாரும்தான்
திரளணும்-அம்பேத்கர்
மாறணும்.

நன்றி - களம்





Printed by Bharani Offset Printers and Published by Audrey Jannet Joseph and Owned b Audrey Jannet Joseph and Printed at 77 Venkatathiri St., Kosapet, Chennai-12 and Published fro 2/206 Pandian Salai, Canalpuram Road, Neelangarai, Chennai -41. Editor : Audrey Jannet Josep

படிப்பகம்

www.padippkam.com

# EXIL

## அன்பளிப்பு :

| | | | |
|---|---|---|---|
| பிரதி ஒன்று | : | 20 | பிராங்குகள் |
| வருடம் | : | 100 | பிராங்குகள் (தபால் செலவு உட்பட) |

**காசோலைகள் அனுப்பவேண்டிய வங்கியும் இலக்கமும்**

B.N.P
ASSOCIATION EXIL
00345/100241-65

## தொடர்புகட்கு:

EXIL
B.P.-204
92604 ASNIERES CEDEX
FRANCE

E-MAIL : exil-inba@infonic.fr

No d' enreg : 13022670

படிப்பகம்

www.padippkam.com




படிப்பகம்